உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 02 திங்கட்கிழமை (16.05.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 171



03
ஆடத்தெரியாதவனுக்கு மேடை சரியில்லை



16
வெள்ளைக்கொடிக்கு நடந்த கதி

**தேர்த்திருவிழா சிறப்பிதழ்கள்**
* ஸ்ரீ வள்ளி தேவ சேனா சமேத சிவ சுப்பிரமணிய கதிர் வேலாயுத சுவாமி தேவஸ்தானம் (6 ஆம் பக்கம்)
* கிராஞ்சியம்பதி ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோயில் (12A பக்கம்)
* கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயம் (12 B பக்கம்)
* பறாளாய் அருள் மிகு ஸ்ரீ சிவசுப்பிர மணிய சுவாமி தேவஸ்தானம் (20 A பக்கம்)
* கும்பிட்டான் புலம் கற்பக விநாயகர் ஆலயம் (20 B பக்கம்)

# நிபுணர் குழு அறிக்கை குறித்து இந்தியாவுடன் இன்று முக்கியபேச்சு

## பீரிஸ் தலைமையிலான குழு நடத்தும்



புதுடில்லி, மே 16

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாட்டை அறிந்துகொள்ளும் முக்கிய பேச்சை இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இன்று இந்திய உயர்மட்டத்துடன் நடத்தவிருக்கின்றார்.

ஐ.நாவின் நிலைப்பாட்டுக்கு எதிராக இந்தியாவின் நிலைப்பாடு அமையவேண்டும் என அமைச்சர் பீரிஸ் இந்தியாவிடம் கோரவிருக்கிறார். (29 ஆம் பக்கம் பார்க்க)

## நிபுணர் குழு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு

# இலங்கைக்கு எதிராக 30 நாடுகளில் வழக்கு; புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மும்முரம்

கொழும்பு, மே 16

நிபுணர் குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 30 நாடுகளில் இலங்கைக்கு எதிராக வழக்குகளைத் தாக்கல் செய்ய புலம் பெயர் தமிழ் அமைப்புகள் தயாராகி வருகின்றன என நம்பிக்கையான தகவல்கள் கிடைத்துள்ளன.

- இவ்வாறு சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

விடுதலைப் புலிகள் அமைப்பின் நிதிப் பிரிவு முற்றாகச் செயல் இழந்துள்ள நிலையிலும், ஆயிரக்கணக்கான அமெரிக்க டொலர்களைச் செலவிட்டு மேற்கு மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சில ஆசிய நாடுகளிலும் இவ்வாறு வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

இலங்கையின் முக்கிய அரசியல்வாதிகள் மற்றும் பாதுகாப்புப் படை முக்கியஸ்தர்கள் ஆகியோரைச் சட்டச் சிக்கல்களுக்கு உள்ளாக்குவதே இதன் நோக்கமாகும். (32 ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தரப்பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியிலிருந்து விலகுவோம் - விரிவுரையாளர்கள் எச்சரிக்கை

கொழும்பு, மே 16

தமது சம்பள உயர்வுப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காவிடின் எதிர்வரும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை திருத்தும் நடவடிக்கைகளில் இருந்தும் விலகப் போகின்றனர் என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

விரிவுரையாளர்களின் சம்பள உயர்வுப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காத பட்சத்தில் தொடர்ந்தும் தமது தொழிற் சங்க நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவுள்ளனர் என்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(29 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழக முதலமைச்சராக இன்று பதவி ஏற்கின்றார் ஜெயலலிதா



சென்னை, மே 16

தமிழக முதலமைச்சராக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா இன்று நண்பகல் 12.15 மணிக்கு பதவி ஏற்கின்றார்.

தமிழகத் தேர்தலில் 160 தொகுதிகளில் போட்டியிட்ட அ.தி.மு.க. 147 தொகுதிகளைக் கைப்பற்றியது. அ.தி.மு.கவும் அதனுடன் இணைந்து போட்டியிட்ட கூட்டணிக் கட்சியினரும் 234 தொகுதிகளில் 203 தொகுதிகளைக் கைப்பற்றியுள்ளனர்.

ஆளும் கட்சியாகவும், அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எதிர்க்கட்சியாகவும் இருந்த கலைஞர் கருணா நிதி தலைமையிலான தி.மு.க. இந்தத் தேர்தலில் எதிர்க்கட்சி அந்தஸ்தையும் நடிகர் விஜயகாந்தின் தே.தி.மு.கவிடம் பறி கொடுத்துள்ளது.

விஜயகாந்த் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி ஏற்க உள்ளார்.

நேற்றுக்காலை அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தக் கட்சி எம். எல்.ஏக்களின் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் ஜெயலலிதாவை அ.தி.மு.க. சட்டப் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (32 ஆம் பக்கம் பார்க்க)

# 12 புலிகள் நாட்டைவிட்டு வெளியேற நோர்வே தூதரகம் உதவியதா?

## ஊடகச் செய்திகளுக்கு மறுப்பு

கொழும்பு, மே16

தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் 12 பேர் நாட்டை விட்டு வெளியேறிச் செல்வதற்கு இலங்கைக்கான நோர்வேத் தூதரக அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்கினார்கள் என்று வெளியாகி இருக்கும் செய்திகளில் உண்மை இல்லை என இலங்கைக்கான நோர்வேத் தூதரகம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

நோர்வேயில் இருந்து பிரசுரமாகும் 'அப்டன் பொஸ்டன்' என்ற பத்திரிகையில் வெளியான செய்தி பிழையான முறையில் மொழிபெயர்க்கப்பட்டு இலங்கை ஊடகங்களில் (29 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு எதிராக லண்டனில் ஆர்ப்பாட்டம்

லண்டன், மே 16

இலங்கை கிரிக்கெட் அணியைப் புறக்கணிக்கக் கோரி லண்டனில் சனிக்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

தமிழர்களைக் கொன்று குவித்து, மனிதமே அஞ்சும் அளவுக்கு இனப்படுகொலையை மேற்கொண்ட இலங்கை அரசைத் தண்டிக்கும்படி திரண்டிருந்த மக்கள் கோஷம் எழுப்பினர். சுலோகங்கள் எழுதப்பட்ட அட்டைகளையும் அவர்கள் ஏந்தி நின்றனர்.

லண்டனில் உள்ள கேட்டிங்வே என்ற இடத்தில் அமைந்துள்ள கிரிக்கெட் மைதானத்தில் பயிற்சிப் போட்டியில் இலங்கை கிரிக்கெட் அணியினர் கலந்து கொண்டனர். அந்த மைதானத்துக்கு முன்பாக, (29 ஆம் பக்கம் பார்க்க)

# 70 வீத சாட்சியங்களை ஆராய்வதற்காக நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆயுள் நீடிப்பு

கொழும்பு, மே 16

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் காலம் மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்பட்ட சாட்சியப் பதிவுகளில் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைக்காக 30 சதவீதமானவையே ஆராயப்பட்டுள்ளன. எஞ்சிய 70 வீதமான சாட்சியங்களை ஆராய்ந்து இறுதி அறிக்கை தயாரிப்பதற்காகவே நல்லிணக்க ஆணைக்குழுவின் காலம் மேலும் ஆறு மாத காலத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நீடிக்கப்பட்டுள்ளது என்று நல்லிணக்க ஆணைக் குழுவின் ஊடக இணைப்பாளர் லக்ஷ்மன் விக்ரமசிங்க நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்பட்ட சாட்சியப் பதிவுகளில் நல்லிணக்க ஆணைக் குழுவின் இறுதி அறிக்கைக்காக 30 சத வீதமானவையே (29 ஆம் பக்கம் பார்க்க)

# நாமலின் செயலர் வீடு மீது சூடு!

கொழும்பு, மே 16

அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் ஒருங்கிணைப்புச் செயலாளரின் வீட்டின் மீது நேற்று (32 ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டைப் பிளவுபடுத்த எந்தச் சக்திக்கும் இடமளிக்க மாட்டோம்; பஸில் சூளுரை

கொழும்பு, மே 16

ஆயுதங்களால் நாட்டைப் பிளவுபடுத்த பயங்கரவாதத்துக்கு இடமளிக்காத நிலையில், வேறு எந்த முறைகளாலும் நாட்டைப் பிளவுபடுத்த வாய்ப்பளிக்கப் போவதில்லை என்று அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பதுளை - ஹல்துமுல்லை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியினதும், அவரது குடும்பத்தினரதும் சுதந்திரத்தை இல்லாதொழிக்க சில வெளிநாட் (29 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுச்சியுடன் பஞ்சாப்பின் பயணம்

- டிலீப் -

மாலுமி இல்லாத படகு எவ்வாறோ அவ்வாறே சேவாக் இல்லாத டெல்லி அணியின் நிலையும் இருக்கின்றது. ஏற்கனவே அடுத்த சுற்றுக்கு தெரிவாகும் வாய்ப்பை இழந்த நிலையில் பஞ்சாப் அணியுடன் நேற்றைய ஆட்டம் நடந்தது.

ஐ.பி.எல் தொடரின் 60 ஆவது ஆட்டம் பஞ்சாப்பில் நேற்று நடந்தது. கில்கிறிஸ்ட் தலைமையில் பஞ்சாப் அணியும் ஹோப்ஸ் தலைமையில் டெல்லி அணியும் களமிறங்கின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடுவதற்கு தீர்மானித்தது.

பஞ்சாப் அணியின் சார்பில் வல்த்தாட்டி - கில்கிறிஸ்ட் ஆகியோர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர். நான்காவது ஓவரில் வல்த்தாட்டி ஒரு ஓட்டத்தை பெற்ற நிலையில் கொடுக்கப்பட்ட பிடியினை ராவ் தவறவிட்டார். ஆரம்பத்திலேயே கில்கிறிஸ்டின் விக்கெட்டினை வீழ்த்தியது டெல்லி அணி. 9 பந்துகளில் 2 பவுண்டரிகள் அடங்கலாக 9 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து வந்தார் மார்ஷ். இணைந்தார் வல்த்தாட்டியுடன்.

தொடங்கியது புதிய இணைப்பாட்டம். வீறு கொண்டெழுந்தது பஞ்சாப். விளாசித் தள்ளியது டெல்லியின் பந்து வீச்சை. ஹோப்ஸ் வீசினார் பதினொராவது ஓவர். வல்த்தாட்டியின் துடுப்பு குவித்தது ஓட்டங்கள். அடித்தார் 50 ஓட்டங்கள். சந்தித்தது 38 பந்து வீச்சுக்கள். அந்த ஓவரில் அள்ளி வழங்கினார் ஹோப்ஸ் 18 ஓட்டங்கள்.

சுழற்றினார் ஸ்ரீராம். மார்ஷ் வெளுத்தார் 25 ஓட்டங்கள். ஒரே ஓவரில் தாரை வார்த்தார் ஸ்ரீராம். இரண்டாவது இணைப்பு 100 ஓட்டங்களை 61 பந்துகளில் பூர்த்தி. டெல்லியின் பந்து வீச்சு மாற்றம். அதிரடிகளை சகிக்காத டெல்லி அழைத்தது பதானை. வந்தவர் வழியனுப்பினார் மார்ஷ், வல்த்தாட்டியை. அடுத்தடுத்து பவிலியனுக்கு திரும்பினர். ஆட்டத்தின் திருப்பம் இது. 28 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் அடங்கின 46 ஓட்டங்களுள். இது மார்ஷின் அதிரடி. வல்த்தாட்டி 50 பந்துகள் சந்திப்பு. 62 ஓட்டங்கள் பெற்றுக் கொடுப்பு. 3 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகள் வல்த்தாட்டி துடுப்பில் பட்டு பறந்தவை.

பின்வரிசை கை கொடுக்கவில்லை முன்வரிசைக்கு இணையாக. கார்த்திக் தப்பிப் பிழைத்து நின்றதால் இயலுமானவரை ஓட்டங்கள் குவிப்பு. 19 பந்துகளில் 27 ஓட்டங்கள்.

இருபது ஓவர்கள் முடிவுக்கு வந்தன. பஞ்சாப் பெற்றுக் கொண்டது 170 ஓட்டங்கள். இழந்தது 6 விக்கெட்டுக்கள். இர்பான் பதான் கைப்பற்றினார் 3 விக்கெட்டுக்கள்.

டெல்லிக்கு முதலாவது ஓவரிலேயே உதிரிகளால் தாரை வார்க்கப்பட்டது ஓட்டங்கள். நமன் ஓஜா - டேவிட் வோர்னர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள். ஆறாவது ஓவர் வீசினார் சிறீ வாஸ்ரவா. வாங்கிக்கட்டினார் நமன் ஓஜாவிடம். அதிரடியில் அடங்கியிருந்த டெல்லிக்கு வாய்த்தது ஓவர். வெளுத்தார் சிக்ஸர், பவுண்டரிகள். வருடி எடுத்தனர் 17 ஓட்டங்கள் அந்த ஓவரில். 43 பந்துகளில் 50 ஓட்டங்கள் முதல் விக்கெட்டுக்கு பூர்த்தி. வீழ்ந்தது விக்கெட் எட்டாவது ஓவரில். வெளியேற்றப்பட்டார் ஓஜா. 28 பந்துகளில் 2 சிக்ஸர்கள், பவுண்டரிகள் அடங்கின அவரது 28 ஓட்டங்களுள். மீண்டும் 10 ஆவது ஓவரை வீசினார் சிறீவாஸ்ரா. சரித்தார் வோனரின் விக்கெட்டை. விழந்தார் வோனர் 29 ஓட்டங் களுடன். அடுத்து வந்த வேணுகோபால் ராவ் 13 பந்துகளில் 16 ஓட்டங்கள். மத்தியவரிசை பணிந்தது பஞ்சாப்பிடம். சடுதியாய் சரிந்தது விக்கெட்டுக்கள். பின்வரிசை பெற்றுக் கொடுத்தது இரட்டை இலக்க ஓட்டங்கள். இறுதியாய் இருபது ஓவரில் பெறப்பட்டது 141 ஓட்டங்கள். இழந்தது எட்டு விக்கெட்டுக்கள். உதிரிகளாய் வழங்கப்பட்டது 12 ஓட்டங்கள்.

பந்து வீச்சில் சாவ்லா எடுத்தார் 3 விக்கெட்டுக்கள். கொடுத்தது 16 ஓட்டங்கள். முடிவில் 29 ஓட்டங்களால் வெற்றி பஞ்சாப் வசம். ஆட்டநாயகனாய் வலம் வந்தார் சாவ்லா.




- கார்த்திக் -

- நமன்ஓஜா -




## DLF LEAGUE அணிகளின் நிலைகள்...

| அணி | M | W | L | T | N/R | Net/R/R | P |
|---|---|---|---|---|---|---|---|
| றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் | 12 | 08 | 03 | 0 | 1 | + 0.849 | 17 |
| சென்னை சூப்ப கிங்ஸ் | 12 | 08 | 04 | 0 | 0 | + 0.544 | 16 |
| மும்பை இந்தியன்ஸ் | 12 | 08 | 04 | 0 | 0 | + 0.245 | 16 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 12 | 07 | 05 | 0 | 0 | + 0.403 | 14 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 12 | 07 | 05 | 0 | 0 | - 0.183 | 14 |
| கொச்சி ருஸ்கேர்ஸ் | 13 | 06 | 07 | 0 | 0 | - 0.186 | 12 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 13 | 05 | 07 | 0 | 1 | - 0.969 | 11 |
| புனே வாரியர்ஸ் | 11 | 04 | 07 | 0 | 0 | - 0.003 | 08 |
| டெக்கான் சார்ஜஸ் | 12 | 04 | 08 | 0 | 0 | - 0.117 | 08 |
| டெல்லி டெயாடெவில்ஸ் | 13 | 04 | 09 | 0 | 0 | - 0.448 | 08 |

# ஓட்ட மழை பொழிந்தது கொச்சி

- அருண்மொழி -

ஐ.பி.எல்லின் 61 ஆவது ஆட்டத்தில் கொச்சி ருஸ்கேர்ஸ் அணியும், ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் நேற்று மோதிக்கொண்டன. ஏற்கனவே அடுத்த சுற்றுக்குத் தகுதியை இழந்த நிலையில் கொச்சி அணி இந்த ஆட்டத்தில் நேற்று மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொச்சி அணியின் தலைவர் மஹேல ராஜஸ்தான் அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார்.

ஆரம்பம் சற்று பரவாயில்லாமல் இருந்தது ராஜஸ்தானுக்கு. பசால் - ராவிட் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர். முதல் மூன்று ஓவர்களும் ராஜஸ்தானின் பக்கமே இருந்தது. ஆர்.பி. சிங் வீசிய மூன்றாவது ஓவரின் இறுதிப் பந்தில் ராஜஸ்தானை பிடித்துக் கொண்டது சனியன். சரியத் தொடங்கியது ராஜஸ்தானின் விக்கெட்.

15 பந்துகளில் 16 ஓட்டங்களைப்பெற்ற நிலையில் ஆர்.பி.சிங்கின் பந்து வீச்சில் பசால் ஆட்டமிழந்து வெளியேறி னார். அடுத்த ஓவரை சிறீசாந் வீச அந்த ஓவரின் முதலா வது பந்து வீச்சிலேயே ராவிட் ஒரு ஓட்டத்துடன் ஆட் டமிழந்து வெளியேறினார்.

தொடர்ந்து வொட்ஸன் நிலைத்து நின்றாட மறுமுனையில் களமிறங்கிய ரஹானே 8 ஓட்டங்களுடன் சிறீசாந் பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார். அதன் பின்னர் மெனேரியா - வொட்ஸன் இருவரும் அணியை சரிவுகளிலிருந்து மீட்பதற்காக போராடினர். 26 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்கள் என்ற நிலையிலிருந்த ராஜஸ்தான் அணியை மெல்ல மீட்டது இந்த இணைப்பாட்ட ஜோடி. 47 பந்துகளில் ராஜஸ்தான் அணி 50 ஓட்டங்களைப் பூர்த்தி செய்தது. நான்காவது விக்கெட்டுக்காக 37 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் வொட்ஸனின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. 13 பந்து வீச்சுக்களில் 3 சிக்ஸர்கள் அடங்கலாக 20 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பரமேஸ்வரன் பிரசாந்தின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

மெனேரியா மறுமுனையில் நிலைத்து நின்றார். மறுமுனையில் விக்கெட்டுக்கள் சீராய் வீழ்ந்து கொண்டிருந்தது. பினல் சா 5 ஓட்டங்களுடனும், ஜேக்கப் ஓரம் ஓட்டமெதனையும் பெறாத நிலையிலும், வோர்ன் 2 ஓட்டங்களுடனும், சவான் 1 ஓட்டத்துடனும் ஆட்டமிழந்து வெளியேறினர். தனித்து நின்ற மெனேரியா 28 பந்துகளில் ஒரு சிக்ஸர், 3 பவுண்டரிகளுடன் 31 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் 18.3 பந்து வீச்சுக்களில் 97 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பந்து வீச்சில் ஹொஜ் 4 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பரமேஸ்வரன் பிரசாந், சிறீசாந் இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்டத் தொடங்கியது கொச்சி அணி. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக பிரன்டன் மக்கலம் - மஹேல ஜெயவர்த்தன இருவரும் களமிறங்கினர். முதலாவது ஓவரை ரைட் வீசினார். இரண்டாவது பந்தை முறையற்ற பந்தாக வீசினார் ரைட். அதற்கு கிடைத்த "பிறி கிற்"ரைப் பயன் படுத்தி மக்கலம் அடித்தார் சிக்ஸர். அடுத்த பந்தில் ஒரு பவுண்டரி. நான்காவது பந்தில் மக்லத்துக்கு இரண்டாவது வாழ்வு கிடைத்தது. ஆட்டமிழந்து வெளியேறியவர் மீண்டும் அழைக்கப்பட்டு ஆட்டத்தை தொடர்ந்தார். வந்தவர் ராஜஸ்தானை விட்டு வைக்கவில்லை. [illegible] மக்கலத்தின் [illegible] வெளியேறியது. மூன்றாவது பந்தில் 6 ஓட்டங்களுடன் மஹேலவின் ஆட்டம் முடிவை எட்டியது. அந்த ஓவரின் இறுதி இரண்டு பந்துகளும் மீண்டும் சிக்கின மக்லத்திடம். அடித்தார் இரண்டு சிக்ஸர்கள். மூன்றாவது ஓவரை ரைட் வீசினார். அந்த ஓவரில் பட்டேலின் துடுப்பில் பட்டு பறந்தது சிக்ஸர். நான்காவது ஓவரின் முதலாவது பந்து வீசினார் டொஸி. வெளியேறினார் மக்கலம். 12 பந்துகளில் 4 சிக்ஸர்கள், ஒரு பவுண்டரி அடங்கலாக பெறப்பட்டது 29 ஓட்டங்கள்.

பிரட் ஹொஜ் அடுத்து களமிறங்கினார். வந்த வேகத்தில் டொஸி ஓவரில் பவுண்டரி விளாசினார். 25 பந்துகளில் கொச்சி அணி 50 ஓட்டங்களைக் கடந்தது.

கொச்சியின் வேகமான ஓட்டக் குவிப்பின் முன்னால் தாக்குப்பிடிக்கத் திணறியது ராஜஸ்தானின் பந்து வீச்சு. இறுதியில் 7.2 பந்து வீச்சுக்களில் இரண்டு விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. ஹொஜ் 17 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் அடங்கலாக 33 ஓட்டங்களையும், 12 பந்துகளில் 20 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றுக் கொடுத்தனர். ஆட்டநாயகனாக ஹொஜ் தெரிவு செய்யப்பட்டார்.

### இன்றைய ஆட்டம்

- புனே வாரியர்ஸ் எதிர் டெக்கான் சார்ஜஸ் (இரவு 8 மணி)

### அதிகூடிய ஓட்டம்

- வல்த்தாட்டி – பஞ்சாப் (12 ஆட்டங்கள் 438 ஓட்டங்கள்)
- கெயில் – பெங்களூர் (7 ஆட்டங்கள் 436 ஓட்டங்கள்)
- சேவாக் – டெல்லி (11 ஆட்டங்கள் 324 ஓட்டங்கள்)

### அதிகூடிய விக்கெட்டுக்கள்

- மலிங்க – மும்பை (12 ஆட்டங்கள் 27 விக்கெட்டுக்கள்)
- முனாப் பட்டேல் – மும்பை (12 ஆட்டங்கள் 17 விக்கெட்டுக்கள்)
- பொலஞ்சர் – சென்னை (9 ஆட்டங்கள் 14 விக்கெட்டுக்கள்)

DLF INDIAN PREMIER LEAGUE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாகிஸ்தானை பழிதீர்த்தது மே.தீவுகள்

பாகிஸ்தான் அணிக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் 40 ஓட்டங்களால் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றி பெற்றது.

முன்னதாக நாணயச் சுழற்றியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணி தனது முதலாவது இன்னிங்ஸிற்காக 226 ஓட்டங்களைப் பெற்றுச் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. அந்த அணி சார்பில் சிமொன்ஸ் 49 ஓட்டங்களையும் சந்திரபோல் 27 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக அஜ்மல் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி மேற்கிந்தியத் தீவுகளின் பந்து வீச்சைச் சமாளிக்க முடியாது 160 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் அப்துல் ரஹ்மான் ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்களையும் அஸார் அலி 34 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் பிஸ்ஸு 4 விக்கெட்டுக்களையும் ராம்போல் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

66 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸைத் தொடர்ந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி அஜ்மலின் சிறப்பான பந்துவீச்சில் 152 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் சந்திரபோல் 36 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுக் கொடுத்தார். உதிரிகளாக 27 ஓட்டங்கள் கிடைக்கப் பெற்றன.

சயிட் அஜ்மல் 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். 218 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாட ஆரம்பித்த பாகிஸ்தான் அணி ஆரம்பத்தில் தனது விக்கெட்டுக்களை வேகமாக இழந்தது. ஒரு கட்டத்தில் 2 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்திருந்தது. பின்னர் ஜோடி சேர்ந்த அஸாட், மிஸ்பா இருவரும் அணியைச் சரிவில் இருந்து மீட்டனர்.

நேற்று தனது ஆட்டத்தைத் தொடர்ந்த பாகிஸ்தான் அணி ஆரம்பத்திலேயே அரைச் சதம் கடந்த நிலையில் மிஷ்பாவின் விக்கெட்டை இழந்தது. தொடர்ந்து அஸாட் சபீக் 42 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். பின்வரிசை வீரர்களில் உமர் அக்மல் மட்டும் தனித்து நின்று போராடி 47 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

முதலாவது இன்னிங்ஸில் சிறப்பாகச் செயற்பட்ட ரகுமான் இரண்டாவது இன்னிங்ஸில் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இறுதியில் 178 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் பாகிஸ்தான் அணி இழந்தது.

பந்துவீச்சில் சமி 5 விக்கெட்டுக்களையும் ராம்போல் 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக சமி தெரிவு செய்யப்பட்டார்.

இதன்மூலம் இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 1- 0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. (15)



# ஆடத் தெரியாதவனுக்கு மேடை சரியில்லை

ஐ.பி.எல் 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி 10 ஓட்டங்களில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியிடம் தோற்றது. முதலில் விளையாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி 6 விக்கெட் இழப்புக்கு 135 ஓட்டங்கள் எடுத்தது. அணித்தலைவர் சங்கக்கார, தவான் அதிகபட்சமாக தலா 27 ஓட்டங்கள் எடுத்தனர். குல்கர்னி 3 விக்கெட்டுக்கள் எடுத்தார்.

பின்னர் ஆடிய மும்பை இந்தியன்ஸ் அணியால் 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 125 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. அணித்தலைவர் டெண்டுல்கர் அதிகபட்சமாக 37 ஓட்டங்கள் எடுத்தார். டெக்கான் தரப்பில் ஆனந்த்ராஜன் 3 விக்கெட்டுக்களும், இசாந்த் சர்மா 2 விக்கெட்டுக்களும் கைப்பற்றினார்கள். இது மும்பை இந்தியன்ஸ் சந்தித்த 4 ஆவது தோல்வியாகும். அந்த அணி ஏற்கனவே கொச்சி, ராஜஸ்தான், பஞ்சாப் அணிகளிடம் தோற்று இருந்தது. டெக்கான் அணி பெற்ற 4 ஆவது வெற்றியாகும்.

அந்த அணி ஏற்கனவே அடுத்த சுற்றுக்கு தகுதி பெறும் வாய்ப்பை இழந்துவிட்டது. 8 புள்ளிகளுடன் அந்த அணி 9 ஆவது இடத்தில் உள்ளது. இந்த தோல்வியால் டெண்டுல்கர் மிகுந்த ஏமாற்றம் அடைந்துள்ளார். ஆடுகளம் குறித்து அவர் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

ஆடுகளத்தில் பந்தை இறுக்கி பிடிப்பது கொஞ்சம் சிரமமாக இருந்தது. ஆனால் எங்களுக்கு ஏற்ற வகையில் நாங்கள் விரும்பிய வகையில் ஆடுகளம் இல்லை. டெக்கான் அணி துடுப்பெடுத்தாடிய போது 19 ஓவர்கள் வரை ஓட்டங்களை கட்டுப்படுத்தி வைத்திருந்தோம். கடைசி ஓவரில் தான் அதிகமான ஓட்டங்கள் சென்று விட்டது. கடைசி நேரத்தில் பொலார்ட்டும், ஹர்பஜனும் நெருக்கி கொண்டு வந்தார்கள். ஆனால் முடியாமல் போனது. எங்களது பந்து வீச்சு சரியாக அமையவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

மும்பை இந்தியன்ஸ் 13 ஆவது லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியை 20 ஆம் திகதி சந்திக்கின்றது. டெக்கான் சார்ஜர்ஸ் அணி அடுத்த ஆட்டத்தில் புனே வாரியர்சை இன்று சந்திக்கின்றது. (15)



# பயிற்சியாளருடன் கருத்துவேறுபாடு இல்லை

- சாய்னா நோவல்

பயிற்சியாளர் கோபிசந்துடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதாக வெளியான செய்தியை இந்திய பட்மின்ரன் வீராங்கனை சாய்னா நேவல் மறுத்துள்ளார்.

எங்களுக்குள் எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. அவ்வாறு கூறப் படுவது தவறானது. அவர் தேசிய பயிற்சியாளராக இருப்பதால் நான் பயிற்சியில் ஈடுபடும் எல்லா நேரங்களிலும் என்னோடு இருக்க முடியாது. அதனாலேயே நான் பாஸ்கர் பாபுவுடன் இணைந்து பயிற்சியில் ஈடுபட முடிவு செய்துள்ளேன் என்று கூறியுள்ளார்.

மலேசிய திறந்த பட்மின்ரன் போட்டியின் இறுதிச் சுற்றுக்கு முன்னேறிய சாய்னா அந்த ஆட்டத்தில் சீன வீராங்கனை ஜின் வாங்கிடம் தோற்றார். அது குறித்துப் பேசிய அவர், 'மலேசிய திறந்த பட்மின்ரன் போட்டியில் எனது விளையாட்டில் எனக்கு முழு திருப்தியே'' என்றார்.

டெல்லியில் நடைபெற்ற திறந்த தொடர் பட்மின்ரன் குறித்துப் பேசிய அவர் 'சொந்த மண்ணில் விளையாடியதால் நெருக்கடி காரணமாக முதல் சுற்றிலேயே வெளியேற நேர்ந்தது. நான் மிகுந்த நம்பிக்கையோடே விளையாடினேன். அந்த நாள் என் வாழ்க்கையின் மோசமான நாள்'' என்றார்.

முன்னதாக சாய்னாவின் கவனம் விளையாட்டிலிருந்து சிறிது விலகிவிட்டதாக கோபிசந்த் கருதுகிறார். அதனால் சாய்னாவின் விளையாட்டில் அவருக்கு திருப்தியில்லை செய்திகள் வெளியானது குறிப்பிடத்தக் (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2600 ஆவது பௌத்த ஆண்டில் வெகுசிறப்பாக கொண்டாடப்படும் வெசாக்

## நாளை நாடு முழுவதும் விசேட அனுஷ்டானங்கள்

ஆண்டு தோறும் வைகாசி மாதத்திலே வரும் பௌர்ணமி தினத்தில் வெசாக் கொண்டாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

கௌதம புத்தரின் பிறப்பு, ஞானம், பரிநிர்வாணம் என்பன இந்தத் தினத்திலேயே இடம்பெற்றமையால் உலகெங்கிலும் பரந்து வாழும் பௌத்தர்கள் இந்த நாளைச் சிறப்பாக கொண்டாடி வருகின்றனர்.

ஆனால், இந்த ஆண்டின் வெசாக் தினத்துக்கு இன்னொரு முக்கியமான விடயமும் மெருகூட்டுகின்றது. பௌத்த ஆண்டின் 2600ஆவது ஆண்டு இந்த ஆண்டின் வெசாக் தினத்தன்று நிறைவு பெறுவதே அதுவாகும்.

இந்த உலகிலேயே தற்போது உண்மை, அன்பு, அருள் என்பன மறைந்து அநியாயம் தலையெடுத்து ஆட்சி புரிகின்றது. கௌதம புத்தரின் போதனைகளை இந்த உலகம் சரிவரக் கடைப்பிடிக்குமாயின் பூகம்பம், சுனாமி போன்ற அனர்த்தங்கள் தோன்றியிருக்கமாட்டா என்பதே அனைவரது நம்பிக்கையாகும்.

நேபாளத்தின் மலையடிவாரத்தில் உள்ள லும்பினி என்னும் இடத்திலே கிறிஸ்து பிறப்பதற்கு 563 ஆண்டுகளுக்கு முன்னர் கபிலவஸ்து நாட்டின் அரசனான சுத்தோதனனுக்கும் மகாராணி மகாமாயாதேவிக்கும் கௌதம புத்தர் பிறந்தார். இவருக்குப் பெற்றோர்கள் இட்ட பெயர் சித்தார்த்தன் என்பதாகும்.

சிறுபராயம் முதலே சித்தார்த்தன் மிகவும் இளகிய மனமுள்ளவராக இருந்தார். பிறர் வருந்துவதை அவரால் பார்த்துக் கொண்டிருக்க முடிவதில்லை. இளவயதிலே அரச குமாரனுக்கு ஏற்ற வித்தைகள் அனைத்தையும் சித்தார்த்தன் கற்று முடித்தார். இவருக்கு 16 வயது நிறைந்த போது யசோதரையைத் திருமணம் செய்தார். சுத்தோதன மன்னன் தனது புத்திரனுக்கு சகல அரச போகங்களையும் அனுபவிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தான். ஆனால், உலக வாழ்வின் இன்பங் களின் பால் சித்தார்த்தனின் மனம் செல்லவே இல்லை.

### சித்தார்த்தனில் மாற்றம்

சித்தார்த்தன் மூன்று வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அரண்மனைக்கு வெளியே செல்ல வேண்டிய வாய்ப்புக் கிடைத்தது.

முதலில் ஒரு முதியவனை இனங் கண்டார். ஒருநாள் தமக்கும் இந்த நிலை வந்துவிடும் என்பதை சித்தார்த்தன் உணர்ந்து கொண்டார். அடுத்த தடவை ஒரு நோயாளியையும், பின்னர் ஒரு பிணத்தையும் கண்டார். உலகின் உண்மையான நிலையை உணர்ந்து கொண்டார். அன்று முதல் சித்தார்த்தன் எப்பொழுதும் சிந்தனையில் மூழ்கலானார். இந்த நிலையில் சித்தார்த்தனுக்கு ஆண் மகவு பிறந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், இதில் எல்லாம் சித்தார்த்தனின் மனம் பதியவில்லை.

அரச போகத்தையும் அழகிய மனைவியையும் ஏழுநாளேயான சிறு பாலகனையும் பிரிந்து சித்தார்த்தன் தவம் இயற்றக் கிளம்பினார். ஆறு, ஏழு ஆண்டுகள் கடும் தவமியற்றியும் சித்தார்த்தனால் உலகின் துயரங்களைப் போக்குவதற்கு வழி தெரியவில்லை.

### ஞானோதயம் பெற்றார்

ஒரு வைகாசித் திங்கள் பௌர்ணமி தினத்தன்று அரச மரத்தடியில் அமர்ந்திருந்த சித்தார்த்தனுக்கு ஞானோதயம் ஏற்பட்டது. அன்று முதல் அவர் புத்தர் என அழைக்கப்பட்டார். புத்தர் என்றால் அறிவு விளங்கப்பெற்றவர் என்பது பொருளாகும். அப்போது அவருக்கு 35 வயதுதான் ஆகிஇருந்தது. புத்த பகவான் ஒரு மாதகாலம் அந்தப் போதி மரத்தின் அடியிலேயே தியானம் இருந்தார். புத்தர் ஞானம் பெற்ற அந்த அரச மரமே பின்னாளில் போதி மரம் என அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

புத்தபகவான் வெளிநாடுகளிலும் தர்மத்தைப் பரப்பவென புத்த துறவிகளை அனுப்பி வைத்தார். இதனால் இன்று இந்தியாவை விட சீனா, ஜப்பான், கொரியா, மங்கோலியா, பர்மா, தாய்லாந்து, இந்தோனேசியா, இலங்கை முதலிய நாடுகளில் பௌத்த சமயமே மக்கள் சமயமாகத் திகழ்ந்து வருகின்றது.

புத்தபகவான் சத்தியத்தையும், அஹிம்சையையும், அன்பையும், அருளை யும், தியானத்தையும் தமது ஆயுள் முழுவதும் போதித்து வந்தார்.

### பரிநிர்வாணம் எய்தினார்

ஒரு வைகாசி பௌர்ணமி தினத்தன்று பிறந்தது போலவே கிறிஸ்து பிறப்பதற்கு முன்னர் 483ஆம் ஆண்டு வைகாசி பௌர்ணமி தினத்தன்று புத்தர் பரிநிர்வாணம் எய்தினார். அவருக்கு அப்போது வயது 80ஆகும். புத்த பகவான் தெய்வீக வாழ்க்கை உலகம் உள்ள வரை உண்மை, அருள், அன்பு ஆகியவற்றைக் கடைப்பிடிக்குமாறு வினவிக் கொண்டே இருக்கும்- தான் வாழ்ந்த புனிதமான வாழ்க்கையும் தியாகமும் அவரது ஒப்பற்ற உபதேசங்களும் நாம் அவரைக் கடவுளின் அவதாரமெனக் கருதுவதற்குக் காரணமாய் அமைந்து விட்டன.

ஓர் அரச குமாரனாகப் பிறந்து உலகின் துன்பியல் நிகழ்வுகளை நேரில் கண்டதனால் சுகபோகங்களை வெறுத்துத் துறந்து துறவியாக அலைந்து 54 ஆண்டுகளாகத் தர்மத்தைப் போதித்து பரிநிர்வாணம் அடைந்த புத்தரின் வாழ்க்கை மகத்தானது; மாசற்றது.

## கடவுளையும் களவாடிய கள்வர்கள்

கொழும்புத்துறை துண்டி வீதியில் உள்ள ஐயனார் கோயிலில் பெறுமதி மிக்க இரண்டு அம்மன் விக்கிரகங்கள் களவாடப்பட்டுள்ளன.

கடந்த புதன் கிழமை மாலையே விக்கிரகங்கள் திருடப்பட்டுள்ளனவென்று ஆலய நிர்வாக சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

குறித்த தினத்தன்று காலை 10. 30 மணிக்கு பூஜைநடைபெற்ற போது விக்கிரகங்கள் பத்திரமாக இருந்துள்ளன. எனினும் மாலை வேளை பூஜைக்காகச் சென்ற போது கதவுகள் உடைக்கப்பட்டு விக்கிரகங்களும் களவாடப் பட்டிருந்தன என்று தெரிக்கப்படுகின்றது. (8)

படிவம்
வன திணைக்களத்தின் வனவிரிவாக்கல் அதிகாரி பதவிக் கான விண்ணப்பப் படிவங்கள் விற்பனைக்கு உண்டு.
க.பொ.த. சாதாரண தரம் சித்தியடைந்த வர்கள் விண்ணப்பிக் கலாம்
முடிவு திகதி 30.06.20111
Barathi Pathippakam, 430, K.K.S Road, Jaffna

## மரண அறிவித்தல்

### திருமதி மங்கையர்க்கரசி நமசிவாயம்

(புங்குடுதீவு-05, கொக்குவில் கிழக்கு)



புங்குடுதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், தற்காலிகமாக 43/1, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கில் வசித்து வந்தவருமான திருமதி மங்கையர்க்கரசி நமசிவாயம் (14.05.2011)சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் (ஸ்தாபகர், புங்குடுதீவு சித்திவிநாயகர் மகாவித்தியாலயம், ஸ்தாபகர், புங்குடுதீவு இருபிட்டி பெரிய புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம், இயக்குநர், புளியடித்துறை- நயினாதீவு மோட்டார் படகு போக்குவரத்து சேவை, புங்குடுதீவு, இருபிட்டி உப தபாலகத்தையும் திறந்துவைத்தவர்)- வேலாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான புங்குடுதீவு 1ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆறுமுகம்(மலேசியா)- அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நா.ஆ.நமசிவாயத்தின் (புங்குடுதீவு திடீர் மரண விசாரனை அதிகாரி, சமாதான நீதிபதி, மக்கள் குழுத் தலைவர், தீவுத் தொகுதி ப.நோ.கூ. சங்கங்களின் உத்தியோகபற்றற்ற மேற்பார்வை அதிகாரி, ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர், பரீட்சைத் திணைக்களம் கொழும்பு) அன்பு மனைவியும், பிரேம்குமார்(ஓய்வு பெற்ற பிரதம எழுதுவினைஞர், புங்குடுதீவு திடீர் மரண விசாரணை அதிகாரி), சத்தியகுமார்(பிரான்ஸ்), மோகனகுமார்(பிரான்ஸ்), சுரேஷ்குமார்(முகாமைத்துவ உதவியாளர், குடிவரவு, குடியகல்வு திணைக்களம், கொழும்பு)தேவிகா(திருமண, பிறப்பு, இறப்பு பதிவாளர், புங்குடுதீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும், தேவமலர்(ஆசிரியை, கோண்டாவில் இந்து ம.வி), சிவகௌரி(பிரான்ஸ்), கலாரஞ்சி(பிரான்ஸ்), கலாராணி(ஆசிரியை, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு), ஸ்ரீகாந்தன்(நகர அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், மினாட்சி(இளைப்பாறிய ஆசிரியை, புங்குடுதீவு சித்திவிநாயகர் ம.வி), கனகரத்தினம்(இளைப்பாறிய வைத்திய அதிகாரி, வத்தேகம), பர்வதபத்தினி(பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான இலட்சுமிப்பிள்ளை, கார்த்திகேசு (வடபிராந்திய முகாமையாளர், இலங்கை பால் சபை, யாழ்ப்பாணம்), சிவகாமிபிள்ளை (மலேசியா), சோமாஸ்கந்தன்(உப. தபாலதிபர், இருபிட்டி, புங்குடுதீவு), சிவயோகம்மா, நடராசா(தலைமைப் பரிசோதகர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், யாழ். மாவட் டம்), சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் தடாதகைபிராட்டி (இளைப்பாறிய ஆசிரியை, வத்தேகம) காலஞ்சென்றவர்களான சிவகௌரி, பொன்னம்பலம்(மலேசியா), முருகேசு(உடையார் கிராமத் தலைவர், தீடீர் மரண விசாரணை அதிகாரி, சமாதான நீதிவான், புங்குடுதீவு), சிங்கராசா(FOREMAN கட்டடத் திணைக்களம், அனுராதபுரம்), சிந்துராசா (பிரபல வர்த்தகர், கொழும்பு), செல்லம்மா(கனடா), முத்துக்குமாரு(பன்னாட்டு அரச மொழி பெயர்ப்பாளர், சரவணை), ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுபராஜாவின் (மாவட்ட மேலதிக பதிவாளர், கச்சேரி, யாழ்ப்பாணம்) பெரியம்மாவும் லோகபிரசாத்(மருத்துவ பீடம், பல்கலைக்கழகம், கொழும்பு), பிரவீணா, யதுர்சன், அர்சினி, நிர்சினி, அனுசன், தனுசா, விஜித்தா, கிசாயினி, துசாயினி, சாயுகன், துஷாந், நிதுசாந் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2011) திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

43/1, சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
நமசிவாயம் பிரேம்குமார்(மகன்),
மயில்வாகனம் ஸ்ரீகாந்தன்(மருமகன்)

(4237)

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக அங்கத்தவர்களான லோகபிரசாத், யதுர்ஸன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் கழக ஆர்வலர் N.பிறேம்குமாரின் அன்புத் தாயுமாகிய திருமதி மங்கையர்க்கரசி நமசிவாயத்தின் (புங்குடுதீவு -5 கொக்குவில் கிழக்கு) பிரிவால் துயருற்றுள்ள குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மாத்தனை முருகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

சம்பியன் லேன்,
கொக்குவில்.

வளர்மதி முன்னேற்றக் கழகமும்
சனசமூக நிலையமும்.

(சி/034)

## மரண அறிவித்தல்

### கனகசூரியர் விக்னேந்திரன்

(General Manager- AL -Jabir Engineering incop.-Qatar)

(சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்)



சுழிபுரம் மேற்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த கனகசூரியர் விக்னேந்திரன் 14-05-2011 அன்று கட்டாரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசூரியர் மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் தொல்புரத்தைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான கனகசபாபதி -இராசம்மா தம்பதியரின் இளைய மருமகனும் இரஞ்சிதத்தின் அன்புக் கணவரும் விஷ்ணுகாந்தா (University of Melbourne), சஜீவன்(SRM Institute, India), சந்துரு(Manipal Institute, India) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிறீதரன் (பிரான்ஸ்), வசந்தி (ஆசிரியை, சன்மார்க்க மகாவித்தியாலயம்- யாழ்ப்பாணம்) ஆகியோரின் அருமைச் சகோதரனும் சிவராஜா (அரச நில அளவையாளர், காணிக்கிளை, மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்), மனோகரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சரோஜினிதேவி (மலேசியா) மற்றும் விஜயகுமார் (Financial Controller,சாஜா), விமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரோகினி (சாஜா), சிவனேசன் (மலேசியா), மனோகரன் (இலங்கை வங்கி, சுன்னாகம்) ஆகியோரின் சகலனும் சேயோன், மாயோன், சுருதிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பெரியதந்தையும் கிரிஷாணி (யாழ்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி உயிரியல் 2009) கஜானன், விஷாகனன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள்) தர்ஷனா, கீர்த்தனா (சாஜா) ஆகியோரின் பிரியமான மாமனும் ஜனனி (பொறியியலாளர், மலேசியா), சுதாராணி (கணக்காளர்-மலேசியா), தர்மினி (ஆசிரியை, வட்டு மத்திய கல்லூரி), சாரங்கன் (BCAS, Engineering Student, வெள்ளவத்தை) ஆகியோரின் பாசமான சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2011) திங்கட்கிழமை கட்டாரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

224/8, பிறவுண் வீதி,
(பத்திரகாளி அம்மன் ஒழுங்கை)
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(4260)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இந்த வேளையிலேனும்.... உதவக் கூடாதா இந்தியாவே?

இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போரின்போது நடைபெற்ற போர்க்குற்றங்கள் குறித்து ஆராய்வதற்காக, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான்-கீ-மூன் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில், இந்திய அரசின் அமைச்சர் பிரதானிகளுடன் பேச்சுவதற்காக, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுத் தமது பரிவாரங்களுடன் இந்தியாவுக்குப் பயணமாகிவிட்டார். இன்று பேச்சுவார்த்தை ஆரம்பமாகும் என்பது இன்றைய செய்தி.

இலங்கையின் ஆறாத புண்ணான இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு, வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குப் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வழங்க வேண்டும் என்று கொழும்பு அரசாங்கத்தை வலியுறுத்துவதற்காக இந்திய மத்திய அமைச்சின் மூவர் உயர்மட்டக் குழு ஒன்று இன்னும் சில நாள்களில் இங்கு வரவுள்ளது என்பது நேற்றைய செய்தி.

இலங்கை வரும் இந்திய அதிகாரிகளின் குழுவில், வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன், பாதுகாப்புச் செயலாளர் பிரதீப் குமார் ஆகியோர் அடங்குவர் என்றும் அவர்கள் அனேகமாக இம்மாதம் 26 ஆம் திகதி இங்கு வருவார்கள் என்பதும் பிந்திய தகவல்.

இதேவேளை, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு, தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசாங்கத்துடன் நடத்திவரும் பேச்சுவார்த்தை திருப்திகரமாக இல்லை என்று கூட்டமைப்புத் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது; அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்ற போதிலும் அரசு தனது மந்திரமாக ஓதத் தொடங்கியுள்ள அதிகாரப்பரவல் குறித்து தெளிவான இணக்கத்தைக் காணும் அறிகுறி எதுவும் இல்லை-

அரசியல் தீர்வு காண்பதில் விரைந்து செயற்படும் போக்கை, நோக்கை அரசாங்கத்திடம் காணமுடியவில்லை - என்று கூட்டமைப்பினர் இந்திய அரச தரப்பிடம் (கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரிடம்) முறையிட்டுள்ளனர்.

இலங்கை அரசின் அசமந்தப் போக்கும், அது குறித்து இந்திய அரசிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதும் இப்போதைய பேச்சுவார்த்தை அயல்நாட்டின் ''ஆசீர்வாதத்''துடன் அல்லது தூண்டுதலின் பேரிலேயே தொடங்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை ஒருவகையில் ஊர்ஜிதமாக்குகிறது.

எனினும், ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை காரணமாக, அதிர்ச்சி அடைந்து அல்லாடிப் போயிருக்கும் இலங்கை அரசாங்கம், அதனால் எழக்கூடிய உலகளாவிய அழுத்தங்களை அமுக்கி அழுத்திவிடும் நோக்கத்துடன், தமிழர் பிரச்சினைக்கு விரைந்து அரசியல் தீர்வு காணப்போகின்றோம் என்ற ''கொடியை''த் தூக்கிப் பிடித்துக் காட்டும் செப்படி வித்தையை கையில் எடுத் துள்ளது! அவ்வளவுதான்.

இப்பத்தியில் ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டது போன்று -

வன்னிப் போரில், சொந்த அண்ணன் தம்பி - போன்று உதவிய இந்திய அரசை, ஐ.நா. நிபுணர் குழு தனக்கு உண்டு பண்ணியுள்ள அமுக்கத்திலும் புழுக்கத்திலும் இருந்து விடுபடுவதற்கு உதவிக்குக் கோரியுள்ளார் ஜனாதிபதி மஹிந்த.

ஐ.நா. நிபுணர் குழுவால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுகளைச் சர்வதேச அரங்கில் எதிர்கொண்டு இலங்கைக்கு எதிரான முயற்சிகளை முறியடிக்க இந்தியாவின் உதவி மிக மிக அவசியம் - என்று கடந்த திங்கட்கிழமை ஊடகங்களின் பிரதம ஆசிரியர்கள் மற்றும் பிரதானிகளுடன் நடத்திய சந்திப்பின்போது ஜனாதிபதி கூறியதை ஞாபகப்படுத்துவது இங்கு பொருத்தம்.

இந்தியா எப்போதுமே இலங்கையுடன் இணைந்து புரிந்துணர்வுடன் செயற்பட்டுள்ளது. எல்லாச் சமயங்களிலுமே இரு தரப்புகளுக்கும் இடையிலான உறவுகள் சிறப்பாகவே இருந்து வருகின்றன. பொருத்தமான சமயத்தில் பொருத்தமான பதிலை இந்தியா வழங்கும் - என்றும் ஜனாதிபதி நம்பிக்கையும் வெளியிட்டுள்ளார்.

ஜே.ஆர். - ராஜீவ் ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்ட வடக்கு - கிழக்கு இணைப்பு நீக்கப்பட்டுள்ளது. அதில் உறுதி செய்யப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான பொலிஸ் மற்றும் நிர்வாக சேவைசார் அதிகாரங்கள் அரசமைப்புக்கான பதினெட்டாவது சட்டத் திருத்தத்தினால் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன.

ஆகையால், தமிழர் பிரச்சினையை - இனப்பிரச்சினையை - நியாயமான, நீதியான முறையில் தீர்க்க வேண்டும் எனில் ஆகக் குறைந்தது வடக்கு, கிழக்கு இணைந்த சமஷ்டி அமைப்பிலான அரசியல் தீர்வு தமக்குக் கிடைக்க வேண்டும் என்பதே இலங்கைத் தமிழ் மக்களின் வேணவாவும் கோரிக்கையும் ஆகும்.

அத்தகைய வழியில் இலங்கை அரசு காலடி எடுத்து வைப்பதற்கு பதின்மூன்று + என்ற நிலைப்பாட்டையும் தாண்டிய புதிய அரசமைப்புத் திருத்தம் தேவைப்படும்.

இந்தியாவில் உள்ளது போன்ற அரையளவு (''குவாசி'') சமஷ்டி முறையேயேனும் இலங்கையை ஆள்பவர்களிடம் இருந்து பெற முடியுமா என்பது சந்தேகத்துக்கு உரியதே?!

இத்தகைய ஒரு சூழ்நிலையில், புதிய அரசு, இதுவரை காலமும் விட்ட தவறை உணர்ந்து, தமிழர்களுக்குரிய உரிமைகளைப் பெற்றுத் தர தனக்குள்ள அரசியல் வலுவுடன் பிராந்திய பலத்துடன் செயற்பட வேண்டும்.

வன்னிப் போரின்போது இலங்கை அரசுக்கு உதவிய சோனியா அரசு, அதற்குப் பிராயச்சித்தம் செய்வதற்காகவேனும் தமிழர்களுக்குச் சேரவேண்டிய, பறிக்கப்பட்ட உரிமைகளைப் பெற்றுத் தர மனம் கொள்ள வேண்டும். திரும்பிப் பார்க்குமா பாரத தேசம்?

# இலங்கைக்கு ஆதரவான அறிக்கை வெளியிட இந்தியாவை பீரிஸ் "தாஜா" செய்வார்?

## ஆனால் வெற்றி கிட்டுமா என்பதில் சந்தேகம்

நேற்று 15-05-2011 அன்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை எழுதியிருந்த அரசியல் விமர்சனக் கட்டுரையிலிருந்து சில பகுதிகள்.

தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கை இராணுவப் படைகள் தோற்கடித்த இரண்டாவது நினைவுதினம் எதிர்வரும் வியாழக்கிழமையாகும். அந்த வகையில் பயங்கரவாதத்தின் கொடிய தன்மையை மக்கள் மனங்களில் நின்று நிலைபெறச்செய்வதற்கான பல நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது. வியாழக்கிழமையன்று வெற்றிதின அணிவகுப்பு வழமைபோல் காலிமுகத்திடலில் இடம்பெறும்.

இலங்கை பயங்கரவாதத்தைத் தோற்கடித்த அனுபவங்கள் என்ற தொனிப் பொருளில் மூன்று நாள் கருத்தரங்கொன்று நடைபெறவிருக்கிறது. மே 31 ஆம் திகதி ஆரம்பமாகும் இந்தக் கருத்தரங்கில் 55 நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பௌத்தர்களின் புனித வெசாக் கொண்டாட்டங்கள் இடம்பெறும் இந்தப் புதன்கிழமைகளில் இந்த நிகழ்வு இடம்பெற விருக்கின்றது.

இராணுவ நடவடிக்கைகளுக்கு அரசியல் தலைமை வகுத்து நடத்தியவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆவார். அவர் இப்பொழுது அரசியல் குறியாக மாறியிருக்கிறார். ஐ.நா. நிபுணர் குழுவினரால் இலங்கையில் போர்க் குற்றங்கள் நடைபெற்றதாக விடுக்கப்பட்டுள்ள அறிக்கையின் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இராணுவத்தை வெற்றி நோக்கி வழிநடத்திய மனிதர் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா இன்று சிறையில் இருக்கின்றார்.

கடந்த வியாழக்கிழமை வெள்ளைக் கொடி தொடர்பான அவர் மீதான வழக்கு விசாரணைக்கு வந்தபோது தம் தரப்பில் அவர் வாக்கு மூல அறிக்கையொன்றை நீதிமன்றில் வாசிக்க ஆரம்பித்தார். அவரின் உடல் இருந்த நிலையில் அவரால் அறிக்கையைத் தொடர்ந்து வாசிக்க முடியவில்லை. ஒரு காலத்தில் போர் வீரராகக் கொண்டாடப்பட்ட அவர் ஐ.நாவினால் அரசியல் கைதியென்று வர்ணிக்கப்படுகிறார். தொடர்ச்சியாக ஏற்பட்ட இருமலினால் அவரால் அறிக்கையை வாசிக்க முடியவில்லை. ஒரு வருட காலத்துக்குமேல் சிறையில் இருந்து வருவதால் அவர் உடல் நிலை இந்த அளவுக்கு பாதிக்புற்றுள்ளது. ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழு இலங்கை தொடர்பாக விடுத்துள்ள போர்க் குற்ற அறிக்கையினை கடந்த வாரம் மேலும் பல நாடுகள் ஆதரிக்கத் தொடங்கியுள்ளன. அமெரிக்காவுடன் பிரிட்டன், தென்னாபிரிக்கா, சுவிற்ஸர்லாந்து மற்றும் பிரான்ஸ், ஐரோப்பிய நாடுகள் பலவும் சேர்ந்துகொண் டுள்ளன. ஐரோப்பிய நாடுகளின் நாடாளுமன்றம் விடுத்த அறிக்கையொன்றில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

மோதலில் சம்பந்தப்பட்டிருந்த எல்லாத் தரப்புகளிலும் சர்வதேச மனித உரிமைகள், மனித உரிமைச் சட்டங்கள் பெரிய அளவில் மீறப்பட்டிருப்பதற்கான நம்பகமான குற்றச்சாட்டுகள் இருப்பதாக நிபுணர்குழு முடிவுக்கு வந்துள்ளது. இந்த விதமான மிகப் பாரதூரமான குற்றச்சாட்டுக்களை ஆராய்வதற்காக சுதந்திரமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஐரோ கருதுகின்றது. இது இலங்கையில் நீடித்த அமைதியும் பாதுகாப்பும் நிலவுவதற்கு உறுதியளிப்பதாக இருக்கவேண்டும். தேசிய நல்லிணக்கத்துக்குப் பொறுப்புக் கூறும் செயற்பாடுகள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பது போல் அவசியமாகின்றது. எனவே அறிக்கையின் ஆக்கரீதியான நோக்கங்களை இலங்கை அரசு விளங்கிக்கொள்ளும் என்று நம்புகின்றோம். அத்துடன் அறிக்கையில் காணப்படும் விடயங்கள் தொடர்பாக ஐ.நா. செயலாளர் நாயகத்துடன் தொடர்புகொண்டு ஆலோசனை நடத்தும்படி இலங்கையை வலியுறுத்துகின்றோம். அண்மையில் இலங்கை விவகாரம் தொடர்பாக ஐரோப்பிய நாடாளுமன்றம் விவாதம் ஒன்றை நடத்தியது. ஆறு வெவ்வேறு தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டன. ஐந்து தீர்மானங்கள் இலங்கைக்கு எதிராகவும் ஒன்று மட்டும் ஆதரவாகவும் இருந்தன.

ஐந்து வெவ்வேறு தீர்மானங்களில் ஐ.நா.நிபுணர் குழுவின் கண்டுபிடிப்புகள் தொடர்பாக கவலை தெரிவிக்கப்பட்டது.

## மேற்கு நாடுகள் அனைத்தும் ஐ.நா. அறிக்கைக்கு ஆதரவு

குறித்த குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு சர்வதேச பொது அமைப்பு ஒன்று நிறுவப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது. இது அவசியம் என்பதை வலியுறுத்துவதற்கான பல்வேறு காரணங்களையும் அவை முன்வைத்தன. ஐரோப்பிய கன்சர்வேட்டிவ் மற்றும் சீர்திருத்தப் பிரிவு உறுப்பினர்கள் இலங்கையைப் பாராட்டும் தீர்மானம் ஒன்றை சமர்ப்பித்திருந்தார்கள்.

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றக் கூட்டம் முடிவுற்றதன் பின்னர் பிரான்ஸில் உள்ள இலங்கைத் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் இலங்கை தொடர்பாக சர்வதேச நீதி பொறிமுறையொன்றை அமைக்க வேண்டும் என்று சோஷலிஸ அணியைச்சேர்ந்தவர்கள் கொண்டு வந்த தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

### மனித உரிமை சபையில் அறிக்கை

ஐ.நா.மனித உரிமைகள் சபையில் நிபுணர் குழுவின் அறிக்கை தாக்கல் செய்வது எப்போது என்பதில் மேற்கு உலகநாடுளுக்கு இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருப்பதாகத் தகவல்கள் கசிந்துள்ளன. சபையின் செப்ரெம்பர் மாத அமர்வின் போது இந்த விடயம் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று சில நாடுகள் கருதுகின்றன. மேற்கு ஆஸியா மற்றும் வட ஆபிரிக்க விடயங்களில் சபை அதிக கவனம் செலுத்தும் தருணமாக இருக்கலாம் என்பது அவர்களின் எண்ணம். ஆனால் இலங்கை தொடர்பாக வேறு இரு பிரச்சினைகள் சபையில் எடுத்துக் கொள்ளப்படவிருப்பதால் நிபுணர் குழு அறிக்கையையும் எடுத்துக்கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று வேறு சிலர் கருதுகிறார்கள். இவைகளில் ஒன்று 2009 செப்ரெம்பரில் ஐ.நா. மனித உரிமை சபையினால் நிறைவேற்றப்பட்ட இலங்கையில் போர்க் குற்றங்கள் நடைபெற்றதான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதைத் தடைசெய்தமையை ரத்துச் செய்வதற்கான தீர்மானம், மற்றது ஐ.நா. அறிக்கையாளரின் சட்டத்துக்கு மாறான கொலைகள் தொடர்பான அறிக்கை. இந்த அறிக்கை யானது ஐக்கிய ராஜ்ய சனல் - 4 வீடியோப்படங்களில் வெளிவந்துள்ள படுகொலைகள் தொடர்பாக சர்வதேச விசாரணையொன்று நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையாகும். இலங்கை அரசு குறித்த வீடியோப்படங்கள் போலியானவை என்று நிராகரித்துவந்துள்ளது. மனித உரிமை சபையின் மாநாட்டில் நிபுணர் குழு அறிக்கை எடுத்துக்கொள்ளப்படுமானால் இந்தியாவின் ஆதரவுமிக முக்கியமானதாக இருக்கும் என்று இலங்கை நம்புகின்றது. மிக உயர் இந்திய அதிகாரிகளின் குழுவொன்று விரைவில் இலங்கைக்கு வரவிருக்கின்றது. தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் பிரதீப் குமார் ஆகியவர்கள் இந்தக் குழுவில் இடம் பெறுவார்கள். மே 26 அல்லது ஜூன் முதல் வாரத்தில் இந்த இந்திய உயர்மட்ட அதிகாரிகள் குழு இலங்கைக்கு வரும் என்று இப் போது தெரியவந்துள்ளது. வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்தியாவுக்கு நேற்றுப் புறப்பிடவிருக்கிறார் - இந்திய வெளியுறவு

**தொகுப்பு: கோகுலன்**

அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணாவுடன் அவர் ஆலோசனைக் கலப்பார். இதற்கு முன்னராக கொழும் பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் அஷோக்காந் புதுடில்லிக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இதுவரைக்கும் நிபுணர் குழு தொடர்பாக இந்தியா நடு நிலையாகவே இருந்து வந்துள்ளது.

இறுதிச் சண்டையின் போது 40 ஆயிரம் பொதுமக்கள் வரை கொல்லப்பட்டிருப்பார்கள் என்ற குற்றச்சாட்டுக்களை மறுதலிக்கும் வகையில் இந்தியா பெரிய


(29 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சங்கானை இலுப்பைத்தாழ்வு வெல்வில் திருவருள்மிகு ஸ்ரீ வள்ளிதேவசேனா சமேத சிவசுப்பிரமணிய கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தானம்

# ரதோற்சவ சிறப்பு மலர் – 2011





## சிவாகம கிரியாரத்தினம், சிவாகமஞானி, கலாநிதி சிவபிரம்மஸ்ரீ சிவ.நித்தியானந்த சிவாச்சாரியர் சார்பாக ஸ்தானிக குருவின் ஆசிச் செய்தி

கலியுகவரதனாம் கந்தனின் அருட்பெரும் கருணையினாலே கர வருஷம் 07.05.2011 முதல் 17.05.2011 வரை வைகாசி விசாகத் தீர்த்தாத்த மஹோற்சவம் சிறப்புற நடைபெற்று வருகின்றது. எல்லாம் வல்ல இறைவனின் பஞ்ச கிருத்தியங்களையும் குறிக்கின்றதாகிய மஹோற்சவத்தில் இன்றைய நாள் அளித்தல் தொழிலைக் குறிப்பதாகிய இரதோற்சவத்தை முன்னிட்டு வெளியிடப்பெறுகின்ற சிறப்பு மலருக்கு ஆசியுரை வழங்குவதில் மனநிறைவடைகின்றோம்.

எம் குல முதல்வரும் தந்தையும் ஆதீன சிவாச்சாரியாராக விளங்கிய சிவப்பிரம்மஸ்ரீ சிவ. நித்தியானந்த சிவாச்சாரியர் அவர்களின் இடையறாத முயற்சியினால் ஊரவர்களின் அனுசரணையோடு யுத்தத்தால் சேதமடைந்திருந்த இந்த ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பெற்று கடந்த 2009 ஆம் ஆண்டு மஹா கும்பாபிஷேகம் சிவாச்சாரியார் அவர்களுடைய தலைமையின் கீழே சிறப்புற நடைபெற்றதை யாவரும் அறிந்ததே. அவர்கள் எம் மத்தியில் இல்லாது போனாலும் அவர்களுடைய ஆசியோடு இவ்வருடமும் உற்சவங்கள் எல்லாம் சிறப்புற நடைபெற எம்பெருமான் அருள்பாலித்துள்ள தகைமை அத்தகையதன்றோ!

எம்பெருமானின் அருள் அடியவர்கள் அனைவருக்கும் கிடைக்கவேண்டி அமைகின்றோம்.

ஸ்தானிக பரம்பரைக்குருமார்.



## நல்லை ஆதீன குருமுதல்வரின் அருளாசிச் செய்தி

இன்று சங்கானை இலுப்பைத்தாழ்வு முருகமூர்த்தி கோயில் என விளங்கும் வெல்வில் சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலின் தேர்த் திருவிழா கலியுக வரதனாம் கந்தப்பெருமான் அநியாயங்களையும் அக்கிரமங்களையும் அழித்தொழிப்பதற்காக இன்று இரதத்திலே ஆரோகணிக்கின்றார். எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல பரம்பொருளாக விளங்குகின்ற சிவசுப்பிரமணியப் பெருமான் இன்று தேர் ஏறிவந்து அருள்காட்சி தருகின்ற அழகே ஓர் உருவெடுத்தாற் போன்று சித்திரத் தேரிலே ஆரோகணிக்கும் அறுமுருகுப் பெருமான் சங்கானை வாழ்கின்ற சகல அடியார் பெருமக்களுக்கும் திருவருளை வாரி வழங்க வேண்டும் என்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசிகள் நல்குவதில் பூரிப்படைகின்றோம். முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கின்ற சிவசுப்பிரமணியப் பெருமான் இன்று அழகிய இரதத்திலே ஆரோகணித்து அருட்பவனி வந்து அற்புதக் காட்சி நல்கி அடியார்கள் அனைவருக்கும் திருவருள் புரிந்து இரட்சிக்க வேண்டும் என்று நல்லைக்குருமணியின் பாதம் பணிந்து அருகில் இருந்து அருளாட்சி புரிகின்ற நல்லூர் முருகனை வணங்கி ஆசி நல்கி வாழ்த்துகின்றோம்.

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*

ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமகா சந்நிதானம்
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.



## சர்வதேச இந்து மத குருபீடாதிபதியின் அருளாசிச் செய்தி

சங்கானை இலுப்பைத்தாழ்வு ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தான வருடாந்த பிரம்மோட்சவ ஆதீன குருமுதல்வர் சிவப்பிரம்மஸ்ரீ சிவ. நித்தியானந்த சிவாச்சாரியார் அவர்களின் குருவருள் ஆசியுடன் சிறப் புற நடைபெற்று வருகின்றது. இறைவனது ஐந்தொழில்களைக் குறிக் கும் மஹோற்சவத்தில் சம்ஹார உற்சவமாகிய தேர்த்திரு விழா வெல்வில் ஸ்ரீ முருகப்பெருமானுடைய இரதோற்சவம் சிறப்புற நடை பெற்று தீர்த்தோற்சவம் - த்வய அவரோஹணம் சிறப்புற நிறைவேறி ஆலய தர்மகர்த்தாக்களுக்கும் சகல அடியார்களுக்கும் எல்லாம் வல்ல கலியுக வரத னாகிய கந்தவேள் பெருமானின் பெருங் கருணையினால் சகல சௌபாக் கியங்களும் கிடைத்து, பேரானந்தப் பெருவாழ்வு வாழ முருகப் பெருமானின் திருவடிகளைப் பிரார்த்தித்து சர்வதேச இந்து மத குருபீடத்தின் சார்பில் நல்லாசிகளையும் பூரண அருளாசிகளையும் வழங்குவதில் மனநிறைவு கொள்கின்றோம்.

கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்,
சர்வதேச இந்து மத குருபீடாதிபதி, கொழும்பு.

## உற்சவ குருவின் ஆசியுரை

சங்கானை வெல்வில் இலுப்பைத்தாழ்வு ஸ்ரீ முருகன் தேவஸ்தான இர தோற்சவத்தை முன்னிட்டு இந்த மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமையடைகின்றோம்.

இன்றைய நாள் எம்பெருமான் இரதத்திலே ஆரோகணித்து வருகின்ற காட் சியைத் தரிசிக்கும் அடியவர் சகல விதமான செல்வங்களும் பெற்று நல்வாழ்வு வாழ அடியேனது மனப்பூர்வமான நல்லாசிகளைத் தெரிவித்து அமைகின்றேன்.

சிவப்பிரமஸ்ரீ பரம. சண்முகராஜ சிவாச்சாரியார் (வட கோவை)

## ஆதீன கர்த்தாக்களின் பிரார்த்தனையுரை

சங்கானை இலுப்பைத் தாழ்வு ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமானுடைய கர வருஷ பிரம்மோற்சவமானது எம்பெருமானின் திரு வருளோடும் ஆதீன குரு முதல்வர் 'சிவாகம கிரியாரத்தினம்' 'சிவாகம ஞானி' சிவப்பிரமஸ்ரீ சிவ.நித்தியானந்த சிவாச்சாரியார் அவர்களின் குருவருளோடும் சிறப்புற நடைபெற்று வருகின்றது. அனைத்து அடிய வர்களுக்கும் நல்லருள் கிடைக்கவேண்டி எம்பெருமான் வெல்வில் கந்தனைப் பிரார்த்தித்து அமைகின்றோம்.

ஆதீன கர்த்தாக்கள்: க.பொ.செல்வநாயகம், அ.க.சண்முகதாசன்.

IDM
IDM Pre University College
Chankanai.
#30, Main Street, Chankanai.
Tel: 021 7429 060
உங்கள் உயர் கல்வியின் உத்தரவாதம்

நேசம்
அழகு மாடம்
பிரதான வீதி,
சங்கானை

CHANKANAI
PHARMACY
Karainagar Road,
Chankanai

பத்மராசா
அன்சன்ஸ் நகைமாடம்
ஏழாலை வீதி,
சங்கானை

புதிய வினோ
நகைமாடம்
பிரதான வீதி, சங்கானை
0776249060> 0215672588
MOBILE PLAZA
All Kinds of Mobile Phones, Accessories Sales & Repairs
0212250212, 0779352902

நகுலன்
களஞ்சியம்
பிரதான வீதி,
சங்கானை

அம்பாள்
ரிங்கரிங் அன் பெயின்ற்
சென்றர்
பிரதான வீதி, சங்கானை
0776249060, 0779122983

துர்க்கா மரத்தொழிற்சாலை
வீட்டு, அலுவலகத் தளபாடங்கள், மரங்கள்
விற்பனையாளர்கள்
Mill Lane, Sandilipay
0777114852, 0213217963

பிள்ளையார்
கல், மணல் விற்பனை நிலையம்
அன்ட் ரான்ஸ்போட்
பிரதான வீதி, சங்கானை
பிள்ளையார் கிறேஸர்
புத்தூர் கிழக்கு, புத்தூர்

ஆசைப்பிள்ளை
அன்சன் நகைமாடம்
இல.10, பஸ் நிலையம்
முன்பாக
சங்கானை

நியூ சீப் சைட்
பிரதான வீதி, தலவாக்கலை.

கணேஸ்
மோட்டோர்ஸ்
ஆட்டோ மோட்டார் சைக்கிள்
உதிரிப்பாக விற்பனையாளர்
மல்லாகம் சந்தி, சங்கானை

பேள் நியூ பசன் ஹவுஸ்
அன்பளிப்பு, அழகு சாதன,
பாடசாலை, விளையாட்டுப்
பொருட்களை பெற்றுக்கொள்ள
நாட வேண்டிய இடம்
பிரதான வீதி, சங்கானை

உதயன் கட்டட பொருள்
விற்பனை நிலையம்
59, பிரதான வீதி, சங்கானை

லீலா பேக் ஹவுஸ்
பிறந்த நாள், திருமண
வைபவங்களுக்கான பிஸ்கட், கேக்
வகைகள் செய்து தரப்படும்
பிரதான வீதி, சங்கானை

வெஸ்டன் பார்மஸி
பார்மஸி பேபி நீட்ஸ்
பிரதான வீதி, சங்கானை
கருணா கிளினிக்
பிரதான வீதி, சங்கானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்லைன் மூலமே இந்திய விசா விண்ணப்பம் இதற்கு அதிக பணம் செலவழிக்கத் தேவையில்லை

## இந்தியத் துணைத் தூதரக அதிகாரி சொல்கிறார்

யாழ்ப்பாணம், மே 16

இந்தியாவுக்குச்செல்ல விரும்புவோர் இலங்கையிலுள்ள ஏனைய இந்தியத் துணைத் தூதரகங்களில் உள்ள நடைமுறை போன்று ஒன்லைன் மூலமாக மட்டுமே விண்ணப்பித்துத் தமது விசா அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியக் துணைத் தூதரக அதிகாரி வி.மகாலிங்கம்.

இந்தியாவுக்குச் செல்வதற்காக விசா விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதில் தேவையற்ற அலைச்சலும் அதிக பணச் செலவும் ஏற்படுவதாகப் பொதுமக்கள் எமக்குத் தெரிவித்த முறைப்பாடுகள் தொடர்பாகக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னரைப் போன்றுவிசா அலுவலகத்துக்குச் சென்று விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பூர்த்தி செய்து விண்ணப்பிக்கும் நடைமுறை இடைநிறுத்தப் பட்டுள்ளது. கடந்த 25 ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகம் ஊடாகவும் ஒன்லைன் மூலமாக விசா வழங்குவது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாதாந்தம் ஆயிரத்து முந்நூறு தொடக்கம் ஆயிரத்து ஐநூறு வரையிலானோர் இந்தியா செல்வதற்காக விசா பெறுவதற்கு விண்ணப்பிக்கின்றனர். இவர்களின் விண்ணப்பம் கிடைக் கப்பெற்று மூன்று நாள்களுக்குள் அவர்களுக்கான விசா அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது. இவற்றுள் 10 வீதமானோரின் விசா அனுமதி பல்வேறு காரணங்களால் நிராகரிக்கப்படுகின்றது.

இந்த விசாவைப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் சுயமாகக் குறைந்த கட்டணத்தில் ஒன்லைன் மூலமாக விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து விசா அனுமதியைப் பெற்றுக் கொள்ள முடியும். சிலர் இதற்காகஇணையவசதியுள்ளதொலைத் தொடர்பு நிலையங்களுக்குச் செல்லும்போது அவர்களிடமிருந்து அதிக பணம் அறவிடப் படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கு அதிக பணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை.

மக்கள் தாம் விரும்பிய இடத்தில் ஒன்லைன் மூலமாக நிரப்பிய விண்ணப்பப் படிவத்தைப் பிரதி எடுத்து அதனை இங்குள்ள இந்திய விசா நிலையத்தில் அனுமதியைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த சில நாள்களாக இந்திய விசா பெறுவதற்குச் செல்வோர் குறிப்பிட்ட ஒரு தொலைத் தொடர்பு நிலையத்தினூடாகத் தமது விண்ணப்பங்களை ஒன்லைன் மூலம் பூர்த்தி செய்ய வேண்டுமென இந்திய விசா வழங்கும் அலுவலகத்தால் தாம் அறிவுறுத்தப்படுவதாகவும் இதற்குத் தம்மிடமிருந்து இருநூற்றி ஐம்பது ரூபா அறவிடப் படுவதாகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (க-4)



யாழ்.பிரதான வீதி மக்கள் வங்கிக் கிளையில் கடந்த சித்திரைப் புத் தாண்டு தினத்தன்று இடம்பெற்ற 'வனிதா வாசனாவ' சீட்டிழுப்பின் அதிர்ஷ்டசாலியை யாழ். இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் ச.நிமலன் தெரிவுசெய்கின்றார். (313)

# நாடு முழுவதும் 275 மருந்தகங்கள் பதிவு செய்யப்படாத நிலையில்

கொழும்பு, மே 16

பதிவு செய்யப்படாத மற்றும் அனுமதிப்பத்திரங்கள் இல்லாத 275 மருந்தகங்கள் நாடு முழுவதும் செயற்படுவது கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சுத் தெரிவிக்கிறது.

அவற்றுக்கு எதிராக வழக்குகள் தொடுக்கப்படும் எனவும் சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

மேல்மாகாணத்தில் 41 மருந்தகங்கள், தென்மாகாணத்தில் 8, மத்திய மாகாணத்தில் 6, வடமேல் மாகாணத்தில் 9 மற்றும் வடமாகாணத்தில் 77 மருந்தகங்கள் என்றவாறு அவை பதிவு செய்யவில்லை என்று அமைச்சு தெரிவிக்கிறது.

இன்றைய அளவில் நாடு முழுவதும் 3 ஆயிரத்து 172 மருந்தகங்கள் உள்ளன. அவற்றுள் 2 ஆயிரத்து 594 மருந்தகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளவையாகும். (ம-22)

## நோயாளர் அசௌகரியம்

யாழ். போதனா வைத்தியசாலைக்குக் காலையில் கிளினிக்குக்கு செல்லும் நோயாளர்கள் மற்றும் முறிவு நெரிவு சிகிச்சை பிரிவுக்குச் செல்வோர் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அதிகாலையில் வெளி நோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளர்கள் காலை 6 மணிக்கு வெளிக்கதவுகள் திறக்கப்படும்வரை வெளியில் கால் கடுக்ககாத்திருக்க வேண்டியுள்ளது. கதவு திறந்ததும் முன்பு வந்தவர் பின்பும் பின்பு வந்தவர் முன்பும் இடம் பிடித்து விடுகின்றனர். இதனால் நோயாளர்கள் நேரவிரயங்களுக்கு ஆளாவதாக தெரிவிக்கப் படுகிறது. (ம-135)

# 3,410 உப தபால் அலுவலகங்களையும் வலையமைப்புக்குள் கொண்டுவர ஏற்பாடு

கொழும்பு, மே 16

தபாலகங்களை நவீனமயப் படுத்தும் திட்டத்தின் கீழ் 3 ஆயிரத்து 410 உப தபால் அலுவலகங்கள் வலையமைப்புக்குள் கொண்டு வரப்படவுள்ளன.

அடுத்த மாதத்தில் இதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப் படவுள்ளதாக தபால் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அதன் முதற்கட்டமான ஆறு கோடி ரூபா செலவில் 747 பிரதான தபாலகங்கள் வலையமைப் புக்குள்கொண்டுவரப் படவுள்ளன.

தபாலகங்களை நவீனமயப் படுத்தல், வலையமைப்புக்குள் கொண்டுவரல் மற்றும் நவீன தொழில் நுட்பச் சாதனங்களை விநியோகிப்பது தொடர்பாக மொத்தமாக 60 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-22)

# 20 வருடங்களின் பின் இடம்பெற்ற கவுணாவத்தை ஆலய கும்பாபிஷேகம்



வலி.வடக்கு, மே 16

வலி.வடக்கு கொல்லங்கலட்டி கவுணாவத்தை ஞான வைரவர் ஆலய கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்றது.

இதனையடுத்து இரவு 9 மணியளவில் வைரவப் பெருமான் வெளிவீதியுலா வந்தார்.

உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள இந்த ஆலய கும்பாபிஷேகம் 20 வருடங்களின் பின்னர் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பகுதிகளில் மக்கள் இன்னும் மீளக்குடியமராத நிலையில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் ஆலயத்துக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் கலந்து கொண்டார். (ம-86)




கொழும்பு, மே 16

கொழும்பு கதிர் வேலாயுத சுவாமி ஆலயத்தின் பெருந் திருவிழா நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறவுள் ளன. எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பரத் திருவிழாவும் மறுநாள் திங்கட் கிழமை காலை 7 மணிக்குத் தேர்த் திருவிழாவும், 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

திருவிழா தினங்களில் தினமும் மாலை 6 மணி முதல் 7மணிவரை ச.ஜெயகோபால சுவாமியின் மகோற்சவம் பற்றிய விளக்க உரையும் செந்தமிழ் வேதம் பற்றிய திருப்புகழும் இடம் பெறும். (ற-253)

***

தெல்லிப்பழை கிழக்கு குருநாத சுவாமி கோயில் வைகாசி விசாகப் பொங்கல்விழா நாளை செவ்வாய்க்கிழமை மாலை.4 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து அபிஷேகப் பூசை, திருவிழா ஆகியன நடைபெறவுள்ளன.(ற-86)

***

மல்லாகம் நீலியம்பனை முதலி அம்பாள் ஆலயத்தின் பெருந் திருவிழா கடந்த 7ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இன்று திங்கட் கிழமை தேர்த் திருவிழாவும் நாளை செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ற-38)

***

நாகேஸ்வரம், அளவெட்டி மேற்கு நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை வைகாசி விசாக பூசை நடைபெறவுள்ளது. காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் அரம்பமாகி 9 மணிக்கு விசேட தெய்வீகவுரை நடைபெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து ஸ்ரீமத் நாராயண சுவாமி சிறீதேவி, பூமாதேவி புடைசூழ வருவார். அதனைத் தொடர்ந்து மதியம் 12 மணிக்கு மகேஸ்வர பூசை இடம்பெறும். (ற-160)

# முனியப்பர் வீதிக் கடைகள் ஒரு பகுதி மாற்றம்

வலி.வடக்கு, மே 16

யாழ்ப்பாணம் முனியப்பர் வீதியில் அமைந்துள்ள பெட்டிக் கடைகள் யாவும் அகற்றப்பட்டுப் புதிய விதிமுறைகளுக்கு அமைவாக நிர்மாணிக் கப்படவுள்ளன.

நேற்றைய தினம் ஏற்கனவே முனியப்பர் வீதியின் இரு புறங்களிலும் உள்ள பெட்டிக் கடைகள் உட்பட செல்வா தியேட்டர் வீதியில் உள்ள பெட்டிக் கடைகளும் அகற்றப் பட்டுப் புதிய விதிமுறைகளுக்கு அமைவாக கடைகள் நிர்மாணிக்கப்பட்டன.

கடந்த காலத்தில் முனியப்பர் வீதி, செல்வா தியேட்டர் வீதி ஆகியவற்றின் இரு புறங்களிலும் பெட்டிக்கடைகள் காணப்பட்டன.

இதனால் பொதுமக்கள், வாகனங்களில் செல்வோர் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு மிகவும் நெருக்கடி காணப் பட்டது.

தற்போது வீதியின் இருபுறமும் இருந்த கடைகள் அகற்றப்பட்டு வீதியின் கிழக்குப் புறமாக அமைக்கப்படுகின்றன.

ஐந்தடி கொண்ட கடைகளாகவும் அமைக்கப்படுகின்றன.


இந்த நடவடிக்கையால் வீதியின் ஒருபக்கத்தால் போக்குவரத்துச் [illegible] டிய நிலைமை ஏற்ப[illegible] (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
16 மே 2011 திங்கட்கிழமை

# வெசாக் கொண்டாட்ட ஏற்பாடுகள் யாழ்.குடாநாட்டில் வெகு மும்முரம்





யாழ்ப்பாணம், மே 16

வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டம் முழுவதும் படையினரால் வெசாக் கொண்டாட்ட ஏற்பாடுகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வெசாக் கூடுகள் அமைக்கப்பட்டு வர்ண விளக்குகளும் பொருத்தப்பட்டுள்ளன. பொதுமக்கள் கூடும் இடங்களில் எல்லாம் வெசாக் கொண்டாட்டத்தைக் குறிக்கும் வெசாக் கூடுகள் கட்டப்பட்டு வர்ண விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன.

யாழ்.பொதுநூலகத்துக்கு முன்னால் என்றுமில்லாத அளவு பெரிய வெசாக் கூடுகள் அமைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டு வருகின்றன.

வடமராட்சிப் பகுதியில் உள்ள இராணுவ முகாம்கள், பொது மக்கள் ஒன்றுகூடும் இடங்கள் பலவற்றிலும் வெசாக் கூடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

இந்த வெசாக் ஏற்பாடுகளில் பொலிஸாரும் இணைந்துள்ளனர். (ம-86-319-23)

# சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க இரு விடுதிகளை அமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 16

சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் முகமாக கொழும்புத்துறை மற்றும் கொட்டடி ஆகிய இடங்களில் விரைவில் சுற்றுலா விடுதிகள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் தொடர்பாக ஆராய்வதற்காகச் சுற்றுலாத்துறை அமைச்சு உள்ளிட்ட அதிகாரிகள் கொண்ட குழுவொன்று கொழும்பிலிருந்து எதிர்வரும் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தர உள்ளது.

இந்தத் தகவலை யாழ். கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஏனைய இடங்களைப் போன்று யாழ்ப்பாணத்துக்கும் சுற்றுலாத் துறையை விருத்தி செய்வதன் ஒரு பகுதியாக இங்கு சுற்றுலா விடுதிகள் அமைக்கப்படவுள்ளன.

கடற்றொழில் நீரியல்துறை அமைச்சில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் இதுபற்றிக் கலந்துரையாடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக இந்தக் குழு யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளது.

இங்கு சுற்றுலா விடுதிகள் அமைவதற்கான இடத்தைப் பார்வையிடுவதோடு மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயவுள்ளது - என்றார். (ம-4)

# நிதியுதவிகள் கிடைக்குமாயின் மக்களுக்கான சேவை தொடரும்

## யாழ்.வணிகர் கழகத் தலைவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மே 16

வர்த்தகர்கள், பொதுமக்களிடமிருந்து நிதியுதவிகள் கிடைக்குமாயின் யாழ்.வணிகர் கழகம் பொதுமக்களுக்காக வழங்கும் உதவித் திட்டங்களை மேலும் விரிவுபடுத்த முடியும் இவ்வாறு தெரிவித்தார். வணிகர் கழகத்தலைவர் ஆர்.ஜெயசேகரம்.

யாழ்.வணிகர் கழகம் யாழ்.மாவட்டத்திலுள்ள வறுமைக் கோட்டின் கீழ்வாழும் 150 குடும்பங்களுக்குத் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியில் கோழிக்குஞ்சுகள் அதற்கான கூடு உள்ளிட்டவை வழங்க முன்வந்துள்ளது.

அந்தத் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. அதன்போது பத்துக் குடும்பங்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வின் போது உரை நிகழ்த்துகையிலேயே வணிகர் கழகத் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்திக்கும் மக்களின் வாழ்வாதரத்துக்கும் யாழ்.வணிகர்கழகம் பங்களித்து வருகிறது. யுத்தம் இடம்பெற்று இரண்டு வருடங்கள் கழிந்துவிட்ட நிலையில் நாம் வெளிமாவட்டங்களை எதிர்பார்த்திருக்கவேண்டியுள்ளது. எமது பகுதி வளங்களைப் பயன்படுத்தாது சோம்பேறிகளாகப் பிறரை நம்பியிருக்கும் மனநிலையைக் கைவிடவேண்டும். யாழ்.மாவட்டத்தின் தேவைக்கு என 10 ஆயிரம் முட்டைகள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

ஏன் இந்த நிலைமை? எமது மக்களால் கோழி வளர்த்து முட்டையை உற்பத்தி செய்ய முடியாமல் போனது ஏன்? யுத்தம் முடிந்த நிலையில் எமது பகுதியில் உள்ள வளத்தைப் பயன்படுத்தி சுய பொருளாதாரத்தை வளப்படுத்திக் கொள்ள வேண்டும்.

சுனாமி மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மருதங்கேணி மக்களுக்கு எமது உதவித் திட்டத்தை முதலில் வழங்குவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம் - என்று கூறினார். (ம-14)

# பாடசாலைகளிலுள்ள ‘கன்ரீன்’களில் இனிப்புப் பண்டங்கள் விற்கத் தடை

யாழ்ப்பாணம், மே 16

மாணவர்களின் உடல் நலத்தைக் கருத்திற்கொண்டு பாடசாலை உணவகங்களில் (கன்ரீன்களில்) இனிப்புத் திண்பண்டங்கள் விற்பனை செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கல்வியமைச்சு இது தொடர்பான சுற்று நிருபத்தைப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்துள்ளதாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

பாடசாலை உணவகங்களில் இனிப்பு அதிகமாகவும் கோதுமை மாவில் தயாரிக்கப்பட்ட திண்பண்டங்களையும் குளிர்பான வகைகளையும் விற்பனை செய்கின்றபோது அதனை உண்கின்ற மாணவர்கள் சிறிய வயதில் பல்வேறு நோய்களுக்குள்ளாகின்றனர்.

இது தொடர்பாகச் சுகாதாரத் திணைக்களம் கல்வியமைச்சுக்கு விடுத்துள்ள அறிவுறுத்தலின் பிரகாரம் இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் விழிப்புடன் செயற்பட்டு மாணவர்களின் உடல், உள ஆரோக்கியத்துக்கு வழிசமைக்க வேண்டும்.

சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திண்பண்டங்கள் விற்பனை செய்யப்படுமானால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் உணவகத்துக்கு ‘‘சீல்’’ வைக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

# மாணவர்களின் நன்மை கருதி பொலிஸாரின் வீதி ரோந்து

நெல்லியடி,மே16

நெல்லியடிப் பிரதேசத்தில் மாணவர்களின் பாதுகாப்பான போக்குவரத்துக்கு வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக பொலிஸார் வீதி ரோந்து நடவடிக்கையினை தீவிரப்படுத்தவுள்ளதாக நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திஸகங்காரா தெரிவித்தார்.

கரவெட்டிப் பிரதேச செயலக பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்ற கரவெட்டி தெற்கு, மேற்கு ஒருங்கிணைப்புக் குழுகூட்டத்தில் அப்பகுதி மக்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் போதே பொலிஸ் அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்:

தனியார் கல்வி நிறுவனம் முடியும் நேரங்களிலும், பாடசாலை நேரங்களிலும் பொலிஸ் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் மேலும் அவை தீவிரப்படுத்தப்படும் எனவும் கூறினார்.

மாணவர்களுடன் சேஷ்டை புரியும் நபர்கள் கைது செய்யப்படுவார்கள் என மேலும் தெரிவித்தார். (எ-236-319)

# “இசுறு” திட்டப் பாடசாலைகளின் அபிவிருத்திப்பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 16

யாழ். மாவட்டத்தில் ‘‘இசுறு’’ திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ். மாவட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தா, சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வரா மகாவித்தியாலயம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, வரணி மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் ‘‘இசுறு’’ திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகள் ஒவ்வொன்றுக்கும் தலா 35 மில்லியன் ரூபா வீதம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போது 25 மில்லியன் ரூபாவில் முற்கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த வருட இறுதிக்குள் கட்டடப் பணிகள் நிறைவு பெறும்.

மிகுதி 10 மில்லியன் ரூபா செலவைக் கட்டடப் பணிகள் அடுத்த வருடம் ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

# ஆவணமின்றி வாகனம் செலுத்திய நபருக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம், மே 16

வாகனம் செலுத்துவதற்குரிய ஆவணங்கள் எதுவுமின்றி மதுபோதையில் வாகனத்தை செலுத்தி வந்த நபர் போக்குவரத்துப் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டார். இன்நிலையில் அவர் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாலும் குறித்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தால் 13 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு கடந்த வியாழக்கிழமை உத்தரவிடப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

போக்குவரத்துப் பொலிஸார் வழமைபோல் வீதிச் சோதனைகளை மேற்கொண்ட வேளையில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள்களை மறித்து சோதனையிட்ட போது சாரதி உரிமைப் பத்திரம், வாகன வரி, காப்புறுதி போன்ற ஆவணங்கள் இல்லாமல் குறித்த நபர் மதுபோதையில் பொலிஸாருடன் வ்ாக்குவாதத்தில் ஈடுபட்டு அவர்களைக் கடமை செய்யவிடாமல் தடுத்துள்ளார்.

சாரதி உரிமம், காப்புறுதி, வாகன வரி ஆகியவை இன்றி மதுபோதையில் வாகனம் செலுத்தியதுடன் பொலிஸாரைக் கடமை செய்யவிடாமல் வாக்குவாதத்தில் ஈடுபட்டமை ஆகிய ஐந்து குற்றங்கள் சுமத்தப்பட்டு பொலிஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டது.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இந்த நபர் குற்றங்களை ஒப்புக் கொண்டதையடுத்து நீதிவான் ஐந்து குற்றங்களுக்குமென 13 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 5 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (எ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் ‘என்றிப்’ திட்டத்தின் கீழ் அபிவிருத்திகள்

நெல்லியடி, மே 16

பருத்தித்துறைப் பிரதேச செயலகப் பிரிவில் ‘என்றிப்’ திட்டத்தின் கீழ் சுமார் 333.36 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

225 மில்லியன் ரூபா செலவில் நீர்ப்பாசன அலுவலகம் வல்வெட்டித்துறை கெருடாவில் வடக்கு பகுதியில் அமைக்கப்பட்டு வருகின்றது.

சுமார் 15.5 மில்லியன் ரூபா செலவில் தொண்டமானாறு பகுதியில் நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. மற்றும் 65.36 மில்லியன் ரூபா செலவில் பருத்தித்துறை சந்தையின் இரண்டாம் மாடி வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை விடுதிகள் 5 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படுகின்றன.

பாடசாலைகளின் அபிவிருத்தி வேலைகள் 22.5 மில்லியன் ரூபா செலவில் இடம்பெற்று வருகின்றது.

9.3 மில்லியன் ரூபா செலவில் பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய நூலகம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

13.2 மில்லியன் ரூபா செலவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் ஆராதனை மண்டபம், நூலகக் கட்டடம் என்பன புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை என்றிப் திட்டத்தின் கீழ் மேலும் பல்வேறு நடவடிக்கைகள் வடமராட்சியில் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது. (ம-319)

## பாரம்பரியம் பேணல்...



வெற்றிக்களிப்பு-தென்மராட்சி கல்வி வலயத்தின் தமிழ் தினப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. இதில் முதலாம் பரிசைப் பெற்ற காத்தவராயன் சிந்து நடைக்கூத்தில் பங்கேற்ற கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்கள் தமது கலைத்துறை பொறுப்பாசிரியர்களுடன் உள்ளனர். (121)

# அச்சுவேலியில் பட்டப்பகலில் திருட்டு

யாழ்ப்பாணம், மே 16

வீட்டில் எவருமில்லாத வேளை- பட்டப்பகலில்- வீடு புகுந்த திருடர்கள் அங்கிருந்த பணம், நகைகள் மற்றும் உடமைகளை அபகரித்து சென்றுள்ளனர்.

அச்சுவேலி வடக்கு புனித அந்தோனியார் கோயிலுக்கு அருகில் கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:

கணவனும் மனைவியும் புறப்பட்டுச் சென்றதை அவதானித்த திருடர்கள் வீட்டுக்குள் புகுந்து கதவுகளை உடைத்து அங்கிருந்த 30 ஆயிரம் ரூபா பணம், 10 பவுண் தங்க நகைகள் மற்றும் பெறுமதிமிக்க பொருள்களையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

பொழுது சாயும் வேளை வீடு திரும்பிய போது கதவுகள் திறந்து கிடப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார் வீட்டுக்காரின் மனைவி. அங்கிருந்த பொருள்கள் பலவும் இழுத்தெறியப்பட்டு அங்குமிங்கும் கிடந்தன. பணம்,நகைகள், பொருள்கள் அபகரித்துச் சென்றமையும் தெரியவந்தது.

இது குறித்து அச்சுவேலி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-9-11)

# இருபிரிவினர் இடையே கைகலப்பு; இசை நிகழ்ச்சியும் நிறுத்தம்

தென்மராட்சி, மே 16

ஆலய பெருந்திருவிழாவின் இரவு கேளிக்கை நிகழ்வில் இரு பகுதியினரிடையே கைகலப்பு ஏற்பட்டது. அங்கு விரைந்த பொலிஸார் நடைபெற்றுக் கொண்டிருந்த இசை நிகழ்ச்சியை நிறுத்தியதால் ரசிகர் கூட்டம் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை மிருசுவில் மன்னன்குறிச்சி கந்தசாமி ஆலயத்தில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஆலயப் பெருந் திரு விழாவை முன்னிட்டு உபயகாரர்கள் இரவு நிகழ்ச்சியாக இன்னிசைக் கச்சேரியை ஒழுங்கு செய்திருந்தனர். நிகழ்ச்சி ஆரம்பமாவதற்கு முன்னர் இரு கிராமத்தவர்களிடையே ஏற்பட்ட தர்க்கம் கைகலப்பாக மாறியது.

இன்னிசை நிகழ்வு ஆரம்பமான வேளையில் அங்கு வந்த பொலிஸார் இரவு நிகழ்வு நடத்துவதற்கு அனுமதி பெறாததால் நிகழ்வை நிறுத்துமாறு உத்தரவிட்டனர். (எ-207)

# உபகரணங்களுக்கு முத்திரையிடாத வர்த்தகர்களுக்கு வழக்கு

தென்மராட்சிப் பிரதேசத்தில் வியாபார, வர்த்தக நிலையங்களில் பயன்படுத்தப்படும் நிறுவை அளவை உபகரணங்களுக்கு இந்த வருடத்துக்குரிய முத்திரையிடாத வியாபாரிகளும் வர்த்தகர்கள் யாழ். மாவட்ட நிறுவைகள் அளவை திணைக்கள அதிகாரிகளிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

சாவகச்சேரி கைதடி, கொடிகாமம் ஆகிய பகுதிகளில் திணைக்கள அதிகாரிகள் நடத்திய திடீர்ப் பரிசோனைகளின் போது இந்த வருடத்துக்குரிய முத்திரையிடப்படாத வர்த்தகர்கள் மற்றும் வியாபாரிகள் பயன்படுத்திய நிலுவை அளவை உபகரணங்களைக் கைப்பற்றினர். இந்த பத்துப் பேருக்கு எதிராக கடந்த புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் முழுவதும் சாவகச்சேரி, கைதடி, கொடிகாமம் ஆகிய இடங்களில் திணைக்கள நிறுவை அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-207)

# தென்மராட்சியில் மீள்குடியமர்ந்தோருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கல்

தென்மராட்சி, மே 16

வன்னிப் பகுதியிலிருந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்குக் கோழி வளர்ப்புத் திட்டத்துக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கல் கடந்த வெள்ளிக் கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உணவு விவசாய நிறுவனத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிக் கால்நடை வைத்தியர் அலுவலகத்தினால் கோழிக்குஞ்சுகள், தீவனங்கள், கோழிக்கூட்டுக்கான கம்பி வலை போன்றவை வாழ்வாதாரத் திட்டத்தில் வழங்கப்படவுள்ளன.

தாவளை- இயற்றாலைப் பகுதியில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்குத் தலா 20 கோழிக் குஞ்சுகளும் தீவனம், கம்பி, வலை ஆகியவை கால்நடை வைத்தியர் ஜீ.ரகுநாதன் தலைமையில் சென்ற குழுவினரால் வழங்கப்பட்டுள்ளன. (எ-207)

# வீதிகளில் நின்று மது அருந்துவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க ஏற்பாடு

அரியாலை வசந்தபுரம் பகுதிகளில் வீதியோரங்களில் நின்றபடி மதுவகைகளை அருந்துவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகக் கடந்த புதன்கிழமை நடைபெற்ற நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரியாலை வசந்தபுரம் பகுதிகளில் உள்ள மதுபான நிலையத்தில் மதுவினை வாங்குபவர்கள் சந்தியில் நின்று அவற்றினை பாவித்துவிட்டுப் போத்தல்களை அந்தப் பகுதிகளில் வீசி எறிவதாகவும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மேலும் நாயன்மார்கட்டு செம்மணி வீதியில் உள்ள குளத்தினருகே விடுமுறை நாள்களில் இளைஞர்கள் கூடி நின்று மது அருந்துவதுடன் போத்தல்ளைக் குளத்தின் அருகே வீசி எறிவதாகவும் இந்தக் கூட்டத்தில் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா குற்றவியல் தொடர்பான பொலிஸாரை அழைத்து நிலைமையை எடுத்துக் கூறியதைத் தொடர்ந்து இந்தப் பகுதியைப் பொலிஸார் கண்காணிப்பதுடன் சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (எ-7)

# அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைத்தியர், ஆளணிப் பற்றாக்குறை

## நோயாளர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 16

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைத்தியர் மற்றும் ஆளணிப் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளதால் சிகிச்சை பெற வரும் நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருந்தே சிகிச்சை பெறவேண்டி இருப்பதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த வைத்தியசாலையில் நீண்டகாலமாகப் பொறுப்பதிகாரியாக மருத்துவப் பட்டதாரி வைத்தியரும் ஒரு உதவி வைத்தியரும் மட்டுமே சேவை யில் உள்ளனர்.

இதனால் சுழற்சி முறையில் ஒருவர் மட்டுமே கடமையில் இருப்பதால் நோயாளர்கள் நீண்டநேரம் காத்திருந்தே சிகிச்சை பெறவேண்டி இருப்பதாக தெரிவிக்கின்றனர்.

இந்த வைத்தியசாலையில் ஆண்கள், பெண்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான விடுதி மற்றும் தாய் சேய் நல கிளினிக் உட்பட வைத்தியசாலைக்கும் பொருத்தமான சிகிச்சை கிளினிக்குகள் அனைத்தும் செயற்படுகின்றன. எனினும் இரவு, பகல் கடமை மாற்றம் கிளினிக்குகள் எல்லாவற்றையும் உரிய முறையில் மேற் கொள்வதற்கு மேலும் ஒரு வைத்தியர் கடமையில் இருப்பது நோயாளருக்கு வசதியாக இருக்கும் என எதிர்பார்க்கின்றனர்.

[illegible] பற்றாக்குறை தொடர்பாக வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்க மும் பொது அமைப்புக்களும் நீண்டகாலமாக மேலிடத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்த போதிலும் மருத்துவர் ஆளணி பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு இதுவரை எந்த விதமான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை என அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தாய்,சேய் நலம் மற்றும் கிளினிக் நடைபெறும் தினங்களில் வெளிநோயாளர்கள் சிகிச்சை நேரம் மட்டுப்படுத்தப்படுவதால்இந்தவைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் பல மணி நேரம் காத்திருந்தே சிகிச்சை பெற வேண்டி ஏற்படுகிறது.

சம்பந்தப்பட்ட அதி காரிகள் இந்த விடயம் சம்பந்தமாக கருத்தில் எடுத்து உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கையை விடுகின்றனர்.(எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
16 மே 2011 திங்கட்கிழமை

# திருக்கேதீச்சரத்தில் மௌனத் திருவிழா

''ஈழத்துக் காசி'' என்றும் ''கேதார சமானத்தலம்'' என்றும் போற்றப்படும் திருக்கோயில் திருக்கேதீச்சரம் ஆகும். காசியில் கங்காதீர்த்தமாடி, கங்கா தீர்த்தத்தைக் குடங்களில் சுமந்து சென்று விஸ்வநாதமூர்த்திக்குத் தாமே அபிஷேகித்து வழிபடும் சிறப்புண்டு. இவ்வாறே ஈழத்திலும் அடியார்கள் தாமே அபிஷேகம் செய்து வழிபடக் கூடிய திருத்தலமாக திருக்கேதீச்சரம் விளங்குகிறது.

திருக்கேதீச்சரநாதரின் பாகம் பிரியாளாகிய அம்மைக்குக் கௌரி என்று பெயர். அவளது திருவாயிலுக்கு நேரே பாலாவித் தீர்த்தக்குளம் விளங்குகிறது. அம்மையின் வற்றாக் கருணையே பாலாவியாகப் பாய்வதாக அருளாளர்கள் காண்பர். அவ்வாறு காண்பவர்கள் அதிலே மூழ்கியாடி மலப்பசையைக் கழுவுவர்; வினைநோய் தீரப் பெறுவர். ''பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவி'' என்று சுந்தரமூர்த்தி நாயனார் பாடியதும் உண்டு.

உலகிலே எண்ணிலடங்காத சிவத்தலங்கள் இருப்பினும் 274 தலங்கள் விஷேடிக்கப்படுகின்றன. காரணம் மூவர் முதலிகளாலே தேவாரப் பதிகம் பெற்ற சிறப்பு ஆகும். இந்த 274 தலங்களில் நம் ஈழவள நாட்டில் 2 தலங்கள் மட்டுமே அடங்குகின்றன. அவை திருக்கேதீச்சரமும் திருக்கோணேச்சரமும் ஆகும். இவ்விரண்டிலும் திருக்கேதீச்சரம் சம்பந்தர், சுந்தரர் இருவரதும் பதிகங்களைப் பெற்றிருப்பதுடன் அப்பரடிகளாலே திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்தில் கேதாரத்தோடு இணைத்துப் பாடப்பட்டுள்ளது. மேலும் மணிவாசக சுவாமிகளாலும் அவரருளிய திருவாசகத்திலுள்ள குயிற்பத்திலே, மண்டோதரிக்கு அருளிய பெருமை குறித்து இத்தலம் பாடப்பட்டுள்ளது.

இவ்வாறு சமயகுரவர் நால்வரும் நினைந்து பாடிய சிறப்புடைய ஈழத்துத் திருத்தலம் திருக்கேதீச்சரம் ஒன்றேயாகும்.

திருக்கேதீச்சரப் பெருமானது திருக்கொடியேற்றப் பெருவிழா 2011.05.08 ஆரம்பமாகி 2011.05.16 இல்தேரோட்டமும் 2011.05.17 இல் தூய பாலாவித் திருக்குளத்தில் தீர்த்தமும் நிகழவுள்ளன.

திருக்கேதீச்சரத் திருவிழாக்களில் பல சிறப்பம்சங்கள் உள்ளமையைச் சைவமக்கள் அறிவர்.

கொடியேற்ற விழாவுக்கு திருக்கோணேச்சர தலத்திலிருந்து பாவநாசத் தீர்த்தம் கொண்டு வரப்படுதல். தினமும் காலை, மாலைத் திருவிழாக்களிலே பஞ்ச மூர்த்திகள் உள்வீதியிலும் வெளி வீதியிலும் உலாக் கொள்ளுதல்.

தினமும் வசந்த மண்டபப் பூசையில் மூவர் தேவாரமும் ஓதப்படுதல், ஐந்தாம் திருவிழாவில் பஞ்சாக்ஷரப் பதிகங்கள் விண்ணப்பம் செய்யப்படுதல், ஆறாம் திருவிழா அன்று பிக்ஷாடன மூர்த்தி திருவுலாவந்து அருளுதல், ஏழாம் திருவிழாவன்று திருக்கல்யாண விழா நடைபெறல், இந்த நாளில் பஞ்சமூர்த்திகளும் தனித்தனிப் பூந்தண்டிகைகளில் உலாவருங் காட்சி மிக அற்புதமானது. திருவீழிமிழலைத் தலத்திலுள்ள ''மாப்பிள்ளைச் சாமி'' எனப்படும் கல்யாண சுந்தரமூர்த்தியை ஒத்ததாக இங்குள்ள கல்யாண சுந்தரமூர்த்தி விளங்குதலைக் கண்டின்புறலாம்.

எட்டாம் திருவிழாவன்று இரவு பக்தோற்ஸவம் நடைபெறும். இந்தத் திருவிழாவில் சந்திரசேகரமூர்த்தி எழுந்தருள நாயன்மார்கள் சுவாமியை எதிர்நின்று தரிசித்தவாறு வருதல் சிறப்பாக இருக்கும். (பொதுவாக ஈழத்துத் தலங்களில் நால்வர் மட்டுமே உலாக் கொள்வது மரபு. ஆனால் திருக்கேதீச்சரத்தில் மட்டுமே நம்பியாண்டார் நம்பி, இராஜராஜசோழன், சேக் கிழார் ஆகியோரது உலாவும் நிகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது).

ஒன்பதாம் நாளன்று நிகழும் பஞ்சரதபவனியைத் தரிசித்தால் இம்மை, மறுமை - இரண்டும் சிறக்கும். உலகிலேயே மிகப் பெரிய சோமாஸ்கந்தமூர்த்தியாக விளங்கும் பெரிய பெருமான் தேரிலே வருதலைக் கண்டால் ''மற்று இனிக் காண்பது என்னே'' என்பர் அருளாளர்கள். மாலையிலே பச்சைசாத்தி பன்னீர் மழையிலே தோய்ந்தவாறு பஞ்சமூர்த்திகளும் கோயிலுக்கு எழுந்தருளும் போது பெறும் ஆத்மீக அனுபவம் வார்த்தையால் வழங்கமுடியாதது.

பத்தாம் நாளன்று அதிகாலையில் நிகழும் நடராஜப் பெருமானின் தீர்த்தமும் பகலில் நிகழும் பஞ்சமூர்த்திகளின் தீர்த்தமும் பாவவிமோசனம் அளிப்பவை. உலகில் வேறு எங்கும் காணமுடியாத விழா

பதினோராம் நாளன்று மாலையில் நிகழும் மௌனத் திருவிழா உலகில் வேறெங்குமே காணமுடியாத விழாவாகும். இவ் விழாவில் ஏழுதடவைகள் சோமாஸ்கந்தமூர்த்தி உள்வீதியில் வலம் வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ் ஏழு தடவைகளில் முதலிரண்டு தடவைகளும் வேதசிவாகமஸ் தோத்திர பாராயணத்துடனும் அடுத்து இரண்டு தடவைகளும் திருமுறைப் பாராயணத்துடனும் அடுத்து ஒரு தடவை நாதஸ்வர இசையுடனும் அடுத்து ஒருதடவை தவிலிசையுடனும் நிறைவாக ஏழாவது தடவை முழுவதும் மௌனப் பிரார்த்தனையுடனும் திருவீதிவலம் நிகழ்தலை வேறு எங்குமே காணமுடியாது.

பன்னிரண்டாம் நாளன்று மாலையில் சண்டீஸ்வர உற்சவம் நிகழும். அனேக சைவாலயங்களில் தீர்த்த நாளில் நிகழும் கொடியிறக்கத்துடனேயே மௌனோற்சவம், சண்டேஸ்வர உற்சவம், ஆசாரிய உற்சவம் ஆகியவும் நிகழ்கின்றன. இங்கு நிகழும் சண்டீஸ்வர உற்சவங் கூட தனிச்சிறப்பு உடையது. சண்டீஸர் வரலாறு கூறும் திருமுறைப் பாடல்களெல்லாம் ஓதப் பெற்று அவருக்குச் சோடஷ உபசார பூசை நிகழ்த்தி உலாச் செய்தலை இங்கு தரிசிக்கலாம். தொடர்ந்து ஆச்சார்ய உற்சவத்தையும் தரிசித்துக் குருவருள் பெறலாம்.

பதின்மூன்றாம் நாளன்று அர்த்தசாமப் பூசையுடன் வைரவர் மடை நிகழ்கிறது. சிவப்பு வஸ்திரப் போர்வை, சிவப்பு நிறப் பூமாலை அலங்காரம் என்பன செய்து வெண்சாதம், பிட்டு, வடைமாலை என்பன படையலிட்டு விஷேடமாக வழிபாடு நிகழக் காணலாம். தொடர்ந்து தேரடி வைரவருக்கும் பொங்கல் வழிபாடுகள் சிறப்புச் செய்து விழாவை நிறைவாக்குவர். மேலும், இந்த ஆண்டிலிருந்து சரபேஸ்வரர் உற்சவமும் ஆரம்பமாதலும் சிறப்புடையதாகும். இந்த விழா எட்டாம் திருவிழாவன்று மாலை 5 மணிப் பூசையுடன் நிகழ ஏற்பாடாகியுள்ளது.

ஈழத்திலே சரபேஸ்வரர் மூர்த்தம் இருக்கும் ஒரேயொரு தலம் இதுவேயாகும். தமிழ் நாடு - கும்பகோணத்தில் ''சரபேஸ்வரர் கோயில்'' என்றொரு கோயிலுண்டு. அங்குள்ள மூர்த்தியின் அமைப்பில் இங்கும் சரபேஸ்வரர் வீற்றிருந்து அருள்கிறார். பில்லி, சூனியம் முதலிய தோஷங்களாலே தவிப்பவர்கள் தரிசித்தால் தோஷங்கள் நீங்கும் என்றும் தீயசக்திகளை விரட்டும் அசாமானிய சக்தி கிடைக்கும் என்றும் ஆகமங்கள் கூறுகின்றன. நாட்டிலே தீமைகள் அகலவும் இந்த மூர்த்தியை வழிபடுதல் விஷேடமாகச் சொல்லப்பட்டுள்ளது.

**அனுசாந்தன்**

இவ்வாறாக திருக்கேதீச்சரத் திருக்கோயிலிலே நிகழும் திருவிழாக்களில் பல்வேறு சிறப்புக்கள் உண்டு. இவற்றை நேரே தரிசிப்போரே உணர்வர். ஆதலால் ''பாலாவியின் கரையிற் கேதீச்சரம் அடைமின்னே!''.


# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு

## பிரம்மஸ்ரீ யோகீஸ்வரக் குருக்கள் பிரபாகரேஸ்வரக் குருக்கள்

**(பிரதமகுரு, யாழ்.அத்தியடி விநாயகர் ஆலயம்)**





கடந்த 08.05.2011 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்தி கோயில் பிரதமகுரு யோகீஸ்வரக் குருக்கள் - சுபதாம்பிகையம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வனும் காலஞ்சென்ற சபாபதிக்குருக்கள் மற்றும் நாகரத்தினம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் கேதீஸ்வரசர்மா (கரவெட்டி), ஞானேஸ்வரக் குருக்கள் (வவுனியா), சாயாதேவி, நித்தியானந்தினி (கொழும்பு), ரஞ்சிதக்குருக்கள் (கொழும்பு), ஜெகதீஸ்வரசர்மா (அத்தியடி), காலஞ்சென்ற கிருஷ்ணராஜசர்மா மற்றும் சுபாஸ்கரக்குருக்கள் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தனலட்சுமி, கலாராணி, ஜீவநாதசர்மா, கணேசராஜக்குருக்கள், ரமாராணி, வைதேகி, உருத்திரானந்தக்குருக்கள் (கிளிஜயா- பெல்ஜியம்), தாட்சாயினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரகதாம்பிகை, பாலகிருஷ்ண சர்மா ஆகியோரின் சகலனும் சுவஸ்திகா- சாந்தரூபசர்மா, சுதாத்மிகா, நிரோஜினி, நிரோஜனன், நீருஜா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், ரமாஜித சர்மாவின் (கண்ணா) அன்புப் பெரியப்பாவும், ராகினி- அனந்தசர்மா (லண்டன்),யாழினி- கணேசராஜகுருக்கள் (அரியாலை) , சௌமியா, ஹர்ஷன்(பெல்ஜியம்), சம்பூர்ணா (பெல்ஜியம்) , வைசாகன்(பெல்ஜியம்) , மதுஷன் (பெல்ஜியம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜோஷிகா(லண்டன்), ஜோஷ்னா (லண்டன்), தேஜஸ்வினி (அரியாலை) , ஸ்மிருதிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாகிய பிரபாகரேஸ்வரக்குருக்கள் அவர்களின் தசாகாதி கிரஹயக்ஞும் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

சந்தனத் தொட்டிலில்
11.02.1966
சந்தனப் பேழையில்
08.05.2011

★ 17.05.2011 செவ்வாய் முற்பகல் 10 மணி- தசாகம்
★ 20.05.2011 வெள்ளி நண்பகல் 12 மணி - கிரஹயக்ஞும் (சமாராதனை)
★ 21.05.2011 சனி காலை 9 மணிக்கு அமரருக்கு நினைவுச் சுடரேற்றி நினைவுப் பேருரைகள், நினைவுமலர் வெளியீடும் நடைபெற்று தொடர்ந்து மதிய போசனமும் நடைபெறும்.

★ **இடம்:- அத்தியடி கணபதி கலாசார மண்டபம்.**

அழைப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் தயவுசெய்து இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இதில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



பிள்ளையார் கோயில்,
அத்தியடி, யாழ்ப்பாணம்.
021-222 9450

(49,21,25)

**மனைவி நாகேஸ்வரி**
**மற்றும் யோகீஸ்வரக்குருக்கள் குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கராயன்குளம் கரும்புத்தோட்டக் காணியை இராணுவத்துக்கு வழங்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, மே 16

கிளிநொச்சி, அக்கராயன் குளம் பகுதியில் உள்ள கரும்புத் தோட்டக் காணியை இராணுவத்தினரின் பாவனைக்கு முழுமையாக வழங்குமாறு இராணுவத்தினரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் அக்கராயன் குளம் பகுதியில் உள்ள கரும்புத் தோட்டக் காணியைப் படையினரின் பாவனைக்கு வழங்குவதற்கான ஒப்புதல் கோரப்பட்டது. குறித்த காணி 25 தனி நபர்களுக்கு உரிமையானதெனவும் இதனைத் தற்போது ஏழை விவசாயிகளே பயன்படுத்தி வருகின்றனர் எனவும் இதனை காணிகளற்ற தற்போது இதில் செய்கைகளில் ஈடுபட்டுவரும் விவசாயிகளுக்கே வழங்க வேண்டும் எனவும் கமக்கார அமைப்பினரால் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடப்பட்ட போது குறித்த அந்தப் பகுதிக்கு பொறுப்பாக இருக்கின்ற இராணுவப் பொறுப்பதிகாரி பிரிகேடியர் அத்தப்பத்து கருத்துத் தெரிவிக்கும் போது மேற்படி கரும்புத் தோட்டத்தில் 250 ஏக்கர் காணி இருப்பதாகவும் அதனைத் தமது தேவைக்கு பயன்படுத்தப் போவதாகவும் தெரிவித்தார்.

யாழ். பலாலி மற்றும் இயக்கச்சி ஆகிய பகுதிகளில் தமது படையணிகள் பொதுமக்களின் காணிகளில் இருப்பதாகவும் அக்காணிகளை உரியவர்களிடம் வழங்க வேண்டியுள்ளதாகவும் மேற்படி இடங்களில் உள்ள படையினரை இந்தப் பகுதிக்கே மாற்ற வேண்டியுள்ளதாகவும் தெரிவித்த அவர் இக்காணி அரசுக்குச் சொந்தமான காணியாகவே காணப்படுவதுடன் முன்னர் விடுதலைப் புலிகள் பயன்படுத்தி வந்துள்ளனர் என்றும் இதனைத் தற்போது தாங்கள் விவசாயப் பண்ணையாகப் பயன்படுத்தப் போவதாகவும் வேறுயாரும் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் காணியுடன் தொடர்புடைய பொதுமக்களின் பிரதிநிதிகள் எவரும் சமுகம் கொடுக்காத நிலையில் அந்தப் பகுதி மக்களுடன் கலந்துரையாடி அதன்படி செயற்பட வேண்டும் எனப் பலராலும் கூறப்பட்டது.

இதனையடுத்து அந்தப் பகுதி மக்களுடன் கலந்துரையாடி அதற்கான தீர்மானங்களை எடுக்க வேண்டும் என மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (க-6)

## பசளைக் களஞ்சியங்கள்

கிளிநொச்சி, மே 16

கமநல அபிவிருத்தித் திணைக்களம் கிளிநொச்சி மாவட்டத்தில் கமநல சேவை நிலையத்துக்கு பசளைக் களஞ்சியம் ஒன்றை நிர்மாணிக்க ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. அதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்திலும் கமநல சேவை நிலையத்துக்கு பசளைக் களஞ்சியம் ஒன்றை அமைக்க கமநல அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த இரு மாவட்டங்களிலும் பசளைக் களஞ்சியங்கள் அமைக்கப்படுவதனால் விவசாயிகள் பெரும் நன்மையடைவர் என்று தெரிவிக்கப்பட்டது. (க-122)

## அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிப் பட்டறை கிளிநொச்சியில்

கிளிநொச்சி, மே 16

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் அனர்த்த முகாமைத்துவத் திட்டம் தயாரித்தல் தொடர்பான பயிற்சிப்பட்டறை ஒன்று நடைபெற்றுள்ளது.

கடந்த 12 ஆம் திகதி காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இந்தப் பயிற்சி நடைபெற்றுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ அதிகார சபையின் தலைவர் காமினி ஹெட்டியாராட்சி மற்றும் அனர்த்த முகாமைத்துவ அதிகார சபையினைச் சேர்ந்த பாலித பண்டார ஆகியோர் இதில் கலந்துகொண்டு திட்டம் தொடர்பான கருத்துக்களை வழங்கியதுடன் அனர்த்த முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தினையும் வழங்கினர். அத்துடன் பல குழுக்கள் தெரிவு செய்யப்பட்டுத் திட்டங்கள் தயாரித்தல் அதன்படி செயற்படுதல் பற்றியும் கருத்துக்கள் வழங்கப்பட்டன.

இந்தச் செயலமர்வில் இராணுவப் பொறுப்பதிகாரி, பொலிஸ் பொறுப்பதிகாரி அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், திணைக்களங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-6)

## மீள் எழுச்சித் திட்ட வேலைகளை முன்னெடுப்பதற்கு அலுவலகம்

அக்கராயன், மே 16

அக்கராயன் பகுதிக்கான மீள் எழுச்சித் திட்ட வேலைகளை முன்னெடுப்பதற்காக அலுவலகமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி அக்கராயன் கிராம அலுவலர் கு.துஸ்யந்தன் இந்த அலுவலகத்தைத் திறந்து வைத்துள்ளார்.

அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் வாழ்வாதார முயற்சிகளை முன்னெடுப்பதற்கு மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் 76 லட்சம் ரூபா கடனாகப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை மக்கள் கையளித்துள்ள நிலையில் அக்கராயனில் திறந்து வைக்கப்பட்டுள்ள மீள் எழுச்சித் திட்ட அலுவலகம் ஊடாக மக்களுக்கான உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இக் கடனுதவிகளை கால்நடை வளர்ப்பு, விவசாயம், சிறு வியாபாரம் போன்ற தொழில் முயற்சிகளுக்குப் பயன்படுத்தலாமெனத் தெரிவிக்கப்பட்டது. (க-410)

## கிளிநொச்சியில் ஊர்வலம்

கிளிநொச்சி, மே 16

கிளிநொச்சி பிரதேசத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மலேரியா ஒழிப்புத் தொடர்பான ஊர்வலம் ஒன்றை நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உலக மலேரியா தினம் மற்றும் இலங்கையில் மலேரியா ஒழிப்பு இயக்கத்தின் 100 வருட பூர்த்தி ஆகியவற்றை முன்னிட்டு நாட்டின் பல இடங்களிலும் பல்வேறு நிகழ்ச்சிகளை மலேரியா தடை இயக்கம் நடத்தி வருகின்றது.

இதன் ஓர் அங்கமாக கிளிநொச்சியில் மேற்படி ஊர்வலம் ஒன்று அன்றைய தினம் நடத்த மலேரியா தடை இயக்கம் ஏற்பாடுகளைச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-122)

### தீர்க்கமான ஆலோசனை...



கட்டடங்கள் எழட்டும்: முல்லைத்தீவு திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்துக்கு வருகை தந்த மீள் குடியேற்ற அமைச்சர் குணரட்ண வீரக்கோன் பாடசாலையில் அமைக்கப்படவுள்ள இரு மாடிக் கட்டடம் தொடர்பாக அதிகாரிகளுடன் உரையாடிக் கொண்டிருக்கின்றார். (410)

## பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கும் கிளிநொச்சி கல்லாறு தமிழ் வித்தியாலயம்

கிளிநொச்சி, மே 16

கிளிநொச்சி, கல்லாறு தமிழ் வித்தியாலயம் பல்வேறு அடிப்படை வசதிக் குறைபாடுகளுடன் இயங்கி வருவதனால் இங்கு கல்வி கற்று வரும் மாணவர்களின் கல்வி நிலை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

கிளிநொச்சி, கல்லாறு தமிழ் வித்தியாலயத்தில் தரம் ஒன்று முதல் ஒன்பது வரையான வகுப்புக்களில் சுமார் 212 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இந்த நிலையில் வகுப்பறைக்கான போதிய கட்டடவசதிகள் இன்றி மரநிழல்களின் கீழ் வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

அத்துடன் ஆசிரியர்களுக்கான விடுதி வசதிகள் கூட இல்லாத நிலை காணப்படுகின்றது. மேலும் போதிய குடிதண்ணீர் வசதிகள் இன்றியும் இந்தப் பாடசாலை காணப்படுகின்றது. இதனால் இந்தப் பாடசாலை மாணவர்களின் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றது.

குடிதண்ணீருக்காகத் தினமும் பாடசாலை வளாகத்தினுள் வைக்கப்பட்டுள்ள குடிதண்ணீர் தாங்கியினுள் ஆயிரம் லீற்றர் நீர் நிரப்பப்படுகின்றது. இதனைப் பாடசாலை மாணவர்களும் சுற்றாடலில் உள்ள மக்களும் பயன்படுத்துகின்றனர்.

இந்தப் பாடசாலையில் அதிபர் உட்பட ஏழு ஆசிரியர்கள் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் நிலையில் நான்கு ஆசிரியர்கள் வேறு மாவட்டங்களில் இருந்து தினமும் வந்து செல்கின்றனர்.

அத்துடன் அதிக மாணவர்கள் காலை உணவு கூட இன்றியே பாடசாலைக்கு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

ஆகவே இந்தப் பாடசாலையின் குறைபாடுகளை உடனடியாகக் களையுமாறு உரிய அதிகாரிகளுக்கு பாடசாலைச் சமூகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-6)

# வவுனியாவில் கால்நடைப் பண்ணை

வவுனியா, மே 16

உலக வங்கியின் நிதியுதவியுடன் வவுனியாவில் மிகப் பிரமாண்டமான கால்நடை உற்பத்தி பண்ணை அமைக்கப்படவுள்ளதாக அந்த மாவட்ட அரச அதிபர் திருமதி எவ்.எச். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வவுனியா மாவட்டத்தில் கால்நடை அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படுகின்ற இந்தத் திட்டத்துக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு பிரதான அனுசரணையாளராகச் செயற்படவுள்ளது.

200 ஏக்கர் நிலப்பரப்பில் கனகராயன் குளத்தில் அமைக்கப்படவுள்ள இந்தப் பண்ணை தொடர்பான மதிப்பீட்டுப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருவதாகவும் விரைவில் இதனை ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

## பூநகரிப் பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டம் ஒத்திவைப்பு

பூநகரி, மே 16

பூநகரிப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் கே.எஸ். வசந்தகுமார் அறிவித்துள்ளார்.

மேற்படி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அடுத்த மாதம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசிய தேவைகள் நிறைவேற்றப்படாமையாலேயே மக்கள் தனியான பிரதேச சபையைக் கோருகின்றனர்

## ஆளும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் தெரிவிப்பு

அம்பாறை, மே 16

கல்முனை மாநகரசபை, சாய்ந்தமருது பிரதேசத்தின் அவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்கத் தவறியிருப்பதனாலேயே அந்த மக்கள் தமக்கெனத் தனியான பிரதேச சபையை ஏற்படுத்தித்தருமாறு கோரி வருகின்றனர் என்று ஆளும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எம்.ஜலால்தீன் தெரிவித்தார்.

கல்முனை மாநகராட்சி மன்றத்தின் மாதாந்த சபை அமர்வு கடந்த புதன்கிழமை முதல்வர் அல்ஹாஜ் எஸ்.இஸட், எம்.மசூர் மௌலானா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

சாய்ந்தமருது பிரதேசத்திலுள்ள சில வீதிகளில் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக கழிவுப் பொருள்கள் அகற்றப்படவில்லை. இதனால் மக்கள் அசௌகரியத்துக்குள்ளாகி வருகின்றனர். உழவு இயந்திரங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஆளணியினரும் அதிகரிக்கப்பட்டுள்ளனர். இந்தநிலையில் எமது மக்களுக்குரிய சேவைகள் திருப்திகரமாக முன்னெடுக்கப்படவில்லை.

ஊழியர்களின் அலட்சியப் போக்கினாலேயே எமது மாநகர சபை மீது மக்கள் நம்பிக்கையிழந்துள்ளனர். தெருவிளக்கு பராமரிப்பு, கழிவுப் பொருள்களை அகற்றல் போன்ற சேவைகளைச் சீராக முன்னெடுப்போமாயின் எமது மாநகரசபை மீது எவ்வித குற்றச்சாட்டும் எழ வாய்ப்பில்லை.

எமது மாநகரசபை ஊழியர்கள் அலுவலகத்துக்கு உரிய நேரத்துக்குச் சமுகமளிப்பதில்லை; அவர்களுடைய பொறுப்புகளை உணர்ந்து செயற்படுவதில்லை; அலுவலக நேரத்தில் கடமையில் இருப்பதில்லை; மக்கள் பணியில் அவர்கள் அக்கறை செலுத்துவதாக இல்லை.

இந்த அவலம் சீர்செய்யப்பட வேண்டும். நிர்வாகம் சீரமைக்கப்பட்டால் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டுவிடலாம். அதன்மூலம் மக்களுக்கு நிறைவான சேவைகளை வழங்க முடியும்- என்றார். (ச)

# கிழக்கு ஆசிரியர் இடமாற்றத் திட்டத்தை மீள் பரிசீலனை செய்யுமாறு கோரிக்கை

அம்பாறை, மே 16

கிழக்கு மாகாணத்தில் அமுல்படுத்தப்படவுள்ள ஆசிரியர் இடமாற்றத்திட்டத்தை மீள் பரிசீலனை செய்யுமாறு அகில இலங்கை ஜம்மிய்யத்துல் உலமா சபையின் கல்முனை - சாய்ந்தமருது பிராந்தியக்கிளை, மாகாண ஆளுநர் ரியல் அட்மிரல் மொஹான் விஜய விக்கிரமவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மே மாதம் முற்பகுதியில் அமுலுக்கு வரவுள்ள இந்த இடமாற்றத்திட்டத்தினால் ஆசிரியர்களும் மாணவர்களும் பாடசாலை நிர்வாகத்தினரும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவர் எனவும் உலமா சபைக் கிளை சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக ஆசிரியர்கள் இதனால் பாதிக்கப்படுவர் என உலமா சபை, ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளது. அத்துடன் பாடசாலைகளிலும் சமூகத்திலும் பல்வேறு பிரச்சினைகள் உருவாவதற்கும் இந்த ஆசிரியர் இடமாற்றத்திட்டம் வழிவகுக்கும் எனவும் உலமாசபை தெரிவித்துள்ளது.

இந்தத்திட்டம் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ள உலமாசபை, குறைந்த பட்சம் பெண் ஆசிரியைகளையாவது இந்த இடமாற்றத் திட்டத்திலிருந்து விடுவிப்புச் செய்வதற்கோ அல்லது அவர்களை வலயத்தினுள் இடமாற்றம் செய்வதற்கோ ஆவன செய்யுமாறு வலியுறுத்தியுள்ளது. (ச-30)

# திருமலை மாவட்டத்தில் உப்பளம்; கிழக்கு மாகாண சபை அங்கீகாரம்

திருகோணமலை,மே16

திருகோணமலை மாவட்ட கும்புறுப்பிட்டி கிராமத்திலுள்ள சின்னக்கரைச்சிப் பகுதியில் உப்பளம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்காக 240 ஏக்கர் காணியை மில்ஹ் என்ற தனியார் நிறுவனத்துக்கு நீண்டகாலக் குத்தகைக்கு வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தப்புதிய உப்பளம் 526 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கக்கூடியதாக இருக்குமென்று அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் உட்பட இதர பல தீர்மானங்களுக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட சல்லித்தீவு கிராமத்தில் சொகுசு விடுதிகளை அமைப்பதற்காக ரிசோர்ட்ஸ் லிமிட்டெட் எனும் தனியார் நிறுவனத்துக்கு 2.5 ஏக்கர் விஸ்தீரணமுள்ள அரச காணியை குத்தகைக்கு வழங்குவதற்கும் மாகாண சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மாகாண சபை அங்கீகாரம் வழங்கியுள்ள ஏனைய தீர்மானங்கள் வருமாறு:


* நிந்தவூர் ஆயுர்வேத மத்திய மருந்தகத்தை கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலையாகத் தரம் உயர்த்துதல்.
* தெஹியத்த கண்டியில் ஆயுர்வேத மாவட்ட வைத்தியசாலை ஒன்றை நிர்மாணித்தல்.
* அட்டாளைச்சேனை கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலையை மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையாகத் தரம் உயர்த்துதல்.
* கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக கடன் அடிப்படையில் நுகர்வுப் பொருள்களை வழங்குவதற்கான செயற்றிட்டத்தை பரீட்சார்த்தமாக முதலில் ஏறாவூர் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்துதல்.
* கிழக்கு மாகாண பிரதேச அபிவிருத்தியை மேம்படுத்தும் முகமாக நடைபெறும் வேலைத் திட்டங்களை செயற்படுத்தும் பொருட்டு முஸ்லிம் காங்கிரஸ் மாகாண சபையின் ஏழு உறுப்பினர்களுக்கு மாதாந்தம் தலா 30 ஆயிரம் ரூபாவை எரிபொருள்களுக்காக வழங்குதல் போன்ற தீர்மானங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (ச)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# புங்குடுதீவு, பெருங்காடு- கிராஞ்சியம்பதி
# ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோயில்
## தேர்த் திருவிழா சிறப்புமலர் – 16.05.2011



### நல்லை ஆதீன குரு முதல்வரின் அருளாசிச் செய்தி



கலியுக வரதனான கந்தன் புங்குடுதீவு, பெருங்காடு கிராஞ்சியம்பதியில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலிக்கின்றான். இன்று அந்த அருள் மிகு கந்தனுக்குத் தேர்த் திருவிழா அழகன் முருகன் தேரிலே ஆரோகணித்து வீதிவலம் வரும் அற்புதக் காட்சி இன்று பக்தி மயமாக இருக்கும்

புங்குடுதீவிலே பெருங்காடு கிராஞ்சியம்பதி ஆலயத்திலே அருளாட்சிபுரியும் ஆறுமுகப் பெருமான் இன்று தேரேறி அடியார்க்கு அருள்புரிய வருகின்றான். அந்த அருள் மிகு கந்தன் திருவருள் புங்குடுதீவு வாழ்மகக்கள் அனைவருக்கும் கிடைக்கவேண்டுமென நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து கந்தன் கருணை வேண்டி உளமாரப் பிரார்த்தித்து அருளாசி நல்கி வாழ்த்துகின்றோம்.

கிராஞ்சியம்பதி அடியார்கள் அழகன் ஆறுமுகன் சரவணனின் திருவருளுக்குப் பாத்திரமாகி மனமகிழ்ச்சியுடன் வாழ வேண்டுமென ஆசி கூறி உளமிக மகிழ்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஆதீன குரு முதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்,
*இரண்டாவது குருமஹா சந்நிதானம், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.*

### மஹோற்சவ குருவின் ஆசியுரை

*"வல்லீகாந்த ஸ்மாணம் ஜெ, ஜெ ஷீப்ரம் மண்ஜோம்..."*



எல்லாம் வல்ல அருள்வளர் புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சி என்னும் திருத்தலத்தில் வள்ளி, தேவசேனாசமேத முருகப் பெருமான் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன ஒருங்கே அமையப் பெற்று பன்நெடுங்காலமாக அருளாட்சி செய்துவரும் திருக்கோயிலில் மங்களகரமான 'கர' என்னும் திவ்யா வருஷம் வைகாசிப் பூரணையும் விசாக நட்சத்திரமும் கூடிய முருகனுக்கேற்ற நன்நாளில் பதிநொராம்நாள் பெரும் திருவிழா எடுக்கப்படுகின்றது. பத்தாம் நாளாகிய இன்று (திங்கள்) காலை உதயசூரியன் போல் பிரகாசிக்கும் சண்முகப் பெருமான் தேவியர் இருவருடன் திருத்தேரில் பவனிவரும் காட்சி வழிபடும் அடியவர் மனத்தில் அழியாத காட்சியாகும். வழிபடும் அடியவர்களின் குறைகளைக்களைந்து அவர்களைத் தன்னகத்தே ஆட்கொள்ளும் திருவிளையாடலே இராதோற்சவமாகும். " யாமிருக்கப் பயமேன்" எங்கின்ற திருவாக்கும் " ஏறுமயில் ஏறி விளையாடும் ஆறுமுகத்தோன்" திருத்தேரில் அமர்ந்து உலாவரும் போது அவன் தேர்வடம் பிடித்து அவன் திருவடிநிழலை அடையும் பெரும்பாக்கியம் பெற முருகன் சேவற் கொடியோனும் மயிலின் அகவலும் அழைக்கும் பெரும்பாக்கியம் பெற்றோர்பலர். அந்த முருகனுக்கு ஒரு சிறபத்தேர் அமைக்கும் பணியும், ஆலய இராஜ கோபுரத் திருப்பணியும், ஆலயத்தைப் புணரமைத்து திருக்குடமுழுக்கைக் கான ஆலய தர்மகர்த்தா பரிபாலனசபையினரதும், திருப்பணி சபையினரதும், தர்மசீலர்களினதும் பெரும்பங்கு அளப்பரியது. எல்லோர் முயற்சியும் திருவினையாக்க முருகன் அருளாசியை குருமுகமாக இப் பூவுலகில் வழும் குருநாதன் அடியார்களை வாழ்த்தும் பேறு அளப்பரியது.

*நன்றியுடன் எல்லா வளமும் பெற்று வாழ வாழ்த்தும்,*

மஹோற்சவ குரு சிவஸ்ரீ பரம முத்துகுமாரசாமி குருக்கள்,
ஸாஹித்திய சிரேன்மணி, கோவையாதீனம்

### பொருளாளரின் ஆசிச்செய்தி

எமது வழிபடு தெய்வமான எங்கும் நிறைந்த பரம் பொருள் ஸ்ரீ கந்தசுவாமி அவர்கள் இன்றைய தினம் தேரிலே ஆரோகணித்து அருட்காட்சி தருகின்றார். கலியுக வரதனாக விளங்குகின்ற கந்தக் கடவுள் இன்று கை தொழுது அழுது அரற்றி நிற்கின்ற அடியார்களுக்கு அருட்காட்சி நல்கி திரு வீதி வலம் வருகின்றார்.

வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென் னியும் தந்த பரமகருணாநிதியாகிய பரந்தாமன் மருகன் சரவணபவன் இன்று சித்திரத் தேரிலே சிங்காரப்பவனி வருகின்றார். அந்த முருகப் பெருமானுடைய திருவருள் புங்குடுதீவு வாழ் மக்களுக்குப் புதுப்பொலிவு நிறைந்த புது வாழ்வை நல்க வேண்டுமென்று பிரார்த்தித்து வாழ்த் துகின்றேன்.

புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி நற்சிறப்போடு திகழ எல்லாம் வல்ல கந்தசுவாமியானவர் அருள் புரிய வேண்டுமென்று ஆசி நல்கி அமைகின்றேன்.

*'கந்தன் கருணை எங்கும் சிறக்கட்டும்'*

**கா.நித்தியானந்தன்.**
*புங்குடுதீவு, பெருங்காடு கிராஞ்சியம்பதி,*
*ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோயில்.*

### தேரேறி வந்து அருட்காட்சி தருக!



புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி புண்ணிய திருத்தலத்திலே இன்று ரதோற்சவம். கை தொழுவார்க்கு வரமருளும் கந்தப்பெருமான் அழகிய ரதத்திலே ஆரோகணித்து ஆறுமுகப் பெருமானாக அருள்புரியும் அற்புதத் திருக்காட்சியை இன்று கண்குளிரக் காணலாம். தேர்த்திரு விழா அழித்தலைக் குறிப்பதால் முருகன் ஸ்ரீவள்ளி தேவசேனாபதியாக எழுந்தருளி துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்ய இன்று தேரிலே பவனி வருகின் றான். அந்த அழகிய சரவணபவனின் திருவருளானது அடியார்கள் அனைவருக்கும் கிடைத்து அவனியிலே மங்களகரமான நல்வாழ்க்கை வாழ வேண்டு மென்று ஆசிகள் வழங்கி வணங்கி வாழ்த்துகின்றேன்.

குறிஞ்சிக் கடவுளான முருகன் கிராஞ்சியம்பதி வாழ்கின்ற அனைத்து அடியார்களுக்கும் அருள் புரிந்து எல்லோரும் சுகானந்தப் பெருவாழ்வு வாழப் பெருமகிழ்ச்சியுடன் நல்லாசி கூறி வாழ்த்துகின்றேன்.

*" அழகன் முருகன் திருவருள் எங்கும் பரவட்டும்"*

கந்தன் கழல் பணியும் சிவநெறிக் கலாநிதி
**இராசையா ஸ்ரீதரன்**

### ஆலய பரிபாலன சபைத் தலைவரின் ஆசி



இன்று புங்குடுதீவு வாழ்மக்களுக்கு ஒரு புண்ணியப் பெருநாள் பெருங்காடு கிராஞ்சியம்பதியிலே இன்று கந்தனுக்குத் தேரோட்டம். அடியார் பெருமக்கள் அனைவரும் அருள்மிகு கந்தப் பெருமானின் அலங்கார க் காட்சிகாண பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும். அவனருளாலே அவன் தாள் வணங்கவேண்டும்.

சித்திரத் தேரிலே அலங்காரப் பவனிவரும் அழகன் முருகனின் திருவருள் எல்லா அடியவர்களுக்கும் கிடைக்க வேண்டும். இதுவரை காலமும் பட்ட துன்ப துயரங்கள் விலகி இன்று முதல் மகிழ்ச்சியோடிணைந்த மங்களகரமான மகோன்னதப் பெருவாழ்விலே அடியார்கள் ஆனந்தம் காண வேண்டுமென விரும்புகின்றோம்.

இன்று தேர்மீது ஆரோகணிக்கும் ஆறுமுகன் ஆனந்த நல்வாழ்வு அடியவர்களுக்கருள வேண்டு மென்று ஆசி கூறி வாழ்த்துகின்றோம்.

*" வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை"*

தலைவர், கலாநிதி சு.நித்தியானந்தன் J.P ,
ஆலயபரிபாலன சபை.

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
**றோயல்** குளுக்கோஸ் **100% சுத்தமானது**
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுகோஸ் என்று கேட்காமல்
**றோயல் குளுகோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்**
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
Packed By: Royal Industries
Colombo-12.
T.P:0777277670
ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா, 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## தேர்த் திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்கள்....

**யாழ்ப்பாண வணிக நிலையம்**
336, 1ஆம் மாடி பல்பொருள் வாணிபம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
**J.T றான்ஸ்போட் சேவிஸ்,**
(கொழும்பு, யாழ்ப்பாணம்)T9, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 021 5672214

***ESAN***
**Travels & Tours**
T.P: 0212224168, 0729566698.
**ஈசன் களஞ்சியம்**
134, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**அம்பிகாபதி**
Ambihapathy Fancy Goods
Dealersin: Immitation Jewellery,
Fancy Goods& Cosmetics
66, பெரியகடை, யாழ்ப்பாணம்.
T.P: 2227002

**நாதன் சூ பலஸ்**
இல.17,நவீனசந்தை, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
**அபிராமி மல்ரி சென்ரர்**
இல.127/3, யுப்ளி பசார்,
மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222858.

***KABILA***
**Shoe Palace**
Prop.S.Kapilan
No.24, Kasthuriyar Road,
Jaffna.

**ராஜலக்ஷ்மி**
கட்டட பொருள் விற்பனையகம்
*இல.132, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*
T.P: 021 222 4350

**சித்தி விநாயகர் களஞ்சியம்**
No.66 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

*அசல் 22 கரட் தங்க நகைகளை*
*அழகிய டிசைன்களில்*
**நியூ கல்யாணி ஜுவல்லறி**
உரிமையாளர்: லயன்
கலாநிதி சு.நித்தியானந்தன் (ஜே.பி)
இல.24, வளாக வீதி,
(யாழ் பல்கலைக்கழக மக்கள் வங்கி முன்பாக)
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 4590256,
0777280268.

**மாகோ களஞ்சியம்**
97C (3), மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 2222818

T.T.Sivathasan Proprietor
**கரசன்ஸ்**
எலெக்றிக்கல்ஸ்
No.(4) 14, Stanley Road,
J.M.C. Building, Jaffna.
Tel:+94-21-2229607

**சிறி சிவராம் ரேடர்ஸ்**
248, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 0212228629, 0777560760.

**பொன்னையா மகேந்திரன்**
3ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராச கோபுர திருப்பணி வேலை நடைபெறுகின்றது. நிதி உதவி வழங்குபவர்கள் இராச கோபுர நிர்வாகத்துடன் தொ[illegible]ளவும்.





# அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயம்

# தேர்த் திருவிழாச் சிறப்புமலர் 16.05.2011

## அநியாயங்களையும் அக்கிரமங்களையும் அழித்தொழிக்க சிங்காரப் பவனி வருகிறார்



அளவெட்டி கும்பழாவளையில் இன்று அருள்மிகு தேரோட்டம் விக்கினம் தீர்க்கும் விநாயகப் பெருமான் அடியார்களின் வினை களைய இன்று தேரிலே ஆரோகணிக்கின்றார்.

மஹோற்சவத்திலே தேர்த் திருவிழா அழித்தலைக் குறிப்பதால் இன்று கும்பழாவளையிலே அநியாயங்களையும் அக்கிரமங்களையும் அழித்தொழிக்க பிள்ளையார் சித்திரத் தேரேறிச் சிங்காரப் பவனி வருகிறார்.

அளவெட்டி வாழ் அடியார் பெருமக்கள் அனைவரும் ஆனைமுகப் பெருமானின் அருளுக்குப் பாத்திரமாகி வளமோடு வாழ வேண்டும் என்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசிகள் வழங்குவதில் பேருவகையுறுகின்றோம்.

வேரோடு வினைகளையும் விநாயகர் இன்று தேரேறி வந்து அருள்பாலிக்கவேண்டுமென்று ஆசி நல்கி வாழ்த்துகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஆதீன குருமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், இரண்டாவது குருமஹாசந்நிதானம்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

## பிரதம குருக்களின் ஆசி

உலகத் திசையாகவும் உன்னதப் புகழ்கொண்டு தனித்துவமான கிராமமாகத் திகழ்ந்து வரும் எங்கள் அளவெட்டியின் அனைத்துப் பெருமைகளுக்கும் ஆணிவேரான கும்பழாவளைப் பெருமானுக்கு இன்று இரதோற்சவ நன்நாள். அளவையூர் மக்களுக்கு மட்டுமின்றி கடல் கடந்து அந்நிய தேசத்தில் வதியும் மக்களுக்கும் என்றும் அருளாட்சி புரிந்துவரும் ஓம்காரப் பிரணவ சொரூபன் ஆகிய விநாயன் இன்று இரதமேறி வந்து இன்னல்கள் போக்குவான். எங்கள் ஈழத் திருநாட்டில் நிரந்தர அமைதி பிறக்க என்றும் தன்னருள் தருவான். எனவே அடியார்கள் அனைவரும் இன்றைய தேர்த் திருநாளில் கலந்து எம் பெருமானின் அருளைப் பெற்று வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல கும்பழாவளையானை பிரார்த்தித்து ஆசி வழங்குகின்றோம்.

'ரதேப்பியோ ரதபதிப் பியச்சவோ நமோ நமோ'

சிவஸ்ரீ சோம குமாரதாசக் குருக்கள்
ஆலய பிரதம குருவும் மஹோற்சவ குருவும்

## ஆலயத் தல மகிமையும் வரலாறும்

"வாழ்வதுஞ் சிறபகலாய்வதுஞ் சிற்சில வாட்டும்பிணி.
ஆழ்வதுன் துன்பக்கடல் என்று நைந்தனனாகி நின்னைத்
தாழ்வது வேண்டிற் நடுத்தருள் வாயெனத்தாவி வந்தேன்
ஆழ்வது வேண்டு மருட் கும்பழாவளை யங்குசனே"

ஈழமண்டலத்தின் வடபாகமாய் உள்ள யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த அளவை மா மத்தியஸ் தலமாயுள்ள கும்பழாவளைப்பகுதியில் எழுந்தருளியிருக்கும் விக்னேஸ்வர ஆலய வரலாற்றை மெய்யடியார்களின் பக்தி வளர்ச்சியின் பொருட்டு காலங்கண்ட முதியோர்கள் வாய்கேட்டறிந்தபடி வரலாற்றினை எழுதுவதில் பெருமையடைகிறேன்.

பூர்வீகத்திலே மாருதப்புரவீக வல்லி என்னும் பெயருடைய சோழவரசியளங்கன்னிகை குதிரை முகம் உடையவளாய் குஷ்டரோக நோய்வாய்ப்பட்டமையால் அக்குதிரை முகமும் குஷ்டரோகமும் நீங்குவதற்கு பற்பல சிகிச்சைகளும் தெய்வ வழிபாடும் செய்தும் தீராமைகண்டு மனம் நொந்து தவசிரேஷ்டர் ஒருவரின் வாக்குப்படி யாழ்ப்பாணத்தின் வடகரையில் உள்ள கீரிமலை என்னும் புண்ணிய தீர்த்தத்தில் கந்தசுவாமியாரை நினைத்து ஸ்நானம் செய்து ஒரே திசையில் மாவிட்டபுரம் முதலாக தென்திசை நோக்கி ஐந்து கோயிலிலே கந்தசுவாமி விக்கிரக ஸ்தாபனாராதனை செய்யும்படி கூறினார். அதற்கிணங்க ஐந்து கோயில்களை அமைத்தும் தனது நோயும் குதிரை முகமும் பிறர் பார்வைக்கு நீங்கப் பெற்றும் தனது சொந்த நினைவுக்கும் பார்வைக்கும் நீங்கப் பெறாததாக இருந்தது. இதன் காரணத்தை ஆராய்ந்தறிந்த இடத்து கந்தசுவாமி வழிபாட்டுக்கு முன் விக்னேஸ்வர ஆராதனை எனத் தவப்பெரியோர் கூறக் கேட்ட "குமாரத்தி தன் பிழைக்கும் மனம் நொந்து விக்னேஸ்வரரைத் தியானித்து மெய்யருள் பாலிக்கும் பெருமானே அறியாமையால் செய்த பிழையை மன்னித்து என்மேல் இரக்கம் அருளுக! யான் செய்த பிழைக்குப் பிராயச்சித்தமாக உமது பிரதிரூபத்தை ஏழு ஸ்தலங்களில் பிரதிட்டை செய்து வழிபடுவேன்" என்று வாக்குறுதி பண்ணிக் கொல்லங்கலட்டி முதலாக தென் திசை நோக்கி ஒரே நிரையில் ஏழு ஸ்தலங்களில் விக்னேஸ்வரப் பிரதிஷ்டை செய்வித்தாள். அத்தலங்களாவன கொல்லங்கலட்டி, வறுத்தலை, அளகொல்லை, கும்பழாவளை, பெருமாக்கடவை ஆலங்குழாய், கல்வளை என்பனவாகும்.

இவைகளுள் மத்திய ஸ்தலமாயுள்ள கும்பழாவளையில் விக்னேஸ்வர அர்ச்சனை முடியவே இராஜகுமாரத்தியின் குதிரைமுகச்சாயை அவளது சொந்தப் பார்வைக்கும் முற்றாய் நீங்கியதாயிற்று. இத்திவ்விய சரித்திர உண்மைஇக்கும் பழாவளையின் முன்னுள்ள சோலைக்கு மாவிழி திட்டி (மா+இழி+திட்டி) எனவும், இத்தலத்தின் தென்கிழக்கு மூலையிலிருக்கின்ற வயல் (இது முன்பு குளமாயிருந்தது) "குமாரத்தி குளம்" எனவும் அழைக்கப்பட்டது. குதிரைமுகம் நீங்கிய பின் கும்பழாவளைக்கு அடுத்ததாக ஸ்தாபித்த தென்தலத்துக்குப் "பெருமாக்கடவை" எனவும் அழைக்கப்பட்டது.

இந்த அரசிளங்கன்னிகைக்கு அனுக்கிரகித்தது மாத்திரமன்றி கும்பழாவளை விக்னேஸ்வரப் பெருமான் மெய்யடியார்களுக்கு அருள் பொழிந்து வினைகள் தீர்த்து செய்த அற்புதங்கள் எத்தனையோ உள. அவைகள் ஒவ் வொன்றையும் எடுத்துக் கூறுவோமாயின் எண்ணிலடங்கா. இந்த அற்புதங்கள் யாவற்றையும் பல புலவர்கள் கும்பழாவளை விநாயகர் தோத்திரத்திரட்டு என்னும் நூலில் அச்சேற்றுவித்து பேணிப் பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதைக் கூறி வைக்க விரும்புகிறோம்.

தர்மகர்த்தா சபையினர்.

## இன்றைய நாள் பொன்னான நாள்



இசை வளமும், கலைவளமும் ஒருங்கே சிறந்து விளங்கும் அளவையம்பதியிலே சரித்திரப் புகழ்பெற்று அற்புதங்கள் நிறைந்து விளங்கும் வினைகளைத் தீர்க்கும் விநாயகப் பெருமான் இன்று தேரேறி வருகின்றார். அழுது, தொழுது நிற்கும் அடியார்க்ளின் அல்லல் களைந்து, இன்னல் போக்கி, துன்பம் துடைக்கும் கும்பழாவளையான் சித்திரத்தேரிலே பக்தர்களுக்கு அருட்காட்சி அளிக்கின்றார்.

இன்றைய தேர்த்திருவிழா ஒரு பொன்னான நன்னாள். மஹோற்சவத்திலே ரதோற்சவம் அழித்தலைக் குறிப்பதாகும். ஆகவே எம்பெருமான் அகந்தையை அழித்து அசுரத்தனத்தை ஒடுக்கி ஆணவத்தை அடக்கி வினைகள் தீர்ப்பவனாக தேரேறிப் புறப்பட்டு விட்டார். தேரேறிச் சிங்காரப் பவனி வரும் சிங்காரக் காட்சி சிந்தையைக் குளிரவைக்கும் சிறந்ததொரு காட்சியாகும். விநாயகப் பெருமான் அழகிய தேரிலே ஆரோகணித்து வரும் காட்சி பக்திபூர்வமானது. "நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு" என்றபடி அருளை அள்ளிச் சொரியும் அற்புத ஆலயம் கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயம் ஆகும். இனிமேல் நல்லதே நடக்கப் போகிறது தீயவை அழியப் போகின்றன. அவனது எல்லையில்லா பேரருட் கருணை பக்தர் குழாமுக்கு கிடைக்க வேண்டுமென்று அவருடைய பாதார விந்தங்களைப் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து வாழ்த்தி, போற்றி துதித்து நல் லாசிகளை வழங்குகின்றேன்.

ம.பத்மநாதன்,
தர்மகர்த்தா சபைத் தலைவர்.

'ஓம் எனும் பிரணவ ரூப நாயகா
உமையவளின் பாலனே விநாயகா'

தேர் உற்சவம் சிறப்பாக நடைபெற
பிரார்த்திப்போரும்
அனுசரணையாளர்களும்:

அழகுசாதனப் பொருள்கள், பாடசாலை உபகரணங்கள்,
அன்பளிப்புப்பொருள்கள், குளிர்பான வகைகள், கையடக்கத்தொலைபேசி,
சிம் அட்டைகள், Reload, கையடக்கத் தொலைபேசிக்கான அனைத்து காட்
வகைகள், யாழ்.கொழும்பு AC Bus
கஜமுகன் பல்பொருள் விற்பனை நிலையம்
பிரதான வீதி, அளவெட்டி தெற்கு. தொ.பே:021 2240155
E-mail:kajamukan98@yahoo Com, Fax : 021 224 0260

யசுசன் ஸ்ரோர்ஸ்
புதினப்பத்திரிகை முகவர்
தபால்கந்தோரடி,
சண்டிலிப்பாய் வடக்கு.

பிள்ளையார்
களஞ்சியம்
பல்பொருள் வாணிபம்
கும்பழாவளை வீதி, அளவெட்டி.

உணவு சிற்றுண்டி வகைகள், குளிர்பான
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள
விநாயகர்
சைவ உணவகம்
கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி.

விநாயகர்
களஞ்சியம் அன்
தொலைத் தொடர்பு சேவை
கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி.

விநாயகர்
தொலைத் தொடர்பகம்
யாழ்.கொழும்பு உள்ளூர் வான்சேவை
தொ.பே: 021 2240204, 0777174162.
அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

ஐங்கரன் வெல்டிங்
கிறில், கேற்வகைகள், ஒட்டுவேலைகள்
யாவும் நம்பிக்க உத்தரவாதத்துடன்
செய்து தரப்படும்
மலைவேம்படி, சங்கானை வீதி,
அளவெட்டி.

அம்பாள்
ஸ்ரோர்ஸ்
பல்பொருள் வாணிபம்
மல்லாகம் வீதி, மாகியப்பிட்டி,
அளவெட்டி.

றமணன் டிஜிற்றல்
VIDEO சென்ரர்
VIDEO எடிற்றிங்,
வெளிப்புற படப்பிடிப்புக்கள்.
பிரதான வீதி, அளவெட்டி.

சகலவிதமான தொலைபேசி மீள்நிரப்பு
அட்டைகளும் பெற்றுக்கொள்ள
விமல் போட்டோ அன் வீடியோ
அல்பம் வடிவமைப்பாளர்கள்
அளவெட்டி தெற்கு, அளவெட்டி.
தொ.பே:0776305183, 0213218042.

ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பானங்கள்
அனைத்தையும் பெற்றுக்கொள்ள
அம்பிகா
கிறீம் ஹவுஸ்
மலைவேம்படி, அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பானங்கள்
அனைத்தையும் ஓடருக்குப் பெற்றுக்கொள்ள
ஸ்ரீ காளி
கிறீம் ஹவுஸ்
கட்டுவன் றோட், மல்லாகம்.

ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பானங்கள்
அனைத்தையும் ஓடருக்குப் பெற்றுக்கொள்ள
லிங்கேஸ் கிறீம் ஹவுஸ்
மயிலணை முருகமூர்த்தி கோயிலடி
சுன்னாகம்.

காளி அம்பாள்
ஸ்ரோர்ஸ்
பல்பொருள் வாணிபம்
மகாத்மா வீதி, கும்பிழாவளை.
அளவெட்டி.

ரூபன் பல்பொருள் வாணிபம்
K.R
நிரு மெடிக்கல் கிளினிக்
தினமும் M.B.B.S. டாக்டர்களினால்
4.30-7.00 pm வரை நோயாளர்களைப்
பார்வையிடுவார்கள்.
அளவெட்டி.

மகாராசா
ஹாட்வெயர் அன்சன்ஸ்
மல்லாகம் வீதி,
அளவெட்டி.

கதிர்காமசிங்கம் அன் சன்
பல்பொருள் அழகு சாதனப்பொருள்கள்
விற்பனையாளர்
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

பிரியங்கா மலர் சென்ரர்
மகாத்மா வீதி, கும்பிழாவளை.
அளவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைவிடப்பட்ட தமிழ்க் குடும்பங்களின் வீடுகளை வேறு நபர்களுக்கு வழங்கச் செயலகம் திட்டம்

திருகோணமலை,மே 16

திருகோணமலை மாவட்டத்தில் விளாங்குளம் என்னுமிடத்தில் மீள்குடியேற்றத்திட்டத்தின் கீழ் காணியும் வீடுகளும் பெற்றவர்களில் தமிழ்க் குடும்பங்கள் பல அவற்றைக் கைவிட்டு வேறிடங்களுக்கும் சிலர் வெளிநாடுகளுக்கும் சென்று விட்டனர்.

இதனையடுத்து அவர்களின் காணி மற்றும் வீடுகளை வேறு ஆள்களுக்கு கை மாற்றி வழங்கும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த திருகோணமலை மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

கடந்த புதன்கிழமை பிற்பகல் திருகோணமலை மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டம் நடைபெற்றது. இதில் கைவிடப்பட்ட வீடுகள், காணிகளை வேறு ஆள்களுக்கு வழங்குவதற்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ந.வரதன் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

அதற்கு 3 மாத முன்னறிவித்தல் ஒன்றை முன்னைய உரிமையாளர்களுக்கு அனுப்புவது என்றும், அதற்கு அவர்கள் மீண்டும் திரும்பி அந்தக்காணி மற்றும் வீடுகளுக்கு வந்து குடியிருக்காவிட்டால் அவர்களின் உரிமைப்பத்திரத்தை ரத்துச் செய்துவிட்டு புதியவர்களைக் குடியிருக்க அனுமதிப்பது என்றும் திருகோணமலை மாவட்ட அரச அதிபர் தனது யோசனையை வெளியிட்டார். அதற்கு உறுப்பினர் வரதன் தனது எதிர்ப்பைத் தெரிவித்தார்.

யுத்த சூழ்நிலை காரணமாக முன்பு குடியிருந்த தமிழ்க் குடும்பங்கள் விளாங்குளம் வீடமைப்புத்திட்ட பிரதேசத்திலிருந்து வெளியேறியுள்ளன. அவர்களில் சிலர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். அவர்களுக்கு மூன்று மாத முன் அறிவித்தலை எவ்வாறு, எந்த விலாசத்திற்கு அனுப்ப முடியும்?- என்றும் வரதன் கேட்டார்.

இதற்கு வெளிநாட்டுத்தூதரகங்கள் மூலம் முன்னறிவித்தல் கடிதங்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கலாம் - என்று பிரதி அமைச்சர் புஞ்சி நிலம பதிலளித்தார்.

யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து வேறு இடங்களில், வேறு நாடுகளில் தஞ்ச மடைந்த குடும்பங்களின் காணிகள் மற்றும் வீடுகளை வேறு ஆள்களுக்கு வழங்குவது இயற்கை நீதிக்கு முரணானது என்றும் வரதன் தெரிவித்தார்.

திருகோணமலை விளாங்குளம் கிராமத்திலிருந்து இடம் பெயர்ந்த பலர் தமிழ்நாட்டில் உள்ள அகதி முகாம்களில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியையின் முறைப்பாட்டை அடுத்துக் கைதான

# வடமேல் மாகாண கல்வியமைச்சின் அதிகாரி தொடர்ந்து விசாரணையில்

குருநாகல்,மே16

இடமாற்றம் கோரிய ஆசிரியை ஒருவரை உல்லாசமாகப் பொழுதைக் கழிக்க ஹோட்டலுக்கு அழைத்த வடமேல் மாகாணக் கல்வியமைச்சின் உயரதிகாரி பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

குருநாகல் பகுதி ஆரம்பப் பாடசாலை ஒன்றின் ஆசிரியை ஒருவர், தமது வசதி கருதி வேறு பாடசாலை ஒன்றுக்கு இடம் மாற்றம் கோரியிருந்தார். அந்த ஆசிரியையே அமைச்சின் அதிகாரி ஹோட்டலுக்கு அழைத்திருந்தார். இது குறித்த ஆசிரியையின் முறைப்பாட்டை அடுத்து மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜனத் குணவர்த்தனவின் கட்டளையின்படி, பொலிஸார் ஹோட்டல் சுற்றாடலில் மறைந்திருந்து சம்பந்தப்பட்ட வடமேல் மாகாண கல்வியமைச்சின் உயரதிகாரியைக் கைது செய்தனர்.

இந்த அதிகாரி மீது பல குற்றச்சாட்டுகள் கிடைத்திருப்பதால், பொலிஸார் அவரைத் தடுத்து வைத்து விசாரித்து வருகின்றனர்.

குறிப்பு: கடந்த 14.05.2011 சனிக்கிழமையன்று இதே பக்கத்தில் வெளியான ''இடம் மாற்றம் கோரிய ஆசிரியையை விடுதிக்கு அழைத்த அதிகாரி கைது'' என்ற தலைப்பிலான செய்தியில் வடமாகாண கல்வி அமைச்சின் அதிகாரியெனத் தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகின்றோம். (ஒ)

# வீதிகள் கொங்கிறீட் வீதிகளாகப் புனரமைப்பு

மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ கிண்ணியா பிரதேசத்திலுள்ள பல வீதிகள் கொங்கிறீட் வீதிகளாக புனரமைப்புச் செய்வதற்கான ஆரம்ப நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. (ச)

மக்கள் எழுச்சி.....




திருகோணமலை, சம்பூர் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்களை அங்கு மீளக்குடியேற்றுமாறு மூதூர், கிளிவெட்டி அகதி முகாமுக்கு முன்னால் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ச)

# காத்தான்குடியில் கைக்குண்டுத் தாக்குதல்

மட்டக்களப்பு,மே16

மட்டக்களப்பு - காத்தான்குடியில் மௌலவி ஒருவரின் வீட்டின் மீது கைக்குண்டுத் தாக்குதலொன்று கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை நடத்தப்பட்டது.

காத்தான்குடி ஐந்தாம் குறிச்சியிலுள்ள காத்தான்குடி மத்திய மகா வித்தியாலய தேசிய பாடசாலையில் மௌலவி ஆசிரியராகக் கடமையாற்றும் எம்.எச்.சாஜஹான் என்பவரின் வீட்டின் மீதே இனந்தெரியாத நபர்களால் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை மூன்று மணியளவில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனக் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு வீசப்பட்ட கைக்குண்டு உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பெற்றோல் குண்டு என பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ச)

# மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயலலிதாவுக்கு வாழ்த்துத் தெரிவிப்பு

மட்டக்களப்பு,மே16

இந்தியாவின் தமிழ் நாட்டில் முதலமைச்சராக மக்களால் தெரிவு செய்யப்பட்ட அ.தி.மு.க.கட்சித் தலைவி ஜெயலலிதாவுக்கு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தனது நல்வாழ்த்தை தெரிவித்துள்ளார். இவர் தனது வாழ்த்துச் செய்தியை தமிழ் நாட்டு இந்து மக்கள் கட்சி தலைவரூடாக ஜெயலலிதாவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

தற்போது இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றம் சார்பாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை வெளியிட்டிருக்கும் இவ்வேளை தாங்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றது கடந்த பல காலமாக ஈழ மண்ணில் துன்புறும் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு ஒரு விமோசனத்தை பெற்றுக்கொடுக்கும் என தான் நம்புவதாக தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையை வலுப்படுத்தி இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு சிறந்த எதிர்காலத்தை பெற்றுக் கொடுப்பீர்களென தான் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்தியா சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயலலிதாவின் கட்சி பிரதிநிதிகள் குழுவினரை சந்தித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கண்டியில் சட்டவிரோத தொலைக்காட்சி நிலையம் பொலிஸாரால் முற்றுகை; இரண்டு பேர் கைது

கண்டி,மே16

சர்வதேச தொலைக்காட்சிச் சேவைகளை சட்டவிரோதமாக ஒளிபரப்பினர் என்ற சந்தேகத்தின் பேரில் கடந்த வியாழக்கிழமை கண்டி மஹியாவ பிரதேசத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்படவர்கள் இருவரும் கண்டி மஹையாவ பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி ஒளிபரப்புசேவையை முன்னெடுத்து வந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த இருவரும் சுற்றிவளைப்புத் தேடுதலின்போது கைது செய்யப்பட்டனர் . சுமார் 13 சர்வதேச தொலைக்காட்சிச் சேவைகளை இவர்கள் அனுமதியின்றி ஒளிபரப்பியுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

# கிழக்கு ஆசிரியர் இடமாற்றம் நேர்மையாக இடம்பெறும்

## கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,மே16

கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றம் மிகவும் பொறுப்புணர்வுடனும், நேர்மையுடனும் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ.நிஸாம்.

கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றத்தின் போது முஸ்லிம் ஆசிரியர்கள் தமிழ் பாடசாலைகளுக்கோ, தமிழ் ஆசிரியர்கள் முஸ்லிம் பாடசாலைகளுக்கோ இடமாற்றம் செய்யப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் இல்லை.

கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றத்தின் போது, இனரீதியான பாதிப்புகள் ஏற்படலாம் என்றும், இந்த இடமாற்றமானது சில உள் நோக்கங்களைக் கொண்டது எனவும் [illegible] முன்வைக்கப்பட்டுவரும் கருத்துக்கள் தொடர்பாகக் கேட்டபோதே பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கிழக்கு மாகாணத்தில் மேலதிகமாக முஸ்லிம் ஆசியர்களும் உள்ளனர், தமிழ் ஆசிரியர்களும் உள்ளனர். உதாரணமாக, அம்பாறை மாவட்டத்தின் கல்முனை கல்வி வலயத்தில் மேலதிக ஆசிரியர்களாகத் தமிழர்களும் உள்ளனர், முஸ்லிம்களும் உள்ளனர். சம்மாந்துறை வலயத்திலும் இதுதான் நிலை.

மட்டக்களப்பிலுள்ள கல்வி வலயங்களில் முஸ்லிம் பாடசாலைகளிலும் ஆசிரியர் பற்றாக் குறையுள்ளது, தமிழ் பாடசாலைகளிலும் ஆசிரியர் பற்றாக் குறை நிலவுகின்றது. இதனடிப்படையில் முஸ்லிம் பாடசாலைகளுக்கு முஸ்லிம் ஆசிரியர்களையும், தமிழ் பாடசாலைகளுக்கு தமிழ் ஆசிரியர்களையும் நியமிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

இடமாற்றத்தின்போது சம்பந்தப்பட்டவர்களின் விருப்பமின்றி முஸ்லிம் பாடசாலையொன்றுக்குத் தமிழ் ஆசிரியரோ, தமிழ் பாடசாலையொன்றுக்கு முஸ்லிம் ஆசிரியரோ அனுப்பி வைக்கப்பட மாட்டார்கள்- என்றார். (ச-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைப் பணிப்பெண் மீதான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, மே 16

பஹ்ரேனில் இலங்கைப் பணிப்பெண்ணொருவர் தனக்குப் பிறந்த குழந்தையை கழுத்து நெரித்துக் கொலை செய்தார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பான வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அவர் மீதான உளமருத்துவ அறிக்கை கிடைக்கும் வரை நீதிபதிகள் வழக்கை எதிர்வரும் ஜூன் மாதம் 12ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர்.

இலங்கைப் பணிப்பெண்ணான இவர் குழந்தையின் கழுத்தை நெரித்த பின்னர் அதன் வாயினுள் துணியை வைத்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பஹ்ரெயினிலுள்ள தனது எஜமானர் வீட்டின் களஞ்சிய அறையில் குழந்தையின் சடலத்தை இவர் மறைத்துவைத்திருந்தார் என்றும் இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

# இலங்கை போர் குற்றச்சாட்டுத் தொடர்பில் உள்நாட்டில் விசாரணையை ஆரம்பியுங்கள்

## ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,மே16

இலங்கை போர் குற்றச்சாட்டு தொடர்பில் ஐரோப்பிய நாடாளுமன்றம் சர்வதேச விசாரணையை நிராகரித்துள்ளது. இதன் அர்த்தம், சர்வதேச விசாரணை வேண்டாம் என்றால் உள்நாட்டில் விசாரியுங்கள் என்பதாகும். இந்தியாவிலும், ஐரோப்பாவிலும் இருக்கின்ற அரசுகளைச் சாராத மனித உரிமை அமைப்புகள் இலங்கைப் பிரச்சினையைத் தமது கரங்களில் எடுத்துள்ளன. எனவே இந்தியாவின் மத்திய அரசு விரும்பினாலும்கூட கடந்த காலங்களைப் போல இலங்கை அரசை ஆதரித்துக் காப்பாற்ற முடியாது என ஜனநாயகம் மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

இவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இறுதிக்கட்டப் போரின்போது பல பத்தாயிரக்கணக்கான மக்கள் மரணித்தனர் என்ற உண்மை இன்று உலகளாவிய ரீதியில் உணரப்பட்டுள்ளது. எதுவுமே நடக்கவில்லை என்று சொன்னால் அது, கண்ணை மூடிக்கொண்டு பால் குடிக்கும் திருட்டுப் பூனை உலகமே இருண்டு விட்டது என்று நினைப்பதற்கு ஒப்பாகும். எனவே இறுதிக்கட்ட இழப்புகள் தொடர்பில் இலங்கை அரசு பதில் சொல்லவேண்டிய நிலைமை உருவாகிவருகின்றது. புலிகள் தான் அனைத்துக் கொலைகளையும் செய்தார்கள் என்று அரசு சொல்லுமானால், அது தொடர்பிலும் உள்நாட்டு விசாரணை நடத்தவேண்டிய கடப்பாடு அரசுக்கு உள்ளது.

கடந்த காலங்களில் காணாமல் போனோர் தொடர்பி லும், படுகொலை செய்யப்பட்டோர் தொடர்பிலும் நாங்கள் விசாரணைகளைக் கோரிய பொழுது அரசு பல ஆணைக் குழுக்களையும், அரசின் அமைச்சர்கள் அடங்கிய குழுக்களையும் நியமித்தது. ஆனால் அவை எதுவும் சர்வதேச விதிமுறைகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்தில் விசாரணைகளை முன்னெடுக்கவில்லை. அதனால் தான் அத்தகைய அனைத்துக் குழுக்களும் இன்று காணாமல் போய்விட்டன. எனவே தற்போதைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசு சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். உள்ளாநட்டிலேயே விசாரணைகளை ஆரம்பியுங்கள் என அரசை சர்வதேசம் வலியுறுத்துகின்றது.

போர்க் குற்ற அறிக்கையின் அதிகாரபூர்வ தன்மைபற்றித் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை. இந்த அறிக்கையின் விவரங்கள் முழு உலகத்தையும் சென்றடைந்துவிட்டது. அத்துடன் சீனா, ரஷ்யா, இந்தியா போன்ற நாடுகள் எம்மைக் காப்பாற்றும் என்று கனவு காண்பதிலும் பிரயோசனமில்லை. பலம் வாய்ந்த நாடுகள் மனித உரிமைக் குற்றச்சாட்டுக்களைத் தங்களது சொந்த தேசிய நலனுக்காகப் பயன்படுத்திய காலம் இன்று மலையேறிக் கொண்டிருக்கின்றது.

அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் வாழும் சாதாரண மக்கள் இலங்கையைத் திரும்பிப் பார்க்க வைக்கும் அளவுக்கு அந்த நாடுகளின் ஊடகங்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதே போல் இந்தியாவிலும், ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் இருக்கின்றன. அரசுகளைச் சாராத மனித உரிமை அமைப்புகள் இலங்கைப் பிரச்சினையைத் தமது கரங்களில் எடுத்துள்ளன. இலங்கை அரசுக்கு இருக்கக் கூடிய ஒரே வழி குற்றங்கள் தொடர்பில் சர்வதேச ஆதரவுடன் உள்நாட்டு விசாரணையை ஆரம்பிக்க வேண்டும் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் நேர்மையான பேச்சுக்களிலும் ஈடுபட வேண்டும்-என்றார். (ச)

**நீதிபதிகள் மாநாடு....**



பொதுநலவாய செயலகத்தின் நீதிபதிகள் மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம நீதியரசராக புதிதாக நியமனம் பெற்ற கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்காவுடன் முன்னாள் நீதியரசர் அசோக டிசில்வா, சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் ஆகியோர் உரையாடுகின்றனர்.

# வவுனியா வாழ் இந்திய வம்சாவளி மக்களின் பிரச்சினைகளை ஆராய ம.ம.மு.நடவடிக்கை

## இன்று உயர்மட்டக் குழு வருகை

கொழும்பு, மே 16

40 வருடங்களுக்கும் மேலாக வவுனியாவில் குடியமர்ந்துள்ள இந்திய வம்சாவளி மக்களுடைய பல்வேறு பிரச்சினைகளை ஆராயும் முகமாக மலையக மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் இன்று திங்கட்கிழமை வவுனியா செல்லவுள்ளனர்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவி திருமதி சாந்தினி சந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர் வி.இராதகிருஷ்ணன், பேராசிரியர் எஸ்.ரவீந்திரன் உள்ளிட்ட பலர் இந்தக் குழுவில் இடம்பெறுவார்கள். மலையகத்திலிருந்து வவுனியா வந்து குடியமர்ந்துள்ள குடியிருக்கும் காணிகளுக்கு உறுதிகள் வழங்கல், அவர்களுடைய அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்தல், இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்தவர்களுக்கு உரிய வசதிகள் வழங்கப்படுதல் போன்ற முக்கிய விடயங்கள் இதன்போது ஆராயப்படவுள்ளன.

இந்தக் கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வவுனியா முத்தையா மண்டபத்தில் நடைபெறவுள்ளது என ஏற்பாட்டாளர் இரா.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

# காப்பகத்தில் இருந்து தப்பிய 6 சிறுமிகள் வீடொன்றில் கைது

## நிர்வாகியின் இம்சை தாங்காமல் தப்பினராம்

கொழும்பு, மே 16

விஜயகட்டுபெத்த சிறுவர் காப்பகத்தில் இருந்து தப்பியோடிய ஆறு சிறுமிகள் வீடொன்றில் மறைந்திருந்த சமயம் சிலாபம் பொலிஸாராலும் சிறுவர் மகளிர் பாதுகாப்புப் பிரிவினராலும் கைது செய்யப்பட்டனர்.

கடந்த புதன்கிழமை இரவு பத்து மணியளவில் பொலிஸ் அவசர அழைப்புக்கு இந்தச் சிறுமிகள் தப்பிய விவகாரம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

அதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் பின் இவர்கள் அறுவரும் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சிறுமிகளிடம் விசாரணைகளை மேற்கொண்டபோது தாங்கள் தங்கியிருந்த காப்பகத்தின் நிர்வாகி கொடுக்கும் தண்டனைகளைத் தாங்கிக் கொள்ள முடியாதபடியாலேயே அங்கிருந்து தப்பி வந்தனர் எனத் தெரிவித்தனர்.

சிலாபம் பொலிஸ் சிறுவர் மகளிர் பிரிவின் பொறுப்பதிகாரி திருமதி சுபாஷினி ஹேரத்தின் தலைமையில் சென்ற குழுவே இந்தச் சிறுமிகளைக் கைது செய்தது.

# கட்டார் தொழிலாளர்களின் முகாம்களுக்கு அமைச்சர் டிலான் பெரேரா திடீர் பயணம்

கொழும்பு, மே 16

இலங்கைப் பணியாளர்களின் நிலைமையை அறிந்து கொள்வதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன் புரி அமைச்சர் டிலான் பெரேரா கட்டாரிலுள்ள தொழிலாளர் முகாம்களுக்கு திடீரெனப் பயணித்துள்ளார்.

டோகா அரங்கத்தில் பங்கு பற்றுவதற்காக கட்டாருக்குச் சென்றபோதே அவர் இந்த முகாம்களுக்கும் சென்றுள்ளார்.

கட்டாரில் பெரும்பான்மையான இலங்கைத் தொழிலாளர்கள் குறைந்த சம்பளத்துடனேயே வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர்.

கூடுதலானவர்கள் நிறுவனமயப்படாத நிர்மாணத் துறையில் காணப்படுகின்றனர். இன்னும் பலர் கம்பனிகளில் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். அண்ணளவான கணிப்பின் படி கட்டாரில் சுமார் ஒரு லட்சம் இலங்கைப் பணியாளர்கள் உள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

கட்டாரிலுள்ள இலங்கைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம், அவர்களின் வருமானம், ஆகியவற்றை கவனத்திற்கொள்ளும் வகையிலேயே இவரது பயணம் அமைந்துள்ளது.

# பாடசாலை சேவை வாகனங்களை பதிவு செய்யாத சாரதிகள் கைது

கொழும்பு, மே 16

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகள் மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதன்படி கொழும்பு மாவட்டத்தில் வாகனப் பதிவு நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன என அந்தச் சபையின் தலைவர் சட்டத்தரணி அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் இதுவரை பதிவுசெய்யப்படாதிருக்கும் பாடசாலைச் சேவையிலீடுபடும் வாகனங்களை விரைவில் பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பதிவு செய்யாத வாகனச் சாரதிகள் கைது செய்யப்படுவர் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கென விசேட அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் அனோமா திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையைச் சேர்ந்த, கனடா றொரண்ரோவில் புலம்பெயர்ந்து வாழும் 9 வயதுச் சிறுமி தனது பிறந்த நாள் பரிசாக யாழ். பாடசாலை, பல்கலைக்கழக மாணவிகள் இருவருக்கு துவிச்சக்கரவண்டிகளை ரிஷி தொண்டு நாதசுவாமிகள் ஊடாக வழங்கியுள்ளார்.




# மீள்குடியமர்ந்தோருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட வேண்டியது அரசின் கடமை

யாழ்ப்பாணம், மே16



உயர்பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியமர்த்தும் நடவடிக்கைகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

இதனால் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் உட்கட்டமைப்பு வசதிகள் ஏனைய தேவைகள் போன்ற வற்றை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டிய கடமை அரசிடம் உள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்ற 'மனைப் பொருளாதார மேம்பாட்டுத்திட்டம்' தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வில் தலைமையுரை நிகழ்ந்தும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது:-

தற்போது குடாநாட்டில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முக்கியமாக யுத்தம் நடைபெற்ற இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்ட இடங்களில் அபிவிருத்திப் பணிகள் முதற்கட்டமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் யாழ். மாவட்டத்தில் மீள்குடியமர்த்தப் பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

இதற்காக பொருளாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டிலும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி முயற்சி அமைச்சும் வடமாகாண சபையும் இணைந்து மனைப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப் படுத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த வருடம் 6 ஆயிரம் மில்லியன் ரூபா நிதியில் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் இடம்பெற்றன. அதனைப் போல் இந்த வருடமும் யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காக பெருந் தொகையான நிதியினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த மனைப்பொருளாதார திட்டத்தின் மூலம் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களின் வாழ்வாதார தேவைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் ஆக்கபூர்மான செயற்பாடுகள் வழங்கப்படவுள்ளன.

இதன் மூலம் தனது சொந்தக்காலில் நின்று சுயதொழில் வாய்ப்பைப் பெறுவதுடன் தனது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் இந்தத் திட்டம் கைகொடுக்கும் - என்றார். (ம-313)

# துன்பமான விடயங்களை நினைத்துப்பார்த்து மன உளைச்சலுக்கு ஆளாவதைத் தவிர்ப்போம்

யாழ்ப்பாணம், மே 16

இடம்பெற்ற துன்பகரமான விடயங்களை மீண்டும் நினைத்துப் பார்ப்பதால் மன உளைச்சலுக்கு ஆளாவதுடன் கிடைக்கப்போகும் பல இன்பமான விடயங்களை இழந்து கொண்டிருக்கின்றோம்.

நமது வாழ்க்கை முறை எதிர்காலத்தை பற்றி சிந்தித்து அதன் வழி நடத்தலே சிறந்தது.

இவ்வாறு தெரிவித்தார் சின்மயா மிஷனைச் சேர்ந்த பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய.

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் அண்மையில் 'மகிழ்ச்சியாக வாழ்வோம்' எனும் தலைப்பில் ஆன்மிகச் சொற் பொழிவை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து ஆன்மிகச் சொற்பொழிவை நிகழ்த்தும் போது-

கடந்த காலங்களில் நாம் சந்தித்த துன்பகரமான விடயங்களை தனிமையாக இருக்கும் போதோ அல்லது குடும்பத்தாருடன் இருக்கும்போதோ அவற்றை நினைவுபடுத்தி மன உளைச்சலைத் தான் பலனாகப் பெறுகின்றோம்.

இதனால் மனம் சோர்வடைந்து எதிர்கால இலட்சியங்கள், கிடைக்கக் கூடிய சந்தோஷகங்கள் இவற்றை இழந்துகொண்டிருக்கின்றோம்.

நடந்து முடிந்தவை யாவும் நடந்து முடிந்தவை தான். இனி மேல் நடக்கப்போகும் விடயங்கள் தான் முக்கியமானது.

இவற்றில் முக்கியமாக மாணவர்களைப் பெரிதும் தாக்கமடையச் செய்யும். மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் கூடிய கவனத்துடன் இருத்தல் வேண்டும்.

'கற்றவர்களுக்குத் தான் சென்ற இடமெல்லம் மதிப்பு' எனவே மாணவர்கள் மனதை ஒரு நிலைப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

இதற்கு முக்கியமாக ஐந்து நிமிடங்களாவது இறைவனின் நாமங்களை உச்சரித்தல் வேண்டும்.

மனம் ஒரு நிலையில் இருந்தால் தான் கற்றல் செயற்பாடுளில் கவனம் செலுத்த முடியும்.

கவலை இல்லாத மனிதர்களே கிடையாது. அதற்காக நடந்து முடிந்தவைகளைப் பற்றிக் கவலைப் படுவதில் என்ன பயன்.



எனவே மாணவர்களின் எதிர்காலம் அவர்களது கல்வியில் தான் தங்கியுள்ளது.

எனவே வாழ்வின் ஒரு பகுதியாக கிடைத்துள்ள இந்த மாணவப்பருவத்தை சிறந்ததாகப் பயன்படுத்தி எதிர்காலத்தை சிறந்ததாக அமைத்துக் கொள்ள முயற்சிகள் எடுக்க வேண்டும் - என்றார். (ம-313)

# சைவ சமய அறிவுப் பரீட்சை முடிவுகள்

வலி.வடக்கு, மே 16

வண்ணார்பண்ணை, சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக்கழகம் வருடாந்தம் நடத்தி வரும் சைவசமய அறிவுப் பரீட்சையில் தரம் ஒன்று மாணவர்களுக்காக நடத்திய நீதிநூல் மனனப்போட்டியில் சிறப்புப் பரிசில் பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செ.யதுஷா, ரி.கபில்சன்-

இணுவில் மத்திய கல்லூரியைச் சேர்ந்த சு.திலக்ஷிகா, பி.கஜானி.

வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலயத்தைச் சேர்ந்த கா. சஞ்ஜெய்.

யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த வ.ஆர்த்திகா.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த தெ.றொஷானி, சு.வைஸ்ணவி, க.புகழினி, உ.திலானிகா.

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த சி.தஜிந்தன், சி.சிவநிரோஜன், பா.தனுஜா, வி.த.துளசிகா.

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த யோ.மதுசன் அ.கலா நிதி வ.தினூஷா, ச.லலித்யா, மு.பிரணவன் கு.டிரோசன், ப. ஜகாசினி, க.மேனுகா, க.நிரோ ஜன்.

புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த ர.கஜித்காந், இ.ஜனார்த்திகன், ந.றக்சிகா, ர.சனுஸ்ரன்.

அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த உ.சோபிதரன், பா.மதுமிதா. (ம-86)

## அமைய அடிப்படையில் ஊழியர் நியமனம்

யாழ்ப்பாணம், மே 16

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் யாழ். பிராந்திய அலுவலகத்துக்கும் மன்னார் பிராந்திய அலு வல கத்துக்கும் 22 பேர் அமைய அடிப்படையில் ஊழியர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

கடந்த 11ஆம் திகதியன்று யாழ்.மற்றும் மன்னார் பிராந்திய நிலையங்களில் நியமனக் கடிதத்தைப் பெற்ற பின்னர் கடமையைப் பொறுப்பேற்றுள்ளனர்.

சுனாமி மற்றும் நிஷா புயல் தாக்கங்களினால் பாதிப்புற்ற சேவையில் அவசர தேவையின் பொருட்டு ஆள்சேர்ப்பு செய்யப்பட்டவர்களுக்கே இந்த அமைய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை-

அமைய அடிப்படையில் நியமனம் பெற்ற ஊழியர்களின் சேவை, நடத்தை, வேலை, வரவு என்பவற்றுக்கு ஏற்ப நிரந்தர நியமனம் வழங்கப்படும் என உதவி பொது முகாமையாளர் (ஆளணி) அறிவித்துள்ளார். (ம-302)

## உடுவில் கோட்ட நாடகப் போட்டி வெற்றியாளர்

கோட்ட மட்டத் தமிழ்த்தினப் போட்டிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இந்த வகையில் உடுவில் கோட்ட நாடகப் போட்டிகள் தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முதலிடத்தையும் உடுவில் மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தையும் மயிலணி சைவ மகாவித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (ம-37)

## இறுவெட்டு வெளியீடு

செல்லையா சிறிகாந்தனின் தயாரிப்பிலான அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் புகழ்பாடும் இறுவெட்டு வெளியீடு கடந்த புதன்கிழமை ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

தென்னியந்தியப் பாடகர் உன்னிமேனன் இறுவெட்டை வெளியிட்டு வைக்க பேராசிரியர் என். சண்முகலிங்கன் அதன் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். மதிப்பீட்டுரை என். சண்முகலிங்கன் நிகழ்த்தினார். (த-37)

## பதிவின்றி வாகனம் செலுத்தியவருக்கு அபராதம்

பதிவு செய்யப்படாத மோட்டார் சைக்கிளை சாரதி உரிமம் இன்றி மதுபோதையில் செலுத்திய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 6 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸார் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை விசாரித்த நீதிவான் இந்த நபருக்கு 3 குற்றங்களுக்குமென 6 ஆயிரத்து 500 ரூபா அபாரதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 3 மாத கால சாதாரண சிறை[illegible]டனை அனுபவிக்[illegible]த்தரவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
எந்த வேலையையும் ஆர்வம், அக்கறையோடு செய்வீர்கள். பழைய நண்பர் ஒருவரைச் சந்தித்து பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள். பொழுதுபோக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். வெளியூர்களில் இருந்து நல்ல செய்திகளைக் கேட்கலாம். வியாபாரிகளுக்கு கடன் மிகுதிகள் வசூலாகும். கணவன் மனைவியிடையே பாசம் அதிகரிக்கும்.

**இடபம்:**
தடைப்பட்ட காரியங்கள் துரிதமாக நடக்கலாம். அரசியல் தொடர்புடையவர்கள் பரபரப்பாகச் செயற்பட நேரிடலாம். தந்தை வழியில் மனஸ்தாபம் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். உங்களின் திறமைக்கு சவால்விடும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். தொடங்கிய வேலைகள் துளிர் விட்டு வளரும் நாள்.

**மிதுனம்:**
சாமர்த்தியமாகப் பேசி சிலரிடம் காரியம் சாதிப்பீர்கள். உங்களுக்குப் பிடித்தமான ஒன்றை மற்றவர்களுக்காக விட்டுக் கொடுக்கலாம். தேவையற்ற பயம், பீதி ஆட்கொள்ளும். தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். சங்கடம் தரும் அல்லது சந்தோஷம் தரும் செய்தி ஒன்றைக் கேட்கலாம்.

**கடகம்:**
நல்லவர், கெட்டவர் என பார்க்காமல் சிலருக்கு உதவி செய்வீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகளை விரிவுபடுத்திக் கொள்வீர்கள். மாமன், மைத்துனர்களால் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். சிலரின் தகுதிக்கு மீறிய செயற்பாடுகளைப் பார்த்து எரிச்சல் அடைவீர்கள். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தை செலவிடலாம்.

**சிங்கம்:**
வெளியூர் பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். மற்றவர்கள் மத்தியில் பகட்டாகத் தோன்றும் வகையில் ஆடைகள் அணிவீர்கள். சுபச் செலவுகள் அதிகரித்தாலும், அவற்றை வேறு வழிகளில் சரிக்கட்டிக் கொள்வீர்கள். உங்களுக்குத் தெரியாத விடயம் ஒன்றை மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வீர்கள்.

**கன்னி:**
குடும்ப உறுப்பினர்களிடம் கோபதாபங்களைக் குறைக்க வேண்டும். அவசரச் செலவுகளைச் சமாளிக்க சிலரிடம் கடனுதவி கேட்கலாம். உறவுப் பெண்கள் வழியில் சில சிரமங்களுக்கு ஆட்படலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றால் அவதிகளுக்கு ஆள்படலாம்.

**துலாம்:**
ஊக்கம், உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். அரசியல்வாதிகள் சர்ச்சைக்குரிய பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். வீண் பழிகளைத் தவிர்க்க அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது நன்மை தரும். சில வேலைகளை தாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். இனிய அனுபவம் உண்டு.

**விருச்சிகம்:**
வீட்டிற்கு வரும் விருந்தினர்களை உபசரிக்கக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்யலாம். வெறுப்பு, விரக்தி ஆட்கொள்ளும். பெண்கள் கணவரின் அன்பைப்பெறுவர். நீங்கள் நல்ல எண்ணத்தில் செய்த வேலை ஒன்றை மற்றவர்கள் தவறாகப் புரிந்து கொள்ளலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களுடன் தொலைபேசியில் பேசலாம்.

**தனுசு:**
புதுமையான அனுபவங்களைப் பெறலாம். உங்களின் சொல்லுக்கு உறவினர்கள் மத்தியில் மதிப்பு அதிகரிக்கும். வேலையாள்களால் ஏற்பட்ட தொல்லைகள் குறையும். நீண்ட நாள் ஆசையொன்று நிறைவேறி திருப்தி காண்பீர்கள். எந்த வேலைக்காகவும் பெரியளவில் அலட்டிக் கொள்ளாமல் நிதானமாகச் செய்து முடிப்பீர்கள். இனிய நாள்.

**மகரம்:**
தொல்லை கொடுத்த சிலரே தோள் கொடுக்க முன்வருவர். மற்றவர்கள் மத்தியில் உங்களின் பெருமையைக் காட்ட முற்படுவீர்கள். மற்றவர் களுக்கு தெரியாமல் ரகசியமாக சில காரியங்களைச் செய்வீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். வெற்றிகரமான நாள்.

**கும்பம்:**
புதுமையான சில அனுபவங்களைப் பெறலாம். சில பொருள்களை வாங்க பணத்தை தண்ணீராகச் செலவு செய்வீர்கள். முடிந்துவிட்டதாக நினைத்த பிரச்சினை ஒன்று மீண்டும் தலை தூக்கலாம். சோர்வு, சோம்பல் ஆட்கொள்ளும். நீங்கள் கேட்ட உதவியைச் செய்ய மனமில்லாமல் நண்பர்கள் கைவிரிக்கலாம்.

**மீனம்:**
வரவுகளை மிஞ்சிய செலவுகளைச் சந்திக்கலாம். மற்றவர்களுக்காக பிணை கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். பயணங்கள் எரிச்சல், தொந்தரவு தருவதாக அமையலாம். எப்படியும் முடிந்து விடும் என நினைத்த காரியம் ஒன்று முடியாமல் போகலாம். வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

# வெள்ளைக் கொடி ஏந்தி வந்தோருக்கு நடந்த கதி...!



**இரத்தம் தோய்ந்த முல்லைத்தீவுக் கடற்கரையில் முடிவுற்ற இலங்கையின் உள்நாட்டுப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்களுக்கு ஆஸ்திரேலிய ஊடகமான Herald [Sydney Morning Herald] ஊடகத்தின் விசாரணையானது ஓர் இறுதி முயற்சியாகப் பார்க்கப்படுகிறது. இந்த ஊடகத்தில் Ben Doherty என்பவர் எழுதிய ஆக்கத்தின் தமிழாக்கம்.**

இலங்கையில் முல்லைத்தீவு விடுதலைப் புலிகளின் இறுதி யுத்தம் இடம்பெற்ற இடம்.

அந்த வேளையில், தொலைபேசி ஊடாகவும் வேறுவழிமுறைகளிலும் நிபந்தனையற்ற சரணடைதலுக்கு ஒப்புக்கொண்ட புலிகள் போர் வலயத்திலிருந்து பாதுகாப்புடன் வெளியேறுவதற்கான வழிகளை கோரியிருந்தனர்.

தற்போது இந்த சம்பவம் நிகழ்ந்து இரு ஆண்டுகளின் பின்னர் ஆஸ்திரேலியக் குடியுரிமை பெற்றவரும், மூத்த இலங்கை இராஜ தந்திரியுமான பாலித கொஹன்ன, சரணடைய வந்த தமிழர்களைக் கொலை செய்தமைக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

### முடிவுக்கு வந்த போர்

தமிழீழ விடுதலைப்புலிகளால் தனிநாடு கோரி சிங்களப் பெரும்பான்மையைக் கொண்ட இலங்கை அரசுக்கு எதிராக கால் நூற்றாண்டுக்கும் மேலாக மேற் கொள்ளப்பட்ட போர் மே 2009 இல் முடிவுக்கு வந்தது.

இலங்கையின் மூன்றில் ஒரு பகுதியை தன் கட்டுப்பாட்டில் கொண்டிருந்த புலிகள் கடலால் சூழப்பட்ட, கடல் நீரேரியான, குறுகிய கரையோரப் பகுதிக்குள் தள்ளப்பட்டு இலங்கை இராணுவத்தின் முன்னேற்றத்தை எதிர்கொள்ள முடியாமல் தோல்வியைச் சந்தித்துக்கொண்டது. பெரும்பாலான புலிகள் தமது ஆயுதங்களைக் கீழே போடுவதைவிட சாகும்வரை போராடவே விரும்பினார்கள்.

ஆனால் தமது கட்டுப்பாட்டுக்குள் இருந்த பல ஆயிரக்கணக்கான பொது மக்களின் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வேறுவழியின்றி சரணடைய முன்வந்தனர்.

### காப்பாற்றக் கூடியவர்களுக்கு தகவல்கள் அனுப்பப்பட்டன

மூர்க்கமான எறிகணைத் தாக்குதல்களின் மத்தியில் போதியளவு சார்ஜ் அற்ற பற்றறிகளைக் கொண்ட செல்லிடத் தொலைபேசிகளின் உதவியுடன் புலிகள் தம்மைக் காப்பாற்றக்கூடிய எல்லோருக்கும் தமது நிலைப்பாடுகள் தொடர்பான தகவல்களை அனுப்பினர்.

இலங்கை அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சமரசப் பேச்சுக்களில் தமக்குத் இடைத்தரகர்களாகச் செயற்பட்ட இராஜதந்திரிகள், ஊடகவியலாளர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் போன்ற அனைத்துத் தரப்பினரின் உதவியையும் புலிகள் இறுதி நேரத்தில் நாடினர். அவர்கள் பல அழைப்புக்களை தொலைபேசிகளின் வழியே மேற்கொண்டனர்.

### கொஹன்னவுக்கும் தகவல்

இலங்கையின் வெளிவிவகாரச் செயலரும், புலிகளுக்கு எதிரான இலங்கைப் படைகளின் யுத்தத்தின் போது தமது தரப்புத் தகவல்களை வெளிப்படுத்திக் கொண்டிருந்த பாலித கொஹன்னவுக்குப் புலிகள் ஐரோப்பிய இடைத்தரகர் ஒருவர் ஊடாக தகவல் ஒன்றை வழங்கியிருந்தனர்.

இலங்கை மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் இரட்டைக் குடியுரிமை பெற்ற பாலித கொஹன்ன வெளிநாட்டு வர்த்தக மற்றும் விவகாரங்கள் என்ற திணைக்களத்தின் ஆஸ்திரேலியாவுக்கான இராஜதந்திரியாகவும் வர்த்தகத் துறைக்கான சமரசவாளராகவும் செயற்பட்டிருந்தார். இவர் தற்போது இலங்கையின் ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தரப் பிரதிநிதியாகவும் ஆஸ்திரேலியத் தூதராகவும் உள்ளார்.

### புலித்தேவனின் செய்தி கிடைத்தது

புலிகளின் சமாதான செயலகத்துக்குப் பொறுப்பாக இருந்த புலித்தேவனால் அனுப்பப்பட்ட தகவலைப் இவர் பெற்றிருந்தார்.

புலித்தேவன் ஓர் இராணுவ வீரர் அல்லர். ஆனால் இவர் புலிகளின் கொள்கை தயாரிப்பாளர்களில் மிகவும் முக்கியமான நபராவார். அவர் நிபந்தனையற்ற சரணடைதலுக்கான தகவலை வழங்கியிருந்தார்.


இவருடன் இணைந்து இவரது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் புலிகளின் அரசியற் பொறுப்பாளராகச் செயற்பட்ட நடேசன், புலிகளின் கேணல்களில் ஒருவரான ரமேஸ், மற்றும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் மிகவும் பாதுகாப்புடன் முல்லைத்தீவுக் கரையிலிருந்து செல்ல விரும்பினர். சில மணித்தியாலங்களின் பின்னர் வெள்ளைக் கொடியுடன் இவர்கள் பாதுகாப்பாக சரணடைய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் 58ஆவது இராணுவ நிலைக்கூடாக பாதுகாப்பான வழியில் இவர்கள் சரணடைவதற்கு உரிய ஒரு வழியும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

### படையினருக்கு கட்டளை வழங்கப்பட்டது

படை வீரர்களிடமும் இவர்களை எதிர்பார்க்கும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

மே 17 ஞாயிற்றுக்கிழமை காலை 8.46 மணிக்கு மூன்றாம் தரப்பின் உதவியுடன் புலித்தேவனுக்கு கொஹன்னவிடமிருந்து எழுத்து மூலத் தகவல் ஒன்று தொலைபேசி ஊடாக வழங்கப்பட்டது.

''படையினர் நிலைகொண்டிருக்கும் இடத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடேசன்



புலித்தேவன்

கூடாக மிக மெதுவாக நடந்து வரவும். அத்துடன் வெள்ளைக் கொடியைக் கையில் ஏந்தியவாறு தரப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

இராணுவ வீரர்கள் தற்கொலைக் குண்டுதாரிகள் தொடர்பாக அச்சமடைகிறார்கள்'' என அந்தத் தகவலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அடுத்தநாள் காலை 6.30 மணிக்கு புலித்தேவன், நடேசன் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் 15 பேர் உள்ளடங்கலாக வெள்ளைக் கொடிகளைத் தமது தலைக்கு மேலால் உயர்த்தியவாறு தமக்கு அறிவுறுத்தப்பட்டதற்கமைவாக 58 ஆவது இராணுவ நிலைகளை நோக்கி நடக்க ஆரம்பித்தனர்.

**கண்ணால் கண்ட சாட்சி**

யுத்த வலயத்தில் இவர்கள் இராணுவத்திடம் சரணடையச் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த தமிழர் ஒருவர் பின்வருமாறு தனது கருத்தை Herald இடம் கூறுகிறார்.

இவர் இச்சம்பவத்தின் பின்னர் இலங்கையை விட்டு வெளியேறிவிட்டார். (பாதுகாப்புக் காரணங்களுக்காக இவரது பெயர் தெரியப்படுத்தப்படவில்லை.)

''எனது இரு கண்களாலும் அவர்களை நான் கண்டேன். புலித்தேவன், நடேசன் முன்செல்ல ஏனையோர் அவர்களைப் பின்தொடர்ந்து சென்றார்கள். அவர்களின் கைகளில் ஆயதங்கள் இருக்கவில்லை. அவர்கள் நிராயுத பாணிகளாகவே இருந்தார்கள். இராணுவ வீரர்களை நோக்கி அவர்கள் நடந்து சென்றார்கள். அந்த வீரர்கள் 'ட்றக்' வாகனங்களை வைத்திருந்தனர். அந்த வாகனங்களின் பின்னால் சரணடையச் சென்றவர்கள் கொண்டு செல்லப்பட்டனர். அதன்பின்னர் எங்களால் அவர்களைப் பார்க்க முடியாமல் போய்விட்டது. அதன்பின்னர் எமக்குத் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டன. அவர்கள் முனகும் ஒலியும் கேட்டது. துப்பாக்கிப் பிரயோகம் இயந்திரத் துப்பாக்கிகள் போன்று மிகவேகமானதாக இருந்தது''.

''அவர் சரணடைய முன்வருகிறார். ஆனால் நீங்கள் அவரைச் சுடுகிறீர்கள்'' ஒரு சிங்களப் பெண்ணான நடேசனின் மனைவி படைவீரர்களிடம் கூறியதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

**கொல்லப்பட்ட செய்தி**

இந்தச் சம்பவம் இடம்பெற்று அரை மணித்தியாலத்தில் புலித்தேவன் மற்றும் நடேசன் ஆகியோர் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்ற செய்தி ஊடகங்களின் வாயிலாக வெளிவந்தது

அதன் பின்னர் வந்த சில நாள்களில் சரணடையச் சென்றவர்கள் சிலரின் உடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. ஆனால் நிறையப் பேரின் உடலங்கள் கிடைக்கவில்லை. இராணுவத்திடம் சரணடையச் சென்றவர்கள் உயிருடனில்லை என்று நம்பப்படுகிறது.

புலிகளுடன் எவ்வித சமரச முயற்சிகளையும் மேற்கொள்ளும் நோக்குடன் தான் எந்தவொரு தகவலையும் வழங்கவில்லை என Herald இடம் ஹோகன்ன தெரித்தார்.

''நான் இலங்கையின் வெளியுறவுச் செயலர். படையினருக்குக் கட்டளையிடும் அதிகாரமோ அல்லது பயங்கரவாதிகள் சரணடைதல் தொடர்பாகக் கலந்தாலோசிப்பதற்கான அதிகாரமோ எனக்கில்லை. இதனை நான் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செய்யமுடியாது'' சரணடையச் சென்றவர்களால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை தன்னால் நம்பமுடியாமல் உள்ளதாக ஹொஹன்ன தெரிவித்தார்.

''தொலைபேசி வழிவந்த எழுத்து மூலத் தகவல் ஒரு விசாரணைக்குப் பதிலளிக்கும் விதமாக அமைந்திருந்தது. ஆனால் புலிகளுடன் தொடர்புடைய எவரும் இந்த விடயத்தில் தொடர்புபடவில்லை. சரணடைவதற்குரிய முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்ற ரீதியில் அந்தத் தகவல் அனுப்பப்படவில்லை. அதனைச் செய்வதற்குரிய அதிகாரமும் எனக்கிருக்கவில்லை'' என்கிறார் ஹோகன்ன.

> **"எனது இரு கண்களாலும் அவர்களை நான் கண்டேன். புலித்தேவன், நடேசன் முன்செல்ல ஏனையோர் அவர்களைப் பின்தொடர்ந்து சென்றார்கள். அவர்களின் கைகளில் ஆயுதங்கள் இருக்கவில்லை. அவர்கள் நிராயுதபாணிகளாகவே இருந்தார்கள்"**

**மூன்றாந் தரப்புக்கு கொஹன்னவின் செய்தி**

மூன்றாம் தரப்பொன்றுக்குச் செய்தி ஒன்று கொஹன்னவால் அனுப்பப்பட்டது என்பதை மூன்று வெவ்வேறு தரப்புக்களின் மூலம் Herald உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரனான பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகிய இருவரதும் ஒப்புதலுடனும் புலிகளின் தலைவர்களால் அனுப்பப்பட்ட சரணடைவதற்கான வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் என கடந்த மாதம் ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிடப்பட்ட இலங்கை விவகாரம் தொடர்பான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''பஸில் ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைவாக வெள்ளைக் கொடிகளை உயர்த்தியவாறு இராணுவ முன்னரங்கை நோக்கி மெதுவாக நடந்துவரும்படி புலிகளின் தலைவர்களுக்கு இடைத்தரகர்கள் மூலம் அறிவுறுத்தப்பட்டது''

புலிகள் சரணடைவதை ஏற்றுக்கொள்ளுமாறு அரசுக்கு அழுத்தம் கொடுத்த பஸில் ராஜபக்ஷ மற்றும் அவரது மற்றுமொரு சகோதரனான கோத்தபாய ஆகிய இருவரிடமும், புலிகளின் தலைவர்களிடமும் நோர்வேத் தூதர் தொடர்பைக் கொண்டிருந்தார் என்பது அமெரிக்கத்தூதரக வட்டாரத் தகவல்களிலிருந்து வெளிப்பட்டுள்ளன.

**இராணுவத் தளபதி ஒருவரின் கட்டளை**

சரணடையும் சகல புலிகளையும் வழமையான நியமங்களுக்கு உட்படுத்தாமல் உடனடியாக கொலை செய்யுமாறு சண்டைக் களத்திலிருந்த இராணுவத் தளபதி ஒருவரால் படைவீரர்களுக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டதாக மூத்த இராணுவ அதிகாரி ஒருவரிடம் Herald மேற்கொண்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

நிராயுத பாணிகளாகச் சரணடைந்த புலி உறுப்பினர்களைச் சுட்டுக்கொன்று ஏனைய தமிழ்மக்கள் சரணடைவதை உறுதிப்படுத்திக்கொண்டது.

மனிதாபிமான மீட்பு நடவடிக்கையைத் தான் மேற்கொண்டதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

''பொதுமக்கள் தரப்பில் எவ்வித இழப்புக்களும் இன்றி அரசு தனது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது'' என்று இந்த வாரம் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் உரையாற்றும்போது பாலித கொஹன்ன தெரிவித்துள்ளார்.

புலித்தேவன் மற்றும் நடேசனின் மரணம் தொடர்பாகத் தனக்கு எவ்விதத்திலும் தொடர்பில்லை என Herald இடம் கொஹன்ன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் காணப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பாக சரியான ஆதாரங்கள் காணப்படுகின்றன.

இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களை ஏற்றுக் கொள்ள முடியாதது போல் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை தென்படுகிறது.

(நன்றி: புதினப்பலகை)

# மகாமகம்



*''ஒரு ஆற்றுக்குப் போய் குளித்துவிட்டு வந்தேன்'' என்று சொல்வதற்கும் '' ஒரு புண்ணிய தீர்த்திலே நீராடிவிட்டு வந்தேன்'' என்று சொல்வதற்கும் வித்தியாசம் உண்டு.*

*உடலை மட்டும் சுத்தப்படுத்துகிறவர் ''குளித்துவிட் வந்தேன்'' என்று சொல்லலாம். ஆனால் உடலோடு மனதையும் சுத்தப்படுத்துகிறவர் தான் புண்ணிய தீர்த்தத்திலே நீராடினேன் என்று சொல்ல வேண்டும்.*

*''பத்து நாளாகக் குளிக்கவில்லை... உடல் ஒரு மாதிரியாக இருந்தது... அதுதான் காசிக்குப் புறப்பட்டுப் போய் கங்கையிலே சோப்போட்டுக் குளித்துவிட்டு வந்தேன்!'' என்று ஒருவர் சொல்வாராயின் அவர் விவரம் தெரியாதவர் என்று அர்த்தம்.*

*அதற்காக இவர் அவ்வளவு துூரம் போக வேண்டியதில்லை; வீட்டுக்கிணற்றடியிலேயே சோப்புப் போட்டுக் குளித்திருக்கலாமே!*

*அது சரி... புண்ணிய தீர்த்தத்திலே நீராடினால் மனது எப்படி சுத்தமாகும் என்று நினைக்கலாம். அது ஒருவிதமான மனோதத்துவ சிகிச்சை ''பக்தி'' என்னும் வைத்தியர் அந்த சிகிச்சையைக் கொடுக்கிறார். அவ்வளவுதான்!*

*சாதி, மதம் என்னும் வேறுபாடில்லாமல் வடக்கு, தெற்கு என்னும் வித்தியாசம் இல்லாமல் ஒரே இடத்தில் இலட்சக் கணக்கான மக்களைப் பார்க்க முடியும் என்றால் அது சாதாரணமான விடயம்?*

*அப்படி வேறுபாடுகளைத் தீர்க்கின்ற, ஒரு மனோதத்துவ சிகிச்சை செய்கின்ற திருவிழாதான் மகாமகம்.*

*தற்போது நாம் அனைவரம் குளிக்க வேண்டும் என்றால் நதிகளுக்குப் போகின்றோம். ஆனால் நதிகள் எல்லாம் குளிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டால் எங்கே போவது?*

*கும்பகோணத்துக்குத்தான் போக வேண்டுமாம்! ஒரு தடவை கங்கை, யமுனை, நர்மதை, சரஸ்வதி , கோதாவரி, காவேரி, சரயு, சிந்து, மகாநதி ஆகிய வடிவமாக இருக்கின்ற 9 கன்னியர்களும் சேர்ந்து கயிலை மலைக்குப் போய் அங்கே உள்ள கடவுளை வணங்கினார்களாம். ''அப்போது உங்களுக்கு என்ன குறை? '' என்று கேட்டார் கடவுள்.*

*''சுவாமி நாம் எல்லோரும் நதிகளாக ஓடிக் கொண்டிருக்கின்றோம். தினமும் நிறையப் பேர் வந்து குளிக்கிறார்கள். அவர்களுடைய பாவத்தையெல்லாம் போக்குகிறார்கள். அந்தப் பாவம் எல்லாம் எங்களிடம் சேர்வது எங்களாலே தாங்க முடியவில்லை. அதனால் மிகவும் கஷ்டப்படுகிறோம். இப்போது நாங்கள் எம்மிடம் இருக்கும் பாவத்தை எங்கே கொண்டு போய்த் தொலைப்பது? அதுக்கு நீங்கள்தான் ஒரு வழியைக் காட்ட வேண்டும்'' என்று கேட்டார்கள்.*

*கடவுள் பார்த்தார் ''கவலைப் படாதீர்கள்... தென்பாரத நாட்டிலே கும்பகோணம் என்று ஓர் ஊர் இருக்கிறது. நீங்கள் நேராக அங்கே போங்கள். அந்த ஊரிலே தென்கீழ்த் திசையிலே ஒரு தீர்த்தம் இருக்கும். அங்கே எல்லோரும் போய் மூழ்கி எழுந்திருங்கள். உங்களிடம் சேர்ந்திருக்கும் பாவம் எல்லாம் போய்விடும் என்றார். ''சரி எப்போது போய் அங்கே மூழ்கி எழுந்திருக்கச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டார்கள்.*

*''தேவகுருவாகிய வியாழன் சிம்மராசியிலே தங்குகின்ற மாசி மாதத்திலே முழுநிலா நாளும் மகவிண்மீனும் கூடுகின்ற நன்னாளிலே மூழ்க வேண்டும்'' என்றார்.*

*அப்படி ஒருநாள் 12 வருடத்துக்கு ஒரு தடவைதான் வரும் என்ற விவரத்தையும் கூறினார்.*

*''சரி அப்படி என்றால் அந்த ஊருக்கு எப்படிப் போவது? வழி தெரியவில்லையே!'' என்றார்கள். ''கவலைப்படாதீர்கள். நானும் கூட வருகிறேன் வாருங்கள்'' என்று அழைத்துக் கொண்டு கும்பகோணத்துக்கு வந்து அந்த இடத்தின் மகிமையைக் கூறி அதில் மூழ்கச் சொன்னார். நவ கன்னியர்களும் மூழ்கினார்கள். அவ்வாறு மூழ்கியதும் பாவம் எல்லாம் போய்விட்டது.அந்த இடம்தான் மகாமககுளம்.*

*இப்போது அதிலே குளிக்கின்ற எல்லோருடைய பாவமும் இல்லாது போய்விடும் என்பது ஒரு நம்பிக்கை. அந்த நம்பிக்கையில் ஒரு உண்மையான நம்பிக்கையை நாமும் வைத்தால் நிச்சயமாக மேற்கொண்டு பாவங்களைச் செய்யமாட்டோம். அதுதான் ஆரம்பத்திலேயே சொன்ன ஒரு மனோதத்துவ சிகிச்சை.*

*இன்னும் 12 வருடத்தில்தான் மறுபடியும் மகாமகம் வரும் என்று தைரியத்தில் மேலும் பாவங்கைச் செய்யக்கூடாது.*

**கோ. சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
16 மே 2011 திங்கட்கிழமை

## சிவப்பு அலகுடைய செள

சிவப்பு அலகுடைய செள பறவைகள் ஆளரவமற்ற வனாந்தரப் பிரதேசங்களில் வாழும் தன்மையுடையவை. பிரிட்டனிலிருந்து துருக்கியை ஊடறுத்துச் செல்லும் சீனாவின் தூர கிழக்குப் பிரதேசங்களில் இவை காணப்படுகின்றன.

இவை தமது இருப்பிடங்களை மலைகளின் உயர்ந்த இடங்களிலும் கடலுக்கு அருகிலுள்ள பாறைகளிலும் அமைத்துக் கொள்கின்றன. இதன் மூலம் குளிர்காற்று மற்றும் மழையிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்கின்றன.

இவற்றுக்குப் பிரகாசமான சிவப்பு நிறக் கால்களும், அலகும் அமைந்திருப்பதால் இவற்றை அடையாளம் காண்பதற்கு இலகுவாக உள்ளது.

அத்துடன் காகத்தைப் போன்று அழகான கறுப்புச் சிறகுகளால் இவற்றின் உடம்பு மூடப்பட்டிருக்கும். இவை பச்சை நிறமும் நீல நிறமும் கலந்த பிரகாசமான தோற்றத்தைத் தருகின்றன.

இந்தப் பறவையின் குடும்பத்தைச் சேர்ந்த அல்பைன் செள பறவை இதைப் போன்று காணப்பட்டாலும் அதன் அலகு மஞ்சள் நிறமுடையது.

இவை புழுக்கள், சிறிய பூச்சிகள் என்பவற்றை உண்ணுவதில் விருப்பமுடையவை.

இவை மிகவும் அற்புதமான முறையில் மலையைச் சுற்றிச் சுழன்று பறக்கும் வழக்க முடையவை.

தெளிவான பார்வை இந்தப் பறவைகளுக்கு உள்ளதால் செங்குத்தான மலைகளிலும் அதிக உயரத்துக்குப் பறந்து செல்லக் கூடியவை.


பெண் பறவை ஒன்று மூன்றிலிருந்து ஐந்து வரையான முட்டைகளை இடுகின்றது.

இவை மங்கலான பச்சை அல்லது வெள்ளை நிறத்தையுடையனவாகக் காணப்படுகின்றன.



-ராஜன்

## சிறைப் பறவை



சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.

சிறைக்குள் அடைக்கப்பட்டு வாழும் பறவை இனம் ஒன்று உள்ளது. அந்த இனத்தின் பெயர் ஹார்ன் பில்.

இந்த ஹார்ன் பில் பறவை இனத்தின் பெண் பறவை முட்டை இட்டு அடைகாக்கும் போது அதைப் பாதுகாக்க ஆண் பறவை பொந்தை அப்படியே மூடிவிடும்.

உள்ளிருக்கும் பெண்பறவை அலகு மூலம் இரையை வாங்குவதற்குச் சின்னத்துவாரம் இருக்கும்.

பெண் பறவைக்கு ஆண் பறவைதான் இரை கொடுக்கும். பெண்பறவை குஞ்சு பொரித்த பின் தன் அலகால் சிறையை உடைத்துக் கொண்டு வெளியே வரும்.

குரங்குகளின் அட்டகாசத்தில் இருந்து தாயையும் குஞ்சுகளையும் பாதுகாப்பதற்காகவே பெண்பறவையை ஆண் பறவை இப்படிச் சிறை வைக்கிறதாம்.

## விலங்குகள் பேசுவது புரிந்தால்...



முன்னொரு காலத்தில் ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். ஒருசமயம், காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்த அவன் அங்கே புலியிடம் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த துறவி ஒருவரைக் காப்பாற்றினான். மகிழ்ந்த துறவி, ''பறவைகள், விலங்குகள் என்ன பேசினாலும் இன்றுமுதல் உனக்குக் கேட்கும். இப்படிப்பட்ட ஆற்றல் உனக்குக் கிடைத்திருக்கிறது என்ற உண்மையை யாரிடமும் சொல்லக் கூடாது. அப்படிச் சொன்னால் தலை வெடித்து நீ இறந்து விடுவாய் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு போய் வா,'' என்றார். துறவியை வணங்கிவிட்டு அரண்மனைக்குப் புறப்பட்டான் அவன். வழியில் இருந்த விலங்குகள் பறவைகள் பேசிக் கொள்வது அவனுக்குத் தெளிவாகக் கேட்டது. தற்செயலாகக் கிடைத்த விந்தையான ஆற்றலை எண்ணி மகிழ்ந்தான் அவன். இரவு நேரம், அவனும் அரசியும் சாப்பிட்டுக் கொண் டிருந்தார்கள், அப்பொழுது சிறிதளவு தேனும் ஓர் உருண்டை சோறும் தவறித் தரையில் விழுந்தன. அங்கிருந்த எறும்பு ஒன்று, ஓடி வாருங்கள், கூட்டமாக ஓடி வாருங்கள், நமக்கு இனி உணவுப் பஞ்சமே இல்லை. அரண்மனை மதுக்குடம் உடைந்து தேன் வெள்ளமாகப் பாய்கிறது. பெருஞ்சோற்று மலையே நமக்காகக் கிடக்கிறது, என்று உரத்த குரலில் தன் கூட்டத்தை அழைத்தது. இதைக் கேட்ட அரசன், இரண்டு சொட்டு தேன், தேன் வெள்ளமா? ஓர் உருண்டை சோறு பெருஞ்சோற்று மலையா? இந்த எறும்புக்கு அறிவே இல்லையா? இப்படியா வர்ணிப்பது? என்று நினைத்தான், அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. தன்னை மறந்து கலகலவென்று சிரித்துவிட்டான். அருகிலிருந்த அரசி, ஏன் சிரிக்கிறீர்கள்? என்று கேட்டாள். ஒன்றும் இல்லை, என்று மழுப்பனான் அவன். சாப்பிட்டு முடித்த அரசன் பட்டு மெத்தையில் படுத்தான். அரசி வெற்றிலை பாக்கு மடித்துத் தந்து கொண்டிருந்தாள். அறையில் இனிய மணம் பரவியது.

அங்கிருந்த ஆண் ஈ ஒன்று, பெண் ஈயை அழைத்து, எவ்வளவு அருமையான இடம் ! நாம் இருவரும் அரச னின் முதுகில் ஓடியாடி விளையாடுவோம். மகிழ்ச்சியாக இருப்போம். இதைப் போன்ற நல்வாய்ப்பு யாருக் குக் கிடைக்கும்? என்றது. என் முதுகு இந்த ஈக்களுக்கு மெத்தையா? என்று நினைத்தான் அரசன். அவ னால் சிரிப்பை அடக்க முடியவில்லை.


மீண்டும் கலகலவென்று சிரித்தான். ''ஏன் சிரிக்கிறீர்கள்'', என்று கேட்டாள் அரசி. ஒன்றும் இல்லை, என்று வழக்கம் போல மழுப்பினான். உண்மையைச் சொல்லுங்கள். என்னிடம் எதையோ மறைக்கிறீர்கள்? நீங்கள் சொல்லாவிட்டால் நான் இனிமேல் உங்களுடன் பேசமாட்டேன். என்மீது உயிரையே வைத்திருப்பதாக நீங்கள் சொன்னதெல்லாம் நடிப்பு, என்று கோபத்துடன் சொன்னாள் அவள்.

''என் உயிருக்கும் மேலாக நான் உன்னிடம் அன்பு வைத்திருக்கிறேன். நான் சிரித்ததற்கான காரணத்தை மட்டும் கேட்காதே'' என்றான் அவன். ''நீங்கள் சொல்லித்தான் ஆக வேண்டும்'', என்று வற்புறுத்தினாள் அவள். உண்மையைச் சொன்னால் என் உயிர் போய்விடும், என்றான் அவன்.

அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீங்கள் சிரித்ததற்கான காரணம் எனக்குத் தெரிய வேண்டும், என்று அடம்பிடித்தாள் அவள். என்ன செய்தாலும் தன் மனைவியைச் சமாதானப்படுத்த முடியாது என்று உணர்ந்தான் அவன். என் உயிரைவிட உனக்கு நான் சிரித்ததற்கான காரணம் தெரிய வேண்டும்.

[தொடரும்]

## பட்டம்



சின்னச் சின்னப் பட்டமாம்
சிங்காரப் பட்டமாம்
அண்ணன் செய்த பட்டமாம்
அருமையான பட்டமாம்

வட்டமான பட்டமாம்
வாலிருக்கும் பட்டமாம்
கிட்ட வராப் பட்டமாம்
காற்றிலாடும் பட்டமாம்

பச்சை வண்ணப் பட்டமாம்
பறக்கும் நல்ல பட்டமாம்
அச்சமின்றிக் காற்றிலே
ஆடும் நல்ல பட்டமாம்

உயரப் போகும் பட்டமாம்
ஊசலாடும் பட்டமாம்
துயரமின்றி ஆடுமாம்
துள்ளி வானில் ஓடுமாம்.

கை.சிவனுகா,
கோப்பாய்தெற்கு.

## அலங்கார வண்ணம்...



மகிழ்வித்தல்: வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் றோயல் விமலேந்திரன் வெற்றிக் கிண்ணத்துக்கான இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டி இறுதி ஆட்டத்தில் சிறுவர்களின் நிகழ்வு இடம்பெறுகின்றது. (86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின் இருப்பை தரணிக்கு உணர்த்தி அறிவொளி பரப்பும் யாழ்.பொது நூலகம்



ஒரு நாடாயினும் பிரதேசமாயினும் சமூக தனிமனித சூழலென்றாலும் பல்துறைகளிலும் பெருவளர்ச்சி பெற்று பிரகாசிக்கும்போது அந்த உயர்ச்சிக்கு அடிப்படையாக அமைவது கல்வி என்னும் அழியாச் செல்வமாகும். கல்வியூட்டலும் அறிவுத்தேடலும் கருவறை தொடக்கம் கல்லறை வரை நீண்டு செல்கிறது. எப்படித்தான் விழுந்து விழுந்து படித்தாலும் 'கற்றது கையளவு கல்லாதது உலகளவு' என்பது மாறாத தத்துவமாகும். ஏனெனில் கல்வி எனும் பெருங்கடல் பல்வேறு மார்க்கங்களில், புதிய வடிவங்களில் நீண்டு கொண்டே செல்லும் முடிவிலி ஆகும்.

கல்வியைப் புத்தகக் கல்வி, செய்முறைக்கல்வி, காண்பியல் கல்வி, பட்டறிவுக் கல்வி போன்ற பல வழிகளில் பெற்றுக்கொள்ளமுடியும். 'கண்டதும் கற்பவன் பண்டிதனாவான்' என்பது பழமொழி, பல்துறை அறிவு சார் நூல்களைத் தேடிப்பிடித்து அறிவை விருத்தி செய்வது குறுகிய கால மனிதவாழ்வில் முடியாத காரியமாகும் என்பதை உணர்ந்த முன்னைய ஆன்றோர்கள் அரிய நூல்களின் காப்பிடமாகவும், படிப்பகமாகவும் விளங்கும் நூலகங்களின் தோற்றுகைக்குக் காரணமாக இருந்தனர். ஏட்டுச் சுவடிகளில் தொடங்கிய நூலகங்கள் இன்று கணினி வசதிகளுக்குள் விரிந்து செல்கிறது.

அரசியல், சமூக, பொருளாதார, விஞ்ஞான, சமய, கலை, இலக்கிய, வரலாற்றுக் கண்டுபிடிப்பு, தத்துவ, நவீன, அறிவியல், தொன்மைக்கால மனித வாழ்வியல் வளரச்சி வரலாறு போன்ற பல்துறைகளில் அறிஞர்கள், மேதைகள், தலைவர்கள்,கவிஞர்கள் யாத்துத்தந்த பலதரப்பட்ட பன்மொழிசார் நூல்கள், தகவல்கள் செய்திகளை ஒரே கூரையின் கீழ் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதும், அறிவுப் பசி உடையோரை கல்வியால் நிரப்பிடும் சக்தியும் நூலகங்களுக்கு உண்டு.

தமிழர் பகுதிகளில் இன்று பெருமளவு நூலகங்கள் இருந்தாலும் அவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல தாயாக விளங்கும் அரிய பெருமைகள் சேர்ந்த நூலகம் எம் மண்ணில் தலை நிமிர்ந்து அறிவொளி பரப்பிக் கொண்டிருப்பது பெருமைக்கும் தமிழர் கல்விமீது கொண்டிருக்கும் தணியாத தாகத்துக்கும் எடுத்துக் காட்டாகும். உள்ளூர் வாசிகசாலையாகத் தோற்றம்பெற்று இன்று தேசிய மட்டத்திலும், சர்வதேச அளவில் அறியப்பட்டதும் யாழ்ப்பாணத்தை அடையாளப்படுத்தும் குறியீடுகளில் முதன்மையானதாகவும் யாழ். பொதுசன நூலகம் போற்றிப் பேணப்படுகிறது.

யாழ். பொதுசன நூலகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் யாழ்ப்பாண வரலாற்றோடு பின்னிப் பிணைந்ததாகும். நூலகத்தின் தேவை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே யாழ். மண்ணில் உணரப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டதாக அறியக்கிடக்கின்றது. யாழ்ப்பாண இராச்சியம் தமிழ் மன்னர்களால் ஆளப்பட்டபோதே நாயன்மார்கட்டு என்னும் குளக்கரையில்நூலகம் அமைத்து பயன்படுத்தி வந்துள்ளனர்.

பின்னர் 19 நூற்றாண்டின் நடுப்பகுதியில் 1842 இல் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் யாழ். நீதிமன்றச் செயலாளராக கடமையாற்றிய எவ்.சி. கிறீனியர் என்பவர் பொதுமக்கள் ஒன்றியம்' என்னும் பெயரில் வாசிகசாலையொன்றை ஆரம்பித்து நடத்திவந்தார். 1848 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண உதவி அரச அதிபராக இருந்த சேர் வில்லியம் துவைனம் என்பவரும் நூலக செயற்பாடுகளில் முன்னோடியாக விளங்கினார். அதேவேளை நீதிமன்றச் சட்டத்தரணிகளால் தமது தேவைக்கென சட்ட நூலகம் ஒன்று நடத்தப்பட்டு வந்தது. துவைனம் வாசிகசாலையை நூல் நிலையமாக மாற்றினார்.

உதவி அரச அதிபராக இருந்த சேர் துவைனம் அரச அதிபராகப் பதவி ஏற்றபின் 03-06-1894 ஆம் ஆண்டு யாழ். நூலக அபிவிருத்திக்கென கூட்டமொன்றைக் கூட்டினார். அப்போது அரசிடமிருந்து 500 ரூபா நன்கொடையாகப் பெற்று மோடி அன்பிற தர்ஸ் நிறுவனத்திடம் நூல்கள் கொள்வனவு செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறான நூலகம் சார் செயற்பாடுகள் பிரித்தானிய துரைமார்களினால்

**எஸ்.யேசுதாஸ்**

முன்னெடுக்கப்பட்டுவந்ததால் 1933 ஆம் ஆண்டில் நீதிமன்றக் காரிய தரிசியாக இருந்த அச்சுவேலியைச் சேர்ந்த க.மு. செல்லப்பாவின் பெரிய அளவிலான பொதுநூலகம் அமைக்கும் எண்ணம் உதயமானது. கந்தர்மடத்தில் இயங்கி வந்த முதல் நூற்றுவர் என்னும் இளைஞர் முன்னேற்றச் சங்கத்தின் உதவியுடன் வீடுகள் தோறும் நூல்கள் சேகரிக்கும் பணி ஆரம்பமானது.

(தொடரும்)

# யாழ்.நகரில் புகழ்வாய்ந்த சிவாலயங்களில் ஒன்றாக விளங்குகின்ற வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

ஒல்லாந்தர் காலத்தில் அமைக்கப்பட்ட வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தின் பரிவாரக்கோயில்களில் ஒன்றாக வேம்படிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் அமைந்திருக்கும் ஏனைய பரிவாரக் கோயில் கற்கட்டு வைரவர் கோயிலாகும். வைத்தீஸ்வரன் கோயிலில் இடம்பெறும் சிவன் உற்சவ காலங்களில் போதும் பூர்வாங்கக் கிரியைகளைச் செய்யும் போதும் இந்தக் கோயிலுக்கு வந்து விசேட அபிஷேகங்களைச் செய்த பின்னர் பிரதான கோயிலில் பூசைகள் ஆரம்பிக்கப்படும். இத்தகைய பரிவாரக் கோயில்கள் வைத்தீஸ்வரன் கோயிலின் விசேட தன்மையாக அமைந்துள்ளன.

சிவன் கொடியேற்றம் நடக்கும் முன்பு, வரும் முதல் செவ்வாய் அல்லது வெள்ளிக்கிழமைகளில் கற்கட்டு வைரவர் கோயிலின் கொடியேற்றம் ஆரம்பமாகும். ஆனால் இத்தகைய நடைமுறை அம்மன் கொடியேற்றத் திருவிழாவின் போது நடைபெறுவதில்லை.

இவ்வாறு நீண்ட வழக்காறுகளைக் கொண்டு அமைக்கப்பட்ட இந்தப் பரிவாரக் கோயில்கள் அனைத்திலும் ஆரம்பகாலம் தொடக்கம் இன்றுவரை சிறப்பாக நித்திய, நைமித்திய பூசைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வைத்தீஸ்வரன் கோயிலில் நடைபெறும் மஹோற்சவங்கள், விசேட உற்சவங்கள் காலங்களிலெல்லாம் இந்தப் பரிவாரக் கோயில்களுக்குத் தேவையான அனைத்துவிதமான குறிப்பாக வேட்டி, சேலைகள் மற்றும் பூசைக்குரிய அனைத்துப் பொருள்கள், பொங்கல் காலங்களில் தேவையான பானைகள், இதரபொருள்கள் அனைத்துமே வைத்தீஸ்வரன் கோயிலில் இருந்தே எடுத்துச் செல்லப்படுகின்றன.

இவ்வாறான சிறப்பம்சங்கள் வைத்தீஸ்வரன் கோயிலையும், பரிவாரக் கோயிலையும் ஒன்றிணைத்து இரண்டுக்குமான தொடர்பை எடுத்துக் காட்டுவனவாக அமைந்திருப்பது சிறப்பு அம்சங்களாகும்.

வண்ணை வைத்தீஸ்வரன் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் சிறப்பு வாய்ந்த ஒரு திருத்தலமாகும்.

இந்தத் தலத்தின் தீர்த்தம் வண்ணை மேற்கிலுள்ள வில்லூன்றி என்னும் சமுத்திரச் சங்கத் தீர்த்தமாகும். இந்தத் தீர்த்தமும் அதனைச் சுற்றியுள்ள நிலங்களும் ''வில்லவராயன் குளக்கரையும் மருதோண்டிக்காடும்'' என்ற ஆதனத்தின் பெயரால் அழைக்கப்பட்டு வருகின்றது.

வைத்தீஸ்வரன் கோயிலுக்கென உருவாக்கப்பட்ட இந்தப் புனிதத் தீர்த்தம் அமைந்துள்ள நிலங்கள் 1994 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரச வர்த்தமானியின் பிரகாரம் வைத்தீஸ்வரன் ஆலயத்தின் ஆதனங்களில் ஒன்றாகும்.

''கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'' என்ற முன்னோர்களின் வாக்குக்கிணங்க ஓர் ஆலயத்தின் பிரதான அங்கமாக அமைவது கோபுரமாகும். ஆலயத்தின் உள்ளே இருக்கும் கோபுரங்களையும் விட உயர்ந்ததாக இருக்கும். இதனையே இராஜகோபுரம் அல்லது ஸ்தூலலிங்கம் என்று கூறப்படுகின்றது.

இந்தக் கோபுரம் வானளாவி உயர்ந்து மூல மூர்த்தியின் மகிமையை விளக்கும் முறையில் அமைந்துள்ளது. மேலே கூறப்பட்ட சிறப்புக்களைத் தன்னகத்தே தற்போது கொண்டிருக்கும் இந்தக் கோபுரம் வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் அமைந்திருப்பது யாழ்ப்பாண மாநகரத்தின் எழிலை இன்னும் அதிகரிப்பதாக அமைந்துள்ளது.

இந்தக் கோயிலின் இராஜகோபுரமானது 1970 ஆம் ஆண்டளவில் அடித்தளமிட்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் நிர்மாண வேலைகள் போர்க்காலச் சூழ்நிலைகளின்போது பல தடவைகள் தடைப்பட்டாலும் 1987 ஆம் ஆண்டு முற்றுப்பெறும் நிலையில் அந்தக் காலப்பகுதியில் இடம்பெற்ற விமானத் தாக்குதலால் கோபுரமும் கோயிலின் பல பகுதிகளும் சேதமடைந்தன.

மீண்டும் துரிதகதியில் நிர்மாணிக்கப்பட்டு தற்போது வண்ணை ஸ்ரீ வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரன் சுவாமியின் அருளால் பஞ்சதள இராஜ கோபுரமாக உருப்பெற்று கும்பாபிஷேகமும் நடைபெற்றது.

இந்த இராஜகோபுரம் 70 அடி உயரமானதாகும். அதுமட்டுமன்றி பஞ்ச தளங்களைக் கொண்டு உரிய அளவுப் பிரமாணத்துக்கமைய அமைக்கப்பட்டுள்ளதுடன் இதில் காணப்படும் கடவுளின் உருவங்களும் ஏனையவையும் அவற்றின் உடல் நிர்மாணத்துக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன. பொதுவாக ஒற்றைப்பட எண்ணிக்கையில் அமைந்திருக்கும் வாயில்கள் அவற்றுக்குரிய தத்துவ விளக்கத்துடன் அமைக்கப்பட்டிருக்கும்.'

இந்த ஆலயத்தில் ஐந்து தளங்களைக் கொண்ட வாயில்கள் காணப்படுகின்றன. இவை உடலின் ஐந்து பொறிகளையும் குறிப்பவையாக அமைந்திருப்பதுடன் சுடலையில் நடனமாடிய சிவனின் உடலில் பூசப்பட்டிருக்கும் சாம்பலின் நிறம் கோபுரத்தின் வர்ணமாகப் பூசப்பட்டிருப்பதும் சிறப்பம்சமாகும்.

அபிஷேக தினங்களாகச் சித்திரை, ஆனி, ஆவணி, புரட்டாதி, மார்கழி,மாசி ஆகிய மாதங்களில் சிறப்பான பூசைகள் இடம்பெறுகின்றன. ஆலயத்தின் பரிவார விக்கிரகங்கள் நர்த்தன விநாயகர், தட்சணாமூர்த்தி, ஏகபாதர், லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை ஆகியன காணப்படுவதுடன் அம்மன் கோயில்களாக ஸ்ரீ மகேஸ்வரி, ஸ்ரீ வைஷ்ணவி, ஸ்ரீ பிராம்மி, ஸ்ரீ கௌமாரி, ஸ்ரீ துர்க்கை ஆகியன காணப்படுகின்றன.

பஞ்சலிங்கங்களான இராமலிங்கேஸ்வரர், முன்னைவனேஸ்வரர், வேதபுரீஸ்வரர், விஸ்வநாதேஸ்வரர், சோமசுந்தரேஸ்வரர் ஆகியோரின் விக்கிரகங்களும், விநாயகர் தண்டாயுதபாணி சுப்பிரமணியர், மஹாலக்சுமி, சரஸ்வதி, சனீஸ்வரன், சூரியன், சந்திரன் , வைரவர், சாமுண்டீஸ்வரி, அதிகார நந்தி, நவக்கிரகம், கற்பக விநாயகர், களஞ்சிய விநாயகர்,



**சோபனா**

நால்வர், அறுபத்துமூவர், சண்டேசுவரர் ஆகிய விக்கிரகங்கள் இங்கு எழுந்தருளியுள்ளன. தேவாரம் பாடிய சமய குரவர்களுக்கு இந்த ஆலயத்தில் முக்கிய இடம் வழங்கப்பட்டு வருடந்தோறும் நால்வர் குரு பூசைகளும் இடம்பெறுகின்றன. வருடந்தோறும் பங்குனி உத்தர தினத்தை தீர்த்த மாகக் கொண்டு 19 தினங்கள் நடைபெறும்.

மஹோற்சவ காலத்தில் இரண்டாம் நாள் முதல் நான்காம் நாள் வரை விநாயகர் உற்சவமும் நான்காம் நாள் மாலை முதல் ஏழாம் நாள் வரை முருகனுக்குரிய உற்சவமும் நடைபெறும். எட்டு முதல் பத்தாம் நாள் வரை பக்த உற்சவமும் நடைபெறுகிறது.

ஒல்லாந்தர் காலத்தில் அமைக்கப்பட்ட இந்தச் சிவன் ஆலயம் யாழ். மாவட்டத்தில் சிவனடியார்களின் புண்ணியத் தலங்களில் ஒன்றாகும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாகனங்களுக்கான
DC காத்தடிக்கும் இயந்திரம்
ரூபா 6950/-இருந்து
டயிரஸ் ஸ்டோர்ஸ்
புறக்கோட்டை, லிபட்டி பிளாசா
2439422

# மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, மே 16

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2393 ஆம் இலக்க கடந்த வெள்ளிக்கிழமை சீட்டிழுப்பில் "J" என்ற ஆங்கில எழுத்தும் 4/2/8/2/9/3 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை.

4/2/8/2/9/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் இருவருக்கு முதலாம் பரிசாகத் தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

2/8/2/9/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 17 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

8/2/9/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 132 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

2/9/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,300 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

9/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,043 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

3 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,30,302 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும்.

இடமிருந்து வலமான அமைப்பில் 4/2/8/2/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13 பேருக்கு ஏழாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

4/2/8/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 136 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

4/2/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,282 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

4/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12,959 பேருக்கு பத்தாம் பரிசாகத் தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

"J" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 52,147 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ற)

# விண்ணப்பக் கட்டணம் இரத்துச் செய்யப்பட்டது

வடமாகாண பொதுச்சேவைக்கு அலுவலகப் பணியாளர் சேவையில் வகுப்பு III பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பக் கோரலுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு விண்ணப்பக் கட்டணங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டமை தொடர்பாகவும் பத்திரிகைகளில் கடந்த ஏழாம் திகதி திருத்தி வெளியிடப்பட்ட விளம்பரங்களுக்கு அமைவாகவும் விண்ணப்பக் கட்டணங்கள் இரத்துச் செய்யப்படவுள்ளன.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. இது தொடர்பான விவரங்கள் சகல பிரதேசங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் கி.திருவாகரன் அறிவித்துள்ளார். (ம-313)

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 கிலோவுக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய
BAHIRAHA No-1 புறொயிலர் குஞ்சுகள்
19.05.2011 விநியோகிக்கப்படும்.
விலை 90 கூடுதல் கொள்வனவு செய்பவர்களுக்குக் கழிவு வழங்கப்படும். இறைச்சிக் கோழிகள் மீண்டும் கொள்வனவு செய்யப்படும்.

- ராஜீவ்-நவாலி வீதி, ஆனைக்கோட்டை
- துர்க்கா பாம்- ஸ்ரேசன் றோட், சுன்னாகம்
- ஜென்சிபாம், முதலாம் கட்டை, பருத்தித்துறை

T.P.: 021 222 2867, 0776090926

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, கொக்குவில் அம்மன் வீதியில் நிலப்பரப்பு 2 குழி 12 ¼ காணி, ஒரு கடையுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776288718, 0213219521.

## தவறிவிட்டது

நபாற்க்ந்தோர் வீதி, கோடுக்குளாய், ஆழியவளை தாளையடியைச் சேர்ந்த சிறீஸ்கந்தராசா சிவதீசன் என்பவரது தே.அ.அ. [881184885V] திருவையாறுக்கும் சேவியர் கடைச்சந்திக்கும் [கனகபுர வீதியில்] இடையில் தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். அல்லது 0776573284 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**முத்தையா அருமைத்துரை**
(ஓய்வுபெற்ற ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்)

திதி:30.05.2011

காலத்தின் நியதி மாறாது எமக்கு மட்டும்
கனத்த உள்ளத்தின் நினைவுகள்
ஆண்டுகள் ஏழு சென்றும்
ஆறாமையால் வருந்துகின்றோம்
ஆருயிர்த் தெய்வமே அப்பாவே!
நீங்கள் ஆத்மா சாந்திக்காக
அனுதினம் அத்துளு அம்பாளை
வேண்டி பிரார்த்திக்கும்...

அன்னை மடியில்: 05.07.1946
ஆண்டவன் அடியில்: 16.05.2004

மனைவி, மக்கள்,
அன்பு அக்கா, மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அத்துளு அம்மன் கோயிலடி,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.
தொ.பே.: 021 2263632

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்: 26 36 37 50 — சிங்கம்

1293 சிகப்பு — 13-05-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 4,157,750/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 241,703 | 20/- | 4,834,060/- |
| 2 இலக்கங்கள் | 22,103 | 40/- | 884,120/- |
| 1 இல. + லக்கினம் | 21,919 | 60/- | 1,315,140/- |
| 2 இல. + லக்கினம் | 2,019 | 200/- | 403,800/- |
| 3 இலக்கங்கள் | 594 | 1000/- | 594,000/- |
| 3 இல. + லக்கினம் | 62 | 10,000/- | 620,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 4,157,750/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 9,251,120/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 654 | | 625,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 209,057 | | 9,876,620/- |

அடுத்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,236,550/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்: 17 21 22 54 — விருச்சிகம்

ஜக்பொட் பரிசு ரூபா. 600,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 651 | 500/- | 325,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 600,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 654 | | 625,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 700,000/-

கவனிக்கவும்: அபிவிருத்தி லொத்தர் சபையின் பிரதான சீட்டிழுப்பின் பின்னர் இடம்பெறும் இரண்டாவது சீட்டிழுப்பில் 4 வெற்றி இலக்கங்களும் லக்கினமும் முதலாவது சீட்டிழுப்பின் 4 வெற்றி இலக்கங்கள் மற்றும் லக்கினத்துடன் பொருந்தி பரிசு பெற்றுக்கொள்ள முடியாது.





**17th, 18th May 2011** யாழ்ப்பாணம் பொதுநூலகத்தில்

17th - 9.00 am to 5.00 pm
18th - 9.00 am to 1.00 pm

### இந்திய கல்விக் கண்காட்சி 2011 உங்களுக்கு வழங்குவது என்ன?

- பட்டதாரி மற்றும் முதுநிலைப் பட்டதாரி கல்வியை வழங்கும் இந்தியக் கல்வி நிலையங்கள்
- இலவச தொழில்சார் வழிகாட்டுதலும் ஆலோசனையும்
- தொழில் பயிற்சி நிலையங்கள்
- தொழில்சார் திட்டமிடல் பற்றிய கருத்தரங்குகள்
- விமானப் போக்குவரத்துத் துறை கல்வி நிலையங்கள்
- வியாபாரப் பாடசாலைகள்
- தகவல் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் கல்லூரிகள்
- தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையங்கள்
- சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ கல்வி நிலையங்கள்
- ஹொட்டேல் முகாமை மற்றும் சுற்றுலா கல்வி நிலையங்கள்
- நிதி மற்றும் வங்கித் தொழில் கல்வி நிலையங்கள்
- கடற் போக்குவரத்துக் கல்வி நிலையங்கள்
- கல்வி ஆலோசகர்கள்
- உள்ளக வடிவமைப்பு மற்றும் கட்டடக்கலை நிலையங்கள்
- செயலக அலுவல் பயிற்சி நிலையங்கள்
- மருத்துவ மற்றும் தாதிமார் கல்வி நிலையங்கள்
- மூன்றாம்நிலை கல்வி நிலையங்கள்
- நுண்கலை மற்றும் நவநாகரிகக் கலை பாடசாலைகள்

ORGANISED BY: EdCIL (India) Limited
SUPPORTED BY: CONSULATE GENERAL OF INDIA JAFFNA
PROFESSIONAL EXHIBITION ORGANISER: LECS LANKA EXHIBITION

4th Floor, Automobile Association Building,
No. 40, Sir Mohamed Macan Marker Mw.
Colombo 03
Tel: 011 23[illegible]
E-mail: sudesh@saexhibitions.com

## மஹஜன சம்பத / Mahajana Sampatha

2011.05.13 — அலுவலக முடிவுகள் — சீட்டிழுப்பு இல. 2393

வெற்றி எழுத்து: J — வெற்றி எண்கள்: 4 2 8 2 9 3

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | J 4 2 8 2 9 3 | ரூபா.10,000,000/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 4 2 8 2 9 3 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | 2 8 2 9 3 | ரூபா. 100,000/= | பரிசுகள் 17 |
| 3 பரிசுகள் | 8 2 9 3 | ரூபா. 10,000/= | பரிசுகள் 132 |
| 4 பரிசுகள் | 2 9 3 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1300 |
| 5 பரிசுகள் | 9 3 | ரூபா. 100/= | பரிசுகள் 13043 |
| 6 பரிசுகள் | 3 | ரூபா. 20/= | பரிசுகள் 130302 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 4 2 8 2 9 | ரூபா. 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | 4 2 8 2 | ரூபா. 1,000/= | பரிசுகள் 136 |
| 9 பரிசுகள் | 4 2 8 | ரூபா. 100/= | பரிசுகள் 1282 |
| 10 பரிசுகள் | 4 2 | ரூபா. 50/= | பரிசுகள் 12959 |
| 11 பரிசுகள் | J | ரூபா. 20/= | பரிசுகள் 52147 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
Rs. 14,315,430.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட் சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுழிபுரம் - பறாளாய் அருள்மிகு

# ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்

# தேர்த் திருவிழாச் சிறப்புமலர் -16.05.2011



### ஆனந்தம் தந்திட தேர் ஏறிவருகின்றான்

சகல செல்வங்களும் நிறைந்த சுழிபுரப்பதியில் வந்த வினையும் வருகின்ற வல்வினையும் போக்கவல்ல பறாளாய் அம்பதி முருகன் இன்று தேர் ஏறி வருகின்ற கண்கொள்ளாக் காட்சி ஆனந்தத்தைத் தருகின்றது.

இந்த ஆலயத்தில் எமது தொண்டர் சபையினர் சகல தொண்டுகளையும் செய்து வருகின்றனர். குறிப்பாக மஹோற்சவ காலங்களில் அன்னதானம் சகல அடியார்களுக்கும் சிறப்பாக வழங்கப்படுகின்றது. தாக சாந்தியும் சிறப்பாக நடைபெறுகின்றது.

எமது தொண்டுக்கு சகல வழிகளாலும் அடியார்கள் உதவி செய்து வருகின்றார்கள். சகல அடியார்களும் பறாளாய் முருகன் அருள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வேண்டுகின்றோம்.

தொண்டர் சபையினர்,
பறாளாய், சுழிபுரம்

### ஆலய மஹோற்சவ குருவின் ஆசிச்செய்தி

அண்டசராசரங்களையும் இறைவன் தன்னுடைய திருப்பார்வையினால் அருளாட்சி செய்கிறார். ஆன்மாக்களை நல்வழிப்படுத்தும் பொருட்டு சுழிபுரம் பறாளாய் என்னும் பதியில் உருவத் திருமேனி கொண்டு வீற்றிருக்கும் முருகப்பெருமானுக்கு வைகாசி மாதத்தில் விசாக நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் கூடிய தினத்தில் 12 நாள்கள் பிரம்மோற்சவம் நடைபெறுகின்றது.

11 ஆம் நாளில் ஆயுர் வேதத்தில் கூறப்பட்ட ''ராதேப்பியோ ரதபதிப்ஷ்சவோ நமஹ'' என்ற வாக்கிற்கமைய ஆன்மாக்களுடைய ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களை அழித்து நாம் கேட்பனவற்றை வழங்குகின்ற இறைவன் திருவருள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்று கூறி ஆசி கூறுவதில் மகிழ்கின்றேன்.


*கிரியாபூஷணம் பிரம்மஸ்ரீ சு.முரளிதரக் குருக்கள்,*
*நீர்நொச்சித் தாழ்வு சித்தி விநாயகர் தேவஸ்தானம், அரியாலை*

### இராமரின் கால் பதியப்பட்ட திருவடிநிலையில் தீர்த்தோற்சவம்

மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் சிறப்புக்களுடைய நாற்புறமும் வயல்களினால் சூழப்பட்ட சுழிபுரம் பறாளாய் எனும் பதியில் வள்ளி தேவசேனாபதியாக விளங்குகின்ற முருகப் பெருமானுக்கு வைகாசி மாதத்தில் மஹோற்சவம் நடைபெறுகின்ற இந்நாளில் அவனுடைய பெருமையை நினைப்பதில் அகம் மகிழ்கின்றேன். சங்கமித்தையினால் கொண்டு வரப்பட்ட வெள்ளரச மரம் வசந்த மண்டபத்துக்கு அருகில் இன்றும் உள்ளது. அதன் பக்கத்தில் இராசகுமாரிகள் வந்து நீராடிய ஏழு குன்றுகள் உள்ள தீர்த்தக்கேணியும் உள்ளது. இராமரின் கால்பதியப்பட்ட திருவடிநிலையில் தீர்த்தோற்சவம் நடைபெறுகின்ற இவ்வாலயத்தில் 11 ஆம் நாள் தேர்த் திருவிழா நடைபெறுகின்றது.

இத்தினத்தில் அவனுடைய அடியார்களுக்கு எம்பெருமானுடைய திருவருள் கிடைக்க வேண்டும் என்று அவனை வணங்கி உங்களுக்கு ஆசிகூறுவதில் மகிழ்கின்றேன்.

பரம்பரை அர்ச்சகர், மு.பாலகுருசாமி சர்மா



### துன்பங்கள் போக்கிட காத்தருள் முருகா

பறாளாய் அம்பதியில் கோயில் கொண்டு அருள் பாலிக்கும் கந்தவேற் பெருமான் இன்று அழகிய சித்திரத் தேரில் வீதியுலா வருகின்றார். இந்த அருமையான நன்நாளில் அடியார்கள் அனைவரும் சகல செல்வங்களைப் பெற்று பல்லாண்டு சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல எம்பெருமான் சண்முகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

வேலாயுத இரத்தினசபாபதி
தலைவர், தர்மகர்த்தா சபை,

## மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமையப்பெற்ற திருத்தலம்

இலங்காபுரியின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தின் மேற்குத் திசையில் சகல செல்வங்களும் நிறைந்த இடம் சுழிபுரம். நான்கு பக்கமும் வயலால் சூழப்பெற்ற மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமையப்பெற்ற பறாளைப் பதியின் அருள்மழை பொழியும் ஆனைமுகன் ஆறுமுகன் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆறுமுகன் ஆலயத்தில் வைகாசிப் பூரணையை தீர்த்தமாகக் கொண்டு முன்னதாக பதினொரு தினங்களுக்கு மஹோற்சவம் நடைபெறும். இவ்வருடம் கடந்த 06.05.2011 வெள்ளியன்று கொடியேற்றம் ஆரம்பமாகி இன்று வள்ளி தெய்வானை சமேத சண்முகநாதப் பெருமான் அழகிய சித்திரத்தேரில் ஆடி அசைந்து வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சி.

''ஓராறு முகம் ஒளிரக் கண்டோம்'' என்று பக்தர்கள் ஆனந்தக் கண்ணீர் வடிக்க பாற்காவடி, புஸ்பக்காவடி, ஆட்டக்காவடி இவையெல்லாம் கந்தன் முன் ஆடி ஆடி வர ''நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே'' என அடியார்கள் கண்ணீர் மல்கும் காட்சியும் ஒரு காட்சிதான்.

இந்த அழகிய கந்தவேற் பெருமான் அழகிய சித்திரத்தேரில் வீதியுலா வரும்பொழுது வீதியெங்கும் அடியார்கள் அங்கப் பிரதிஷ்டை, அடியளிக்கும் காட்சியும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். எம்பெருமான் தேர்வடம் பிடித்திட வாரீர்.

*பறாளாய் முருகன் அடிமை*
Dr.சிவராஜா (வாகை)

*நாளை (17.05.2011) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு திருவடிநிலையில் தீர்த்தமும் (20.05.2011) வெள்ளிக்கிழமை மகா சங்காபிஷேகமும் நடைபெறும்.*

**சேவற்கொடியோனே முருகா சரணம்!**
**சேவடி காப்பவனே முருகா சரணம்!!**

## தேர்த் திருவிழாச் சிறப்புற பிரார்த்திப்போரும் அனுசரணையாளர்களும்



தென்னாடுடைய சிவனே போற்றி!
எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!
வெற்றி வேல் முருகனுக்கு அரோஹரா!
எங்களிடம் சகல பொருள்களும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
**ஸ்ரீ அம்பாள் குறோசறிஸ்**
பண்டத்தரிப்பு

**பாக்கியரத்தினம்**
**ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்**
163, 165, பிரதான வீதி, சங்கானை.
கிளை : **தரன் றேடர்ஸ்**
130, 132 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2664

உங்களை அழகுபடுத்தும் நகைகளுக்கு நாடவேண்டிய இடம்
**S.T.K.**
**மகாலட்சுமி ஜூவலர்ஸ்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சகல வணிகப் பொருள்களையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
**கணேஸ் ஸ்ரோர்ஸ்**
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

புத்தம் புதிய ஆடைகளின் தெரிவுகளுக்கு...
**அபிராமி**
**புடைவையகம்**
பிரதான வீதி, சங்கானை.

பட்டுப்புடைவைகள், சாறி வகைகள் என்பவற்றைப் பெற்றிட...
**மாதுமை**
**பட்டுச்சோலை**
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

பலசரக்குப்பொருள்களை நியாய விலையில் பெற்றிட..
**கந்தசாமி அன் சன்ஸ்**
**பல்பொருள் வணிக நிலையம்**
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

புத்தம் புதிய புடைவை வகைகளுக்கும் அழகு சாதனப் பொருள்களுக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்
**முத்துமாரி**
**புடைவை பான்சி பலஸ்**
பண்டத்தரிப்பு

சகல வகையான புடைவை வகைகளையும் பெற்றுக்கொள்ள
**விநாயகர்**
**பட்டுச்சோலை**
பிரதான வீதி, சங்கானை.

நவநாகரிக பட்டுப்புடைவைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
**புதிய அபிராமி**
**புடைவை மாளிகை**
பிரதான வீதி, சங்கானை.

சகல குளிர்பான வகைகளுக்கும் ஐஸ்கிறீம் வகைகளுக்கும் நாடவேண்டிய இடம்
**விதுஷா**
**கிறீம் ஹவுஸ்**
பிரதான வீதி, சங்கானை.

சகல வகையான துணிவகைகளையும் மலிவாகப் பெற்றுக்கொள்ள
**துர்க்கா**
**துணிப்பூங்கா**
பிரதான வீதி, சங்கானை.

அச்சுப்பதிப்புக்களை குறைந்த விலையில் சிறப்பாக பெற்றுக்கொள்ள
**பாரதி பதிப்பகம்**
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

பட்டுப் புடைவைகளை மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ள
**வளர்பிறை**
**பட்டுச்சோலை**
பிரதான வீதி, சங்கானை.


கண்ணைக் கவரும் கவர்ச்சிகரமான புடைவைகள் பெறவேண்டுமா... நாடுங்கள்
**அம்பிகை**
**பட்டுச்சோலை**
பிரதான வீதி, சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரணி வடக்கு கும்பிட்டான் புலம்

# கற்பக விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா

## சிறப்பு மலர் - 16.05.2011



## மஹோற்சவ பிரதம குருவின் ஆசி

நீர்வளமும் நிலவளமும் செறிந்து விளங்கும் வரணியூரில் கவினுறு சோலையும் கழனிகள் பலவும் சூழ் கும்பிட்டான் புலம் எனும் பதியில் வரலாற்றுப் பெருமையுடன் அடியார்கள் வேண்டும் வரம் அனைத்தையும் நல்கி வீற்றிருக்கும் ஆனைமாமுக கற்பகப்பிள்ளைக்கு இன்று தேர்த் திருவிழா.

இறைவனின் ஐந்தொழில்களைக் குறித்து நிகழ்த்தப்படும் மஹோற்சவத்திலே இரத விழாவானது அழித்தலைக் குறிக்கும். அதாவது எம்மனத்திலே இருக்கின்ற காம குரோத மோக மத மாத்சர்யங்களை இறையருள் சக்தியால் தேரேறிவந்து இறைவன் அழிக்கின்றான். அதனால் தேரிலே பவனிவரும் இறைவனைக் கண்டாலே போதும் எமது பாவங்கள் நீங்கி எம்மனம் தூய்மை பெற்றுவிடுகிறது. அதனால்தான் எமது வழிபாட்டிலே தேர் உற்சவம் சிறப்பிடம் பெறுகிறது.

தேரானது இறைவனுக்குச் சமமானது. 'ரதேப்யோ ஏதபதிப்யச்சவோ நம' என ஸ்ரீருத்ரம் சிவபிரானையே தேராகவும் தேர்ப்படைத் தலைவனாகவும் வணங்குகின்றது. இறைவனுக்கு ஒப்பாக தேரும் 'ஓங்கி ஆழ்ந்து அகன்று நுண்ணியதாக' அமைகிறது. அது மட்டுமன்றி இந்தப் பிரபசமே தேராகவும் அதன் மத்தியில் இருதய கமலாசனத்திலே இறைவனை இருத்தி வணங்குவதாக ஆகமங்கள் கூறி நிற்கின்றன. இத்துணை சிறப்பு வாய்ந்த தேரிலே இன்று கும்பிட்டான்புலம் கற்பகப் பிள்ளையார் பவனிவரும் அரும்காட்சி இடம்பெறுகிறது. நினைத்த மாத்திரத்திலேயே அருளை அள்ளி வழங்குபவர் விநாயகர். அவர் இந்தத் தலத்திலே வேண்டுபவர் வேண்டும் அனைத்தும் வழங்கும் கற்பகப் பிள்ளையாராக வீற்றிருக்கிறார். அவரருளால் இந்தக் கிராமம் செழிப்படைகிறது. மக்கள் சிறப்படைகின்றார்கள். அடியார்கள் அனைவரும் புத்தெழுச்சியுடன் மஹோற்சவத்தைச் சிறப்பாக நடத்த அவர் என்றும் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார். தேரேறிவரும் விநாயகர் திருவருளால் எல்லா மக்களும் சகல செல்வயோகமும் பெற்றுத் தகைமை சிவஞானக் கல்வியுடன் பெருவாழ்வு வாழ விநாயகனை வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

சிவஸ்ரீ.பி. கிருபாஹரக் குருக்கள்,
கோப்பாய்.

## ஆலயக் குருக்களின் ஆசியுரை

தென்மராட்சிப் பதியில் வரணியம்பதியில் கோயில்கொண்டு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் கும்பிட்டான்புலம் கற்பக விநாயகர் வேள முகத்து விநாயகர் வெவ்வினைவேர் அறுக்க வல்லான் வல்லபை கணபதி, கற்பகக் கணபதி என்றெல்லாம் போற்றப்படும் விநாயகர் வரணி கிராமத்திலே கும்பிட்டான்புலம் என்னும் நாமம் கொண்ட புண்ணிய தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி அடியவர்களுக்கெல்லாம் அருள்பாலித்துக்கொண்டிருக்கும் கற்பக விநாயகர் இன்று [16.05.2011] திங்கட்கிழமை இரதோற்ஷவம் காணும் விநாயகர் இன்றைய இந்த நன்நாளில் எல்லாம் வல்ல வல்லபை கணபதியை இந்த இலங்கைத் தீவில் உள்ள எல்லா மக்களும் சுபிட்சமாக எந்தக் குறையும் இன்றி வாழ எனது நல்லாசி கூறி விநாயகர் பாதாரவிந்தங்களில் பணிகின்றேன்.

'சர்வே ஜனகா சுகினோ பவந்து'

ஆலயகுரு கு.வித்தியானந்தசர்மா.

## அருள் மழை பொழியும் நாள்

வடவரணி கும்பிட்டான்புலம் கற்பக விநாயகர் கோயிலின் வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று நடைபெறுகின்றது. இன்றைய தினம் விநாயகப் பெருமான் சித்திரத் தேர் மீது அழகுற பவனி வந்து அடியார்களுக்கு அருள்மழை பொழியும் நாள்.

கடந்த வருடம் உற்சவ விழாக்களின்றி இருந்து, கற்பக விநாயகர் ஆலயத்தின் உற்சவம் இம்முறை சிறப்பாக நடைபெறுவதனையிட்டு மக்களின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. "கும்பிட்டான் புலம் கற்பக விநாயகர்" என்னும் சிறப்புப் பெயர் கொண்ட விக்கினங்கள் தீர்க்கும் விநாயகப் பெருமானின் அருளைப் பெற்று வரணி வாழ் மக்கள் அனைவரும் கல்வி கேள்வியில் சிறப்படைந்தும் சிறந்த மானிடப் பண்பைப் பேணவும் சீரிய வாழ்வு வாழவும் அருள்புரிய வேண்டுமென எம்பெருமானை வேண்டி மேலும் இந்த ஆலயத்தின் ஆன்மிக நெறிகள் இடையூறின்றித் தொடரவும் உற்சவ விழாக்கள் சிறப்பாக நடைபெறவும் எமது நல்லாசிகள்.

"மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெலாம்"

எம்.ரி.எஸ்.இராமச்சந்திரன்,
ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரபல சட்ட ஆலோசகரும்
மாண்புமிகு ஜனாதிபதியின் புலம்பெயர் மக்களுக்கான இணைப்பாளரும், இந்து கலாசார அலுவல்களின் இணைப்புச் செயலாளரும், Eu Lanka Forum இன் சர்வதேச தலைவரும் வரணியைப் பிறப்பிடமாகவும் கொண்டவரும்.

## தேரேறி வரும் விநாயகனே வரம் தருவாய்

தென்மராட்சிப் பதியில் வரணி வடக்கு கிராமத்தில் கும்பிட்டான்புலம் கற்பகப்பிள்ளையார் ஆலயத்தில் இன்று தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது. எங்களுடைய வாழ்விலே வருகின்ற தீவினைகளை அழித்து எம்மை நல் வழிப்படுத்த இரதோற்சவமானது விளங்குகின்றது. ஊர் மக்கள் ஒன்று கூடி வடம் பற்றித்தேர் இழுப்பதன் மூலம் மக்கள் மத்தியில் ஒற்றுமையையும் அந்நியோன்மைத் தன்மையையும் பெருகி வளர்க்கின்றன. எனது பேரனார் கிருஷ்ணர் ஆசிரியர் அவர்கள் செய்து வந்த தேர்த்திருவிழாவை நானும் தொடர்ந்து செய்யும் பாக்கியம் பெற்றுள்ளேன். இன்றைய சூழலில் நாடு விட்டு அயல் நாடு சென்று வாழும் எம்மவர்கள் மனதில் பிள்ளையார் நீங்கா இடம் பெற்றுள்ளார். ஆலயத்திலே மிகுதி திருப்பணி வேலைகளையும் வெளியூர் உள்ளூர் அன்பர்களின் பங்களிப்புடன் விரைவாக நிறைவேற்றி ஆலயம் புதுப்பொலிவுடன் விளங்க கும்பிட்டான் புலம் கற்பகப் பிள்ளையார் அருள்பாலிக்க வேண்டுமென்று பிரார்த்திப்பதோடு இன்றைய தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றேன்.

சுப்பிரமணியம் சிறீஸ்கந்தராசா,
தேர்த்திருவிழா உபயகாரர், கனடா.

[4902]

## சேவை நலன் பாராட்டுகின்றோம்

பொன்னுத்துரை நாகரத்தினம்



விஞ்ஞான பாட ஆசிரியராக 19 வருடங்களும் வலிகாமம் வலய விஞ்ஞான பாட சேவைக்கால ஆலோசகராக 20 வருடங்களும் சேவையாற்றி இன்று (2011.05.16) திங்கட்கிழமை சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்ற பொன்னுத்துரை நாகரத்தினம் அவர்களின் சேவையைப் பாராட்டி சகல நலமும் பெற்று நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றோம்.

வலிகாமம் வலய விஞ்ஞான ஆசிரியர் சங்கம்

## சமாந்தரப் பயணம்; ரூ.1,000 அபராதம்

கொடிகாமம் நகர் பகுதியில் சமாந்தரமாகச் சைக்கிளில் பயணித்த நால்வர் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக்கொண்டனர்.

கொடிகாமம்பொலிஸார் இந்த நால்வருக்கும் எதிராக சாவகச்சேரி நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். கடந்த வியாழனன்று இந்தவழக்குகளை விசாரித்த நீதிவான் ஒவ்வொருவருக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார்.

(ஏ-207)

சாவகச்சேரி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## பதவி வெற்றிடம்

| | |
|---|---|
| 1. பதவி | - விற்பனை உதவியாளர் (05) |
| குறியீட்டு இல. | -308/15 (66/2006 இன்படி) |
| சம்பள அளவுத் திட்டம் | - 9450 - 75×10-80×10-11,000.00 |
| வயதெல்லை | - 18 -45 வரை |
| பால் | - ஆண் |

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:-**

1. கூட்டுறவுப் பணியாளர் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் விற்பனை உதவியாளர் பதவியொன்றில் ஐந்து (05) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

2. கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சா.த) எண்கணிதம் அல்லது வர்த்தக எண் கணிதம் அல்லது கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

**விண்ணப்ப முடிவு திகதி -30.05.2011**

**குறிப்பு:** கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் சங்கங்களின் ஊடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் சங்க எல்லைப் பரப்புக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், வதி விடச்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு, தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விற்பனை உதவியாளர் (308/15) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு 'தலைவர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் டச்சு வீதி, சாவகச்சேரி' என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

நெறியாளர் குழுவின் ஆணைப்படி.
கி.பூபாலசிங்கம்,
தலைவர்

ப.தெ.வ.அ.கூ.சங்கம், டச்சு வீதி, சாவகச்சேரி
(சி-022)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பன் கொட்டோடைப் பகுதிகள் புத்துயிர் பெறுமா?

கடந்த 2000ஆம் ஆண்டு முதல் அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருந்த அம்பன் கிழக்கு மற்றும் கொட்டோடைப் பகுதிகளில் 2011ஆம் ஆண்டு நடுப் பகுதியில் மீள்குடியமர அப்பகுதி மக்கள் அனுமதிக்கப்பட்டார்கள். 2000ஆம் ஆண்டுக்கு முன்னர் 10,000க்கு மேற்பட்ட பனை மரங்கள் பலநூறு தென்னை மரங்கள், நாவல் காடுகளுடனும் மருத்துவமனை, விவசாயத் திணைக்களம், பொது நூலகம், பனை வெல்லத் தொழிற்சாலைகளுடன் சீரும் சிறப்புமாக இருந்தது.

### இயற்கை வளங்கள் அழிப்பு

தற்போது அந்தப் பகுதியில் 10,000இக்கு மேற்பட்ட பனை மரங்கள் இயற்கை நாவல் காடுகள், கஜூ மரங்கள் மற்றும் தென்னை மரங்கள் என்பன அழிக்கப்பட்டுள்ளன.

அப்பகுதியில் மக்கள் குடியிருப்புக்கள் மற்றும் அண்டிய பகுதிகளில் மணல் அகழப்படுகின்றது கடலுக்கும் அம்பன் கிழக்கு கிராமத்துக்கும் மட்டுமன்றி தொண்டமானாறு முதல்- நாயாறு வரையான உவர் நீர் ஏரியுடன் மாரி காலங்கள் மற்றும் கடும் காற்று வீசுகின்ற வேளைகளில் பெருங்கடலிலிருந்து வெளியேறுகின்ற கடல் நீர் (புற வெள்ளம்) கலக்க வாய்ப்பு ஏற்படுகிறது. சுனாமி அனர்த்தங்கள் ஏற்படுகின்றபோது அக் கிராமங்களும் அழியும் அபாயமுள்ளது. இதனால் மணல் அகழ்வுக்கு எதிராக அப்பகுதி மக்கள் மறியல் போராட்டங்களை மேற்கொண்டனர்.

### அமைச்சரின் ஏமாற்று நாடகம்

அப்போது அம்பன் கிழக்கு மக்களுடன் கலந்துரையாடி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா அப்பகுதி மக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதாக 19.12.2011ஆம் திகதி தெரிவித்தார்.

ஆனால் ஒரேயொரு கோரிக்கை மட்டும் நடைமுறைப்படுத்தியிருந்தார். அதாவது ஏலவே அம்மன் கிழக்கு சிவனொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் மணல் பறித்து ஏற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டபோது அதனை தடுத்தவர்களது உழவு இயந்திரங்கள் மட்டும் மீள மணல் அகழ்வில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

ஒரு மாதத்துக்குள் அம்பன் கொட்டோடை வீதியினூடாக மணல் அகழ்வதை நிறுத்துதல், நாளாந்தம் 25 வரையான உழவு இயந்திரங்களை மட்டும் மணல் அகழ்வுக்கு பயன்படுத்துதல், யுத்த காலத்தின்போது அழிக்கப்பட்ட பனைமரங்கள் காடுகளுக்குப் பதிலாக 10,000 பனம் விதை நடுதல், 5,000 வரையான கஜூ மரம் (மரமுந்திரிகை) நடுதல் 2,000 வரையான தென்னைமரம் நாட்டுதல், மீள்குடியேறிய கிராம மக்களது வீடுகளில் நாட்டுவதற்கு கொய்யா, பலா, தென்னை போன்றனவும், மற்றும் மணல் அகழ்வில் ஏற்படும் வருமானத்தின் மூலத்திலிருந்து மீள் குடியேறிய மணல் அகழ்வுப் பிரதேச மக்களுக்கு வாழ்வாதார அபிவிருத்தி என்பன மேற்கொள்ளல்

இருந்தும் 05.04.2011ஆம் திகதி குறித்த கொட்டோடை வீதி மணல் அகழ்விருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய வாக்குறுதிகள் புஸ்வானமானதை ஏமாற்றுவித்தை எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்ற னர். இதுவரை அம்பன் கிழக்கு கொட்டோடைப் பகுதி எந்த அபி விருத்தியையும் காணவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

தற்போது மணல் அகழப்படுகின்ற பகுதிகளும் அம்பன் கிழக்கு கிராமத்தை அண்டிய பகுதியே. அதனால் தமது எதிர்கால சந்ததிகள் குடியிருக்க முடியாத நிலை இங்கு ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இதனால் இயற்கை அனர்த்த அபாயங்களை சந்திக்க வேண்டியிருக்கும் எனவும் மக்கள் அச்சப்படுகின்றனர்.

### முன்னைய சேவைகள் மீண்டும் இடம்பெறவேண்டும்

2000ஆம் ஆண்டுக்கு முன்னர் 24 மணிநேரமும் இயங்கிய அம்பன் மத்திய மருந்தகமும், மகப்பேற்று மனையும் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றன. விவசாயத் திணைக்களம், பொது நூலகம் என்பனவும் புனரமைப்பு வேலைகள் முடிவடைந்தவுடன் முன்னர் போன்று இயங்க வேண்டும்.

தற்போது நடுக் குடத்தனை எனும் பகுதியில் வெளி நோயாளர் பகுதியாக பி.ப.2.00-4.30 மணிவரை இயங்கும். அம்பன் மருத்துவமனையை முழு நாளாக இயங்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இவ்வாறு சம்பந்தப்பட்டவர்களை மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். கடற்றொழிலுக்காக சுமார் 3.5 கிலோ மீற்றர் தூரம் அம்பன் கிழக்கிலிருந்து கடற்றொழில் உபகரணங்களுடன் தலைச்சுமையுடன் நடந்து செல்லும் மீனவர்கள் மற்றும் கொட்டோடைக் கிராம மக்கள் கொட்டோடை தான்தோன்றிப் பிள்ளையார் ஆலயத்தைத் தரிசிக்கச் செல்வோர் நலன் கருதி அதிவிரைவாக அம்பன்- கொட்டோடை வீதியைப் புனரமைப்புச் செய்து தரவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். வீதி சீரின்மையால் பல கடற்றொழிலாளர்கள் தங்களது கரைவலை மற்றும் கடற்றொழில்களை மேற்கொள்ளவில்லையெனவும் தெரிவிக்கின்றனர்.

### உதவிகள் எதுவும் இல்லை

வடமராட்சிக் கிழக்கின் ஏனைய பகுதிகளுக்கு தற்காலிக நிரந்தர வீட்டுத்திட்ட வசதிகள் மற்றும் கடற்றொழில் வாழ்வாதார உதவிகள் நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

அம்பன் கிழக்கு கொட்டோடை மக்கள், மணல் அகழ்வின்போது தம்மால் சூழலுக்கு இயற்கை அனர்த்தத்துக்குட்படாத வகையிலும் ஓரளவு பாதுகாப்பு எனவும் தீர்மானிக்கப்பட்டு புவிச்சரிதவியல் மற்றும் கனியவளப் பகுதியுடன் இணைந்து தெரிவு செய்யப் பட்ட மணல் மேடுகளை மட்டும் மணல் அகழ பயன்படுத்த வேண்டுமெனவும் கூறுகின்றனர்.

அழிக்கப்பட்ட கொட்டோடைக் கிராமத்தை மக்கள் நலனில் அக் கறையுள்ளோர் பார்வையிட்டு மீண்டுமொருமுறை கொட்டோடைக் கிராமம், அம்பன் கிழக்குக் கிராமங்களில் இயற்கை அழிவு ஏற்படாமல் பாதுகாக்க வேண்டும் எனும் அவாவில் அப்பகுதி மக்கள் உள்ளனர்.

த.காண்டீபன்

## இலக்கியப் போட்டிகள்

நல்லூர்,மே16

நல்லூர்ப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை தனது பிரதேச பிரிவுக்குட்பட்ட பாடசாலைகள், மன்றங்கள், பொது நபர்களுக்கான நடன, நாடக, இசை, இலக்கியப் போட்டிகளை நடத்தி 140 விண்ணப்பதாரிகளைப் போட்டிக்குத் தகுதியானவர்களாகத் தெரிவுசெய்துள்ளது.

இவர்களுக்கான இசை, நடன, பேச்சுப் போட்டி எதிர்வரும் 28, 29ஆம் திகதிகளில் நாடகப் போட்டிகள் ஆனி மாதம் முதலாவது வார சனி, ஞாயிறு நாள்களிலும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார்.


விண்ணப்பங்கள் கோரப்பட்டு இவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(எ)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை நடராசா

(Former Executive Civil Engineer of Samuel Sons & Co.Ltd.)



உடுப்பிட்டி, சந்தணத்தறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்தையை வசிப்பிடமாகவும் தற்பொழுது உடுப்பிட்டியில் வசித்தவருமாகிய சின்னத்துரை நடராஜா கடந்த (13.05.2011) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசதுரை- தங்கமுத்து தம்பதியரின் மருமகனும் தவமணி (ஓய்வுபெற்ற ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும் நந்ததாஸ் (சுவிஸ்), நந்தினி (கனடா), காலஞ்சென்ற நகுலதாஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோகரி (சுவிஸ்), குகனேஸ்வரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்றவர்களான தங்கராஜா, தியாகராஜா மற்றும் தர்மராஜா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நவமணி, அன்னரத்தினம், பரமேஸ்வரி, இராசமணி, தவமலர், புஸ்பவதி, இன்பவதி, ராதாகிருஷ்ணன், தேவராசா, காலஞ்சென்றவர்களான சின்னராசா ஆகியோரின் மைத்துனரும் நிலாந்தன், நந்துஜா, சயந்தி, அஜன், நிரோஜா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2011) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கரம்பாவளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"ராஜகிரி",
சந்தணத்தறை, உடுப்பிட்டி.
தொடர்பு:-
மகன்-சுவிஸ்:-0041313525812,
0041788293670
மகள்-கனடா:- 0019054955277

தகவல்;
[illegible]

(4253)

ஜாதிக-சம்பத
ஜாதிக சம்பத Jathika Sampatha
சீட்டிழுப்பு இலக்கம் - 123
திகதி - 14.05.2011
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து P | அதிர்ஷ்ட இலக்கம் 02 | வெற்றி இலக்கம் 5 8 6 0 3

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எண்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| [illegible] பரிசு | P 02 5 8 6 0 3 | ரூ. 17,086,428.00 | - |
| 1 பரிசு | 02 5 8 6 0 3 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 5 8 6 0 3 | ரூ. 100,000.00 | 04 |
| 3 பரிசு | 8 6 0 3 | ரூ. 10,000.00 | 31 |
| 4 பரிசு | 6 0 3 | ரூ. 1,000.00 | 298 |
| 5 பரிசு | 0 3 | ரூ. 50.00 | 2975 |
| 6 பரிசு | 3 | ரூ. 20.00 | 28436 |
| இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு | | | |
| 7 பரிசு | 5 8 6 0 | ரூ. 1,000.00 | 26 |
| 8 பரிசு | 5 8 6 | ரூ. 100.00 | 296 |
| 9 பரிசு | 5 8 | ரூ. 50.00 | 2963 |
| 10 பரிசு | P | ரூ. 20.00 | 11714 |
| 11 பரிசு | P 02 | ரூ. 100.00 | 1407 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,304,200.00

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ.17,498,253.00

## மரண அறிவித்தல்

### துரைராசா ஸ்ராலின் (சுரேஸ்)



கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட துரைராசா ஸ்ராலின் (சுரேஸ்) கடந்த (14.05.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கறுப்பையா துரைராசா- யோகராணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மரியதாஸ் மற்றும் டெய்சியின் அன்பு மருமகனும் இமாக்குலேற்றாவின் அன்புக் கணவரும் ஷியாம், பிரஷாந் (மாணவன், ஜோன். பொஸ்கோ வித்தியாலயம் தரம்- 4), மேரிஷிரோமி (மாணவி, ஜோன்.பொஸ்கோ வித்தியாலயம் தரம்-2) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரஞ்சன், ராஜன், சிவா, றீகன் (யாழ்.மாநகர பிரதி மேயர்), நாதன், செல்லா (யாழ். நூலக உத்தியோகத்தர்), ஸ்ரெலா டிலோ, காமராஜ் (மாநகர சபை உத்தியோகத்தர்), காலஞ்சென்றவர்களான இந்திரன், ரவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் வசந்தி, பட்டு, ஜான்சிமாலா, அமலன், கஜன், செல்வி, சாந்தி, ஜொபித்தா, றெஜிங்ரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கம் இன்று (16.05.2011) திங்கட்கிழமை கோயில் வீதியிலுள்ள அவரின் இல்லத்திலிருந்து பி.ப. 2 மணியளவில் புனித மரியன்னை பேராலயத்துக்கு திருப்பலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்குக் கொண்டு செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவினர்.

77A, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்

(40-27-)(4255)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபராதம் விதிப்பு

சரசாலை பகுதியில் அனு மதிப் பத்திரமின்றி ஆட்டுக் கடாவை இறைச்சிக்காக வெட்டிய மூவரையும் சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீதிவான் மூவருக்கும் தலா 3ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார். (207)



## விற்பனைக்கு

**இறைச்சிக் கோழிகள் மற்றும் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு.**

**தொடர்புக்கு:**

J.A.N. QUINTUS
No: 92/2,
WEWAGEDARA
KURUNEGALA
T.P: No. 0728581091



### வீடும் காணியும் விற்பனைக்கு

கோண்டாவில் பலாலி வீதியை அண்மித்து காளிகோயில் ஒழுங்கையில் சுற்றுமதிலுடன் கூடிய 4 அறைகளைக் கொண்ட 3½ பரப்புக் காணியில் வீடு வளவு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0778941423,0779907052
(3948)

### வீடு வாடகைக்கு

நீர்வேலி தெற்கில் பூதர் மடத்தின் ஊடாகச் செல்லும் ஒழுங்கையில் விசாலமான வீடு வாடகைக்கு உண்டு.
18.05 புதன்கிழமை பார்வையிடலாம்.

தொடர்பு: 0777115165, 0214920877
(சி/578351)

### உத்தியோகபூர்வ முடிவுகள்

609 — 14/05/2011

11 — 34 48 56 66

| | | | |
|---|---|---|---|
| [illegible] | [illegible] | ரூ. 14,346,176.80 | — |
| [illegible] | [illegible] | ரூ. 1,000,000.00 | 01 |
| [illegible] | [illegible] | ரூ. 50,000.00 | 08 |
| [illegible] | [illegible] | ரூ. 2,000.00 | 250 |
| [illegible] | [illegible] | ரூ. 1,000.00 | 500 |
| [illegible] | [illegible] | ரூ. 100.00 | 12,174 |
| [illegible] | [illegible] | ரூ. 40.00 | 7,032 |
| [illegible] | [illegible] | ரூ. 20.00 | 176,978 |
| [illegible] | [illegible] | ரூ. 20.00 | 28,350 |

ரூ. 8,005,240.00

ரூ 14,651,220.80



## மரண அறிவித்தல்



### திருமதி அம்பலவாணர் தெய்வநாயகம் (தெய்வம்)

கொடிகாமம் - கொயிலாமனையைப் பிறப்பிடமாகவும் இல. 480/166, றொக்சி தோட்டம் வெள்ளவத்தையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அம்பலவாணர் தெய்வநாயகம் (தெய்வம்) நேற்றுமுன்தினம் (14.05.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இராமலிங்கம் - அம்பலவாணர் (ஓய்வு பெற்ற கிராம சேவையாளரும், அகில இலங்கை சமாதான நீதிவானும்) அன்பு மனைவியும் சிவதாசன் (கொழும்பு), சிவகுமாரி (நோர்வே), சிவசாந்தி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயும் ராசன் (நோர்வே), பவானி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும் காவியா, துஷானி, டிலக்சன், கிருஷாந்த் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக்கிரியைக்காக இல.241, பீரிஸ் மலர்ச்சாலை, வைத்தியசாலை வீதி, களுபோவில தெஹிவளையில் வைக்கப்பட்டு, தகனக்கிரியைக்காக 21.05.2011 சனிக்கிழமை அன்று பி.ப. 3 மணிக்கு கல்கிசை பொதுமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சிவா (மகன்)

தொ.பே.: 0777183653,0718671179

(சி-578353)

## அருள்மிகு நவாலியூர் களையோடை கண்ணகை அம்மன் ஆலய விசாகப் பொங்கல் திருவிழா - 2011

அம்மன் அடியார்களே!

எதிர்வரும் கரவருஷ வைகாசி மாதம் 3 ஆம் நாள் (17.05.2011) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அம்மனுக்கு அபிஷேகம் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு பூசை நடைபெற்று அன்னதானமும் வழங்கப்படும்.

மாலை நிகழ்ச்சியாக 3 மணிக்கு
ஈழத்தின் புகழ் பூத்த தவில் நாதஸ்வர வித்துவான்களின் கானமழையும் அதனைத் தொடர்ந்து இரவு 7 மணிக்கு அழகிய பூந்தண்டிகையில் அம்பாள் வீதி உலா வருவார்.

**நாதஸ்வரம்**
R.சிவகுமார், N.கோவர்த்தனன்,
K.நாகதீபன், N.ராஜ்குமார்,
K.கார்த்தீபன்,

**தவில்:**
உலகப்புகழ்பெற்ற இணுவையூர் தவில் மேதை
N.R.சின்னராசாவின் புதல்வன்,
N.R.S.சுதாகர், N.நந்தகுமார்,

ஒளி, ஒலி அமைப்பு சாள்ஸ்

திரு. நீதிகாந்தன், திரு.சீலன்,
விழா உபயகாரர்கள்.

(சி-027)

## நல்லூர் பிரதேச சபை

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2011

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தை பெற்றுக்கொள்ளலாம்.

1) கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி 16.05.2011 தொடக்கம் 30.05.2011 பி.ப. 4 மணிவரை
2) கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 31.05.2011 முற்பகல் 10 மணிவரை
3) கேள்வி திறக்கப்படும் திகதி: 31.05.2011 மு.ப. 10.30 மணிக்கு
(திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4) கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
5) இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
6) கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட்(ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
7) கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை 'செயலாளர், நல்லூர் பிரதேச சபை, கருவப்புலம் வீதி, கொக்குவில் என்ற விலாசத்துக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை, 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
8) மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் (VAT, NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக் குறைந்த (ICTAD தரம்) |
|---|---|---|---|---|
| 01 | மணியர்பதி ஒழுங்கை கல்லிட்டுத்தாரிடல் | 2,500.00 | 500.00 | M10/C10 |
| 02 | கருவப்புலம் வீதி கிளை ஒழுங்கைகள் கல்லிட்டுத்தாரிடல் | 10,250.00 | 500.00 | M08/C09 |
| 03 | சம்பியன் வீதி கிளை ஒழுங்கை கல்லிட்டுத்தாரிடல் | 4,500.00 | 500.00 | M10/C10 |
| 04 | இராமகிருஸ்ணா பாடசாலை பின் ஒழுங்கை கல்லிட்டுத்தாரிடல் | 3,000.00 | 500.00 | M10/C10 |
| 05 | சிவகாமி அம்மன் வீதி ஒழுங்கை கல்லிட்டுத்தாரிடல் | 4,500.00 | 500.00 | M10/C10 |
| 06 | வலவத்தை ஒழுங்கை கல்லிட்டுத்தாரிடல் | 900.00 | 500.00 | M10/C10 |
| 07 | குருசு மதவடி குறுக்கு ஒழுங்கை கல்லிட்டுத்தாரிடல் | 3,900.00 | 500.00 | M10/C10 |
| 08 | சித்துப்பாத்தி இந்துமயான எல்லைச்சுவர் அத்திபாரம் அமைத்தல் | 6,400.00 | 500.00 | M09/C10 |
| 09 | கொட்டைக்காடு இந்துமயான எல்லைச்சுவர் அதிபாரம் அமைத்தல் | 5,600.00 | 500.00 | M09/C10 |
| 10 | காரைக்கால் இந்துமயான எல்லைச்சுவர் அதிபாரம் அமைத்தல் | 10,750.00 | 500.00 | M08/C09 |
| 11 | காரைக்கால் திண்மக் கழிவு முகாமைத்துவ அலகின் களஞ்சிய அறை அமைத்தல் | 5,000.00 | 500.00 | M10/C10 |
| 12 | காந்திஜி வீதி பெட்டி மதகு, வாய்க்கால் அமைத்தல் | 10,000.00 | 500.00 | M09/C10 |
| 13 | கிணறு தோண்டுதல் - அரியாலை | 1,300.00 | 500.00 | M10/C10 |
| 14 | சபைவிடுதி ஒழுங்கை கல்லிட்டுத் தாரிடல் | 2,150.00 | 500.00 | M10/C10 |

நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.

(சி-575993)

மே.சாந்தசீலன்
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துமீறிப் பறந்தால் சுட்டுத்தள்ளுவோம்; அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் எச்சரிக்கை!

இஸ்லாமாபாத், மே 16

பாகிஸ்தான் வான் எல்லை மீது அத்துமீறி பறந்து தாக்குதல் நடத்தினாலோ, டுரோன் ரக ஆளில்லாத விமானங்கள் மூலம் குண்டுவீசி தாக்குதல் நடத்தினாலோ தகுந்த பதில் நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று அமெரிக்காவையும், நேட்டோ படைகளையும் பாகிஸ்தான் நாடாளுமன்றம் எச்சரிக்கிறது.

11 மணி நேர நீண்ட விவாதத்துக்குப் பின்னர் பாகிஸ் தான் நாடாளுமன்றம் சனிக்கிழமை நிறைவேற்றிய ஏகமனதான தீர்மானத்தில் இந்த எச்சரிக்கை விடப்பட்டிருக்கிறது.

''பாகிஸ்தான் எல்லை மீது ஒருதலைப்பட்சமாக டுரோன் ரக விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டால் நேட்டோ படைகள் பாகிஸ்தான் எல்லையில் தங்கி இளைப்பாறவும், எரிபொருள் நிரப்பவும் தரப்படும் வசதிகள் நிறுத்தப்படும்'' என்று தீர்மானம் எச்சரிக்கிறது.

அபோதாபாதில் அமெரிக்கா நடத்திய தாக்குதலையும், ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டிய எல்லைப்புற மாகாணத்தில் பாகிஸ்தானியப் பழங்குடிப் பகுதிகள் மீது டுரோன் ரக விமானங்கள் மூலம் நடத்தும் தாக்குதல்களையும இனியும் சகித்துக் கொள்ள முடியாது.

இதுதொடர்ந்தால் நேட்டோ படைகளுக்கு அளித்துவரும் இடைத் தங்கல் வசதிகளைத் திரும்பப் பெற நேரிடும் என்று தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கிறது.

அமெரிக்கக் கடற்படை கொமாண்டோ படைத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்தவுள்ள குழுவை பிரதமரும் தாமும் சேர்ந்து தேர்வு செய்ய விரும்புகின்றனர் என எதிர்க் கட்சித் தலைவர் செத்ரி நிசார் அலிகான் பின்னர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

டுரோன் ரக விமானங்கள் மூலம் நடத்தப்படும் தாக்குதலை நிறுத்த 2 வழிகள் உள்ளன. அப்படி தாக்குதல் நடத்தும் டுரோன்கள் மீது பாகிஸ் தான் விமானப்படை திருப்பித் தாக்குவது அல்லது நேட்டோ படைகளுக்கு அளித்துவரும் இடை தங்கல் வசதிகளை நிறுத்திவிடுவது என்று செய்தித் துறை அமைச்சர் பிர்தெஸ் ஆஷிக் அவான் சுட்டிக்காட்டினார்.

பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவோர் மீது எல்லை தாண்டி தாக்குவதில் தவறு இல்லை என்ற சர்வதேச நிலைப்பாட்டை ஒட்டியே தாங்கள் தாக்குதல் நடத்தினர் என்றும் அதற்குத் தங்களுக்கு முழு உரிமை உண்டு என்றும் அமெரிக்கா ஏற்கெனவே அறிவித்திருக்கிறது.

இந்த எச்சரிக்கைக்குப் பின்னர் டுரோன் தாக்குதல்களை அமெரிக்கா நிறுத்தாது என்று பாகிஸ்தானுக்கும் தெரியும். நாட்டு மக்களைச் சமாதானப் படுத்துவதற்காக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று சர்வதேச நோக்கர் கள் கருதுகின்றனர்.


## விமான நிலையத்தில் பயணி கைது

புலிக்குட்டிகளையும், சிறுத்தைக்குட்டிகளையும் சூட் கேஸ்களில் கடத்த முற்பட்ட பயணி ஒருவர் தாய்லாந்து விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டார்.

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கிலுள்ள சர்வதேச விமான நிலையத்திலிருந்து துபாய் செல்ல விமானம் தயாராக இருந்தது.

அதில் செல்லவிருந்த பயணிகளை விமானநிலைய அதிகாரிகள் சோதனையிட்ட னர். அப்போது முதல் வகுப்பில் செல்ல முன்பதிவு செய்திருந்த பயணி ஒருவரின் சூட்கேஸ்களை சோதனையிட்டபோது அதில் புலிக்குட்டிகளும், சிறுத்தைக் குட்டிகளும் இருந்தன.

இதைப்பார்த்து விமான நிலைய அதிகாரிகள் அதிர்ச்சியடைந்தனர். அந்தப் பயணிதான் புலிக்குட்டிகளை தாய்லாந்தில் இருந்து துபாய்க்கு கடத்திச் செல்லவிருந்தார் எனத் தெரிவித்தார்.



ஹெய்ட்டியின் புதிய ஜனாதிபதி மிச்செல் மார்டெலி தலைநகரான போர்ட் ஒவ் பிரின்ஸில் நடந்த விழாவில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் தமது ஆதரவாளர்களைப் பார்த்து கை அசைக்கிறார்.

## பாகிஸ்தானுக்கான பொருளாதார உதவிகளை நிறுத்துமாறு அமெரிக்காவுக்குக் கோரிக்கை

இஸ்லாமாபாத், மே 16

பாகிஸ்தான் ஒரு தீவிரவாத ஆதரவு நாடு. எனவே பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அளித்துவரும் இராணுவம் மற்றும் பொருளாதார உதவிகளை நிறுத்திக்கொள்ள வேண்டும் என உலக நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதுவே தீவிரவாதத்துக்கு துணை போகும் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அளிக்கும் பதிலடியாக இருக்கும் என்றும் சர்வதேச அரசியல் வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச தீவிரவாதி பின்லேடன் அதிரடிப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். பின்லேடன் பாகிஸ்தானில் தங்கியிருந்தமை அந்த நாட்டு உளவுப்படைக்குத் தெரியுமா என்ற சந்தேகம் உலக மக்களிடையே உள்ளது.

இந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்வதற்குப் பதில் பாகிஸ்தான் தலைவர்கள் அமெரிக்க எதிர்ப்பு உணர்வுகளைப் பரப்பி வருகின்றனர்.

பாகிஸ்தானில் இன்னும் பல தீவிரவாதிகள் பதுங்கியுள்ளனர். அவர்களைப் பிடிப்பதில் கவனம் செலுத்தாத பாகிஸ் தான் அரசு அமெரிக்காவின் தாக்குதலை மட்டும் கண்டித்தது.

பின்லேடனை சுட்டுக் கொன்றதால் பாகிஸ்தான் அரசும் அந்த நாட்டிலுள்ள அணு உலைகளும் தீவிரவாத அச் சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளன. இதை அமெரிக்கா உதவியின்றி பாகிஸ் தான் முறியடிப்பது கஷ்டம் என்று பல்வேறு நாட்டின் அரசியல் நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## சர்வதேச நிதியக்குழுத் தலைவர் நியூயோர்க் விமான நிலையத்தில் கைது

நியூயோர்க், மே 16

சர்வதேச நிதியக் குழுத் தலைவர் நியூயோர்க்கில் கைதுசெய்யப்பட்டார். ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தபோது பணிப் பெண்ணை பாலியல் தொந்தரவு புரிந்தார் என்பது குற்றச்சாட்டு.

இந்தக் கைது காரணமாக உயர்ந்த பதவியில் இருப்போருக்கு தலைக்குனிவு ஏற்பட்டுள்ளது.

பிரான்ஸிலுள்ள சோசலிஸ கட்சியின் தலைவராக இருப்பவர் டொமினிக் ஸ்ட்ராஸ்கான் (வயது 62). இவர் இந்தக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும் கூட. வருங்காலத்தில் (2012இல்) பிரான்ஸின் ஜனாதி பதி யாகக் கூட வர வாய்ப்புள்ளது.

இவர் நியூயோர்க்கில் ஒரு பிரபல மேன்ஹாட்டன் ரைம்ஸ் ஸ்கொயர் என்ற ஸ்டார் ஹோட்டலில் தங்கியிருந்தார். இந்நேரத்தில் இவரது அறைக்கு வந்த பணிப்பெண்ணிடம் வலுக்கட்டாயமாக இழுத்து பாலியல் தொந்தரவு புரிந்துள்ளார்.

இது தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டதும், இவர் தப்பித்துச் செல்ல ஜோன் கென்னடி சர்வதேச விமான நிலையத்திலிருந்து பரிஸ் புறப்படத் தயாரானார்.

இதனையடுத்து சுற்றிவளைத்த பொலிஸார் இவரை வெளியே இழுத்து கைதுசெய்தனர். இவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

## குண்டு வெடிப்பு

பாகிஸ்தானின் பஞ்சாப் நகரில் பஸ்ஸொன்றில் ஏற்பட்ட குண்டுவெடிப்பில் 6 பேர் பலியாகி உள்ளனர். மேலும் 20 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பஸ் சீட்டிற்கு அடியில் குண்டு வைக்கப்பட்டிருந்தது என பொலிஸ் பிரதி அத்தியட்சகர் மியான்சுல்தான் தெரிவித்துள்ளார்.

# 'நேட்டோ' படைகளால் என்னைக் கொல்லமுடியாது

### கடாபி சூளுரை

ரிபோலி, மே 16

''நேட்டோ படைகளால் என்னைக் கொல்ல முடியாது. அவற்றால் தாக்க முடியாத இடத்தில் நான் இருக்கிறேன்'' என்று லிபியாவின் ஜனாதிபதி மும்மர் கடாபி நாட்டு மக்களுக்கு ஓடியோ நாடா மூலம் அறிவித்திருக்கிறார்.

நேட்டோ படைகள் நடத்திய குண்டுவீச்சில் அவருடைய மாளிகை 'பாப்-அல்-அஜீசியா' கடுமையாகச் சேதமடைந்தது.

வியாழக்கிழமை நள்ளிரவு நடந்த இந்தத் தாக்குதலில் பத்திரிகையாளர்கள், அப்பாவி பொதுமக்கள் உட்பட 3 பேர் உயிரிழந்தனர். அந்த 3 பேர் லிபியாவுக்காகத் தங்களுடைய இன்னுயிரை ஈந்துள்ளனர் என்று கடாபி தன்னுடைய ஓடியோ நாடா உரையில் புகழ் அஞ்சலி செலுத்தியிருக்கிறார்.

அதே இடத்தின் மீது வெள்ளிக்கிழமை நள்ளிரவும் சனிக்கிழமை அதிகாலையும் மீண்டும் தாக்குதல்கள் தொடர்ந்தன.

லிபிய ஜனாதிபதி கடாபி வான் தாக்குதலில் கடுமையாகக் காயமடைந்திருக்கிறார். நடமாட முடியாத அவரை மருத்துவ சிகிச்சைக்காக லிபியாவை விட்டு வேறு எங்கோ எடுத்துச் சென்றுவிட்டனர் என்று நாட்டில் வதந்திகள் பரவி வருகின்றன. இன்னும் ஒரு சிலர் அவர் உயிரோடு இருக்கிறாரா என்று சந்தேகம் கிளப்ப ஆரம்பித்து விட்டனர்.

இதற்கெல்லாம் முற்றுப் புள்ளி வைக்கவும் இராணுவம் தன்னைவிட்டு விலகாமல் இருக்கவும் இந்த ஓடியோ நாடாவை வெளியிட்டிருக்கிறார் கடாபி.

இதன் மூலம் அவர் உயிரோடு இருப்பது தெளிவானாலும், வெளியே வர முடியாத அளவுக்கு பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறார். கொல்லப்படுவோம் என்ற அச்சத்தில் எங்கோ பதுங்கியிருக்கிறார் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

**அதிகாரி விளக்கம்**

லிபிய ஜனாதிபதி மும்மர் கடாபி நன்றாக இருக்கிறார். தலைநகர் திரிபோலியிலேயே தங்கியிருக்கிறார் என்று லிபிய அரசின் பத்திரிகைத் தொடர்பாளர் மூசா இப்ராஹிம் அறிவித்தார்.

**இத்தாலி அமைச்சரால் வந்த குழப்பம்**

கடாபி இப்போது தலைநகர் திரிபோலியில் இல்லை, அவருக்குக் கடுமையான காயம் ஏற்பட்டிருக்கிறது என்று சந்தேகிக்கிறேன் என இத்தாலி வெளியுறவுத்துறை அமைச்சர் பிராங்கோ பிராட்டினி தாம் அளித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டிருந்தார்.

அவர் அத்துடன் நிறுத்தாமல், உயிருக்கு அஞ்சி கடாபி ஓடுகிறார் என்ற தகவல் அந் நாட்டு ரோமன் கத்தோலிக்கப் பாதிரியார் கியோவனி மார்ட்டினேலி மூலம்தான் தனக்குத் தெரிந்தது என்றும் வேறு குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், பாதிரியார் கியோவனி மார்ட்டினேலி அதை மறுத்து விட்டார். கடாபி காயமடைந்தமை குறித்தோ, மறைந்து வாழ்வது குறித்தோ தான் ஏதும் கூற வில்லை என்று அவர் மறுத்துள்ளார்.

**புரட்சிக்காரருக்கு வரவேற்பு**

அதே நேரத்தில் கடாபியின் மிகப்பெரிய எதிர்ப்பாளரும் லிபிய விடுதலை இயக்க அமைப்பின் இரண்டாவது இடத்தில் இருப்பவர் என்று கருதப்படுபவருமான முகம்மத் ஜிப்ரில் அமெரிக்க ஜனாதிபதி வெள்ளை மாளிகைக்குச் சென்றார். அவரை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் வரவேற்று அழைத்துச் சென்றார்.

அவர் தன்னுடைய அமைப்பை 'தேசிய இடைநிலை அரசு' என்று அழைத்துக் கொள்கிறார். இதையே லிபிய நாட்டுக்கான உண்மையான பிரதிநிதித்துவ அமைப்பு என்று அங்கீகரிக்க மறுக்கிறது அமெரிக்கா என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டு-மேற்கு சின்னக்கதிர்காமம் வேலனின்
# சித்திரத் தேர்த் திருவிழாச் சிறப்பு மலர் - [16.05.2011]


வட்டுக்கோட்டை மேற்கு வன்னியன் தோட்டத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் சின்னக் கதிர்காம செவ்வேட் பெருமான் புதிதாக அமைக்கப்பெற்ற சித்திரத்தேரில் வள்ளி தேவயானை சமேதராக எழுந்தருளி அடியார்களின் வினைதீர்க்க இன்று திரு வீதியுலா வருகின்றார்.

பெரியார் முருகுப்பிள்ளை வெற்றிவேலரின் பேரனும் அறங்காவலர்களுள் மூத்த வருமான குகத்திரு நல்வேல்நாதன் முருகதாசன் எம்பெருமான் மீது கொண்ட பேரன் பினால் இப்புதிய சித்திரத்தேரினை அடியார்களின் அனுசரணையுடன் அமைப்பித் துள்ளார்.

இந்த ஆலயத்தில் ஊர்மக்கள் கூடித் தேரிழுக்கும் காட்சி ஓர் அற்புதக் காட்சியாகும். ''ஊர் கூடித் தேரிழுத்தல்'' என்ற வாசகம் ஊர்மக்களின் ஒற்றுமையையும் ஒற்றுமை யின் அவசியத்தையும் எடுத்துக்காட்டும். இந்தச் சித்திரத் தேரினை ஸ்தபதி சிற்பரத கலாகேசரி விஸ்வப்பிரமஸ்ரீ தம்பிப்பிள்ளை சிறிதரன் மிக்க எழிலுடன் வடிவமைத் துள்ளார்.

இந்த ஆலயத்தில் கதிர்காம முறைப்படியே நீண்ட காலமாக பூசைகள் நடந்தேறி வருகின்றன. ஆயினும் முன்னைய அறங்காவலரான அமரர் வெற்றிவேல் நல் வேல் நாதன் கோயிற் சிறப்பு நிகழ்வுகளில் சில மாற்றங்களைச் செய்யவேண்டியவரானார். இந்த மாற்றங்களில் ஒன்றே இத்தேரோட்டத் திருநிகழ்வாகும்.

இந்த நன்னாளில் எல்லாம் வல்ல வேலவப் பெருமானின் கிருபா கடாட்சத்தை நாமெல்லோரும் பெற்றுய்வோமாக.



(4903) (38-20-25)

**கதிர்காம வேலவனே தேரேறி வா! குன்றாத பேரருளை அள்ளித் தா!!**

சின்னக் கதிர்காமச் செவ்வேட் பெருமானே
உன்னை அனுதினமு மோதுகின்றோம்- இன்னலுற்ற
எங்கள் துயரகற்றி ஏற்றமுறச் செய்வாயே
மங்கை யுமைபாலா மகிழ்ந்து

வள்ளிதேவ யானையொடு வாஞ்சையுடன் தேரேறி
அள்ளியருள் பாலிக்கு மாறுமுகா!- தெள்ளு தமிழ்
சங்கப் புலவோய்! தரணியை யாள்பவனே
எங்களை நீ ஆட்கொள் இருந்து.

சி.வெற்றிவேலு.

# யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை அதிபர்
# சிற்றம்பலம் மாணிக்கவாசகர் சேவை நயப்பு மலர்-16.05.2011

**உலவிக்குள விநாயகர் ஆலய பிரதமகுருவின் உள்ளத்திலிருந்து**



சிற்றம்பலம் மாணிக்கவாசகர் அவர்கள் அச்சு வேலி சரஸ்வதி வித்தியாசாலையின் அதிபராக மிளிர்ந்த உத்த மோத்தவராவார். அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் ஸ்தாபகர் சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள் வித்தியா விருத்திக்காகவும், சமய விருத்திக்காகவும் அருந் தொண்டாற்றியவராவர். அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இந்தப் பாடசாலையின் அதிபராக மிளிர்ந்த உத்த மோத்தமர் மேன்மைக்குரிய சிற்றம்பலம் மாணிக்கவாசகர் ஆவார். சமயப்பற்று மிக்க மாணிக்கவாசகர் அவர்கள் இப் பாட சாலை ஆசிரியர்களிடையே பண்போடு விளங்கிய உத்தமரா வார். மாணவர்களிடையே வித்தியாவிருத்தியையும், சமய விருத்தியையும் புகட்டி ஞானசீலராவார் மாணிக்கவாசகர் அவர்களின் சேவை மேலும் நீடிக்க எல்லாம்வல்ல விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களை வணங்கி நல்லாசிதனை நல்கின்றேன்.

சிவஸ்ரீ கு.வை.விருத்தகிரீசக் குருக்கள்,
குருக்கள் வளவு, அச்சுவேலி.

**சி.மாணிக்கவாசகர் அவர்களின் அதிபர் சேவை நிறைவு காணும் நாளில் என் இதயத்தில் இருந்து ஒரு சில வரிகள்!**



சிரிப்பான முகத்தொடு பொலிவாக
சிந்திக்க பலவாதம் செய்து தினம்
சினப்பில்லா பண்பாளனாய் கோப்பாய் கோட்ட
சிறப்பான அதிபராய் அணியில் நின்றீர்!
அகவைகள் ஐம்பத்தொடு ஒன்பது கண்டு
அதிபர் சேவையில் அரும்பணி பல செய்து
அகமகிழும் வேளைதன்னில் செல்வம் பலபெற்று
அகிலத்தில் நின் நாமம் நிலைக்க வாழ்த்துகிறேன் வாழி!!!

திருமதி அ.வேதநாயகம்,
கல்விப்பணிப்பாளர், யாழ்.வலயம்.

**பிரதிக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துப் பா!**



யாழ்.என்ற சோலையிலே மலர்ந்து
நாள் முழுதும் கல்விக்காகத் தம்மை
கோலமுற மாற்றும் அதிபர் குழாத்தில்
காலமுறும் பல பணிகள் செய்தீர்!
ஆண்டுகள் அறுபது நெருங்கமுன் ஓய்வா!
ஆற்றிய சேவைகள் ஆயிரம் பூமியிலே
பணிகள் பல தொடர பாரில் புகழ் ஓங்க
பாசமுடன் வாழ வாழ்த்துகிறேன் வாழ்க!

திரு.யோ.ரவீந்திரன்
பிரதிக் கல்விப்பணிபாளர், யாழ்.கல்வி வலயம்.



உயர்திரு.

**சிற்றம்பலம் மாணிக்கவாசகர் B.A**

**S.L.P.S.- 2-I**

**சேவை விவரம்:-**

| | | |
|---|---|---|
| ★ வ/பெரிய தம்பனை ம.வி. | 01.03.1972- 31.08.1974 | ஆசிரியர் |
| ★ வ/சின்னடம்பன் ம.வி. | 01.09.1974- 31.12.1975 | ஆசிரியர் |
| ★ ம/பாண்டியன் குளம் ம.வி. | 01.01.1976- 31.12.1977 | ஆசிரியர் |
| ★ யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை | 01.01.1978- 31.12.1979 | பயிலுநர் |
| ★ தி/அல்தாரிக் ம.வி. | 01.01.1980- 31.12.1981 | ஆசிரியர் |
| ★ யா/ இடைக்காடு ம.வி. | 01.01.1982- 31.05.1992 | ஆசிரியர், பிரதிஅதிபர் |
| ★ யா/புத்தூர் M.M.T.S. | 01.06.1992- 31.12.1995 | அதிபர் |
| ★ மு/முத்துஐயன் கட்டு ம.வி. | 01.01.1996- 20.05.1998 | அதிபர் |
| ★ மு/விசுவமடு ம.வி | 21.05.1998- 31.10.2002 | அதிபர் |
| ★ யா/ பத்தமேனி இரத்தினேஸ்வரி | 01.11.2002- 01.07.2007 | அதிபர் |
| ★ யா/ அச்சுவேலி சரஸ்வதி | 02.07.2007- 14.05.2011 | வரை அதிபர். |

**எளிமையான அதிபர்**



கல்வி உலகில் உன்னதமான மகிமையான அதிபர் தொழிலில் தனக்கென ஒரு பணியை வகுத் துக்கொண்டு ஏழைகளின் உயர்வையே தனது இலட்சியமாகக் கொண்டு அருஞ்சேவையாற்றி அழியா இடம் பிடித்த சி.மாணிக்கவாசகர், சிறந்த முகா மையாளர், நட்புணர்வு, விட்டுக்கொடுப்பு, நேர் மையான சிந்தனையோடு சமூகத்தைப் பாடசாலையோடு இணைத்து பாடசாலையின் வளர்ச்சியிலும் வெற்றிகண்டவர். அவரது சேவையைப் பாராட்டி வாழ்த்துரை வழங்க சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன். அவ ரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகிறேன்.

திரு.வே.பாலசுப்பிரமணியம்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், கோப்பாய்

**சேவை.....**



சேவைகளில் சிறந்த சேவை கல்விச்சேவை இந்தச் சேவையில் உயர்ந்து விளங்கும் சி.மாணிக் கவாசகர் தனக்கென வாழாப் பெருந்தகை இலங்கை யின் பல பாகங்களிலும் சேவையாற்றிய சிறப்பாளர். அன்பு ஆற்றலில் சிறந்து மாணவர் இடத்தில் நன் மதிப்பு பெற்றவர். வாழ்க அவர்தம் சேவை , வாழ்க பல் லாண்டு என வாழ்த்தும் அன்பன்.

திரு.க.நா.கணபதிப்பிள்ளை (சின்னமணி),
சமாதான நீதிவான், பாடசாலை அபிவிருத்திச் சங்க ஆலோசகர்.

**உயர்ந்த நண்பன்....**



சேவையின் சிகரமாய் அன்பின் உறைவிடமாய் முகா மைத்துவத்தின் இலக்கணமாய் விளங்கி இன் னுரையால் நல்வழிகாட்டும் நட்பாளன் அதிபர் சி.மாணிக்கவாசகர் அவர்கள் ஏழைகளின் கல்வி வளர்ச்சிக்கு உழைத்த உத்தம சேவையா ளன். அதிபர் சேவையில் இருந்த காலத்தில் வகுப்பறை யில் மாணவர்களுக்கு கணிதபாடத்தைக் கற்பிப்பதில் ஆசிரியராக மாறியவர்.வாழ்க அவர் தம் சேவை. அவரது ஓய்வுக் காலம் சீரும் சிறப்புமாக அமைய வாழ்த்தும் அன்பன்.

திரு.இ.யோகநாதன்,
உப அதிபர், யா/அச்சுவேலி, சரஸ்வதி வித்தியாசாலை.

**உள்ளத்திலிருந்து....**

கடமையே கண்ணாக கருத்துடனே பேசிடுவீர்
எமை எல்லாம் துன்பத்தில் ஆழ்த்தி விட்டு
[illegible]
நீர் இங்கு செய்த சேவைகள் எத்தனை எத்தனை எம் மனதில் பதிந்து விட்டன.
மறக்கவில்லை மறக்கமாட்டோம் மாணிக்கவாசகரே!
உமை எந்நாளும் நினைவில்
வைத்திருக்கும் எங்கள் பாடசாலைச் சமூகம் கண்ணும் கருத்துமாக எமது
பாடசாலையை வளர்த்து விட்டீர்! விடியற் காலையில் பேப்பருடனும்
பிள்ளைகளுக்கு மதியஉணவுப் பொருள்களுடன் வந்திறங்கிடுவீர்.
எங்களுக்கு நிறைய புதினங்கள் சொல்லிடுவீர்.
இப்படியான எம் அதிபரை எப்படி நாம் பெறப்போகிறோம் என்று ஏங்குகின்றோம்
உமை மறவோம் நாம் உமை மறவோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/அச்சுவேலி, சரஸ்வதி வித்தியாசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் படுகொலைக்குத் துணைபோன காங்கிரஸை ஆதரித்த தி.மு.கவைச் சாய்த்து விட்டனர் தமிழக மக்கள்

## வைகோ அதிரடி

ஈழத்தமிழர் படுகொலையில் துணை நின்ற காங்கிரஸ் கட்சியை ஆதரித்த தி.மு.க. அரசை ஆழிப் பேரலையாய் திரண்டெழுந்த மக்கள் சக்தி வீழ்த்தியுள்ளதாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

தமிழக தேர்தல் முடிவுகள் குறித்து மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற வகையில் கடந்த வெள்ளிக் கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே வைகோ மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

குடும்ப ஆதிக்கம், அராஜகம், ஊழல் மற்றும் தாங்க முடியாத விலைவாசி என்பவற்றுக்கு அப்பால் ஈழத் தமிழர்கள் படுகொலையில் துணை நின்ற காங்கிரஸை ஆதரித்ததே தி.மு.க. செய்த மாபெரும் தவறாகும்.

அதன் காரணமாகத் தான் மக்கள் ஆழிப்பேரலையாகத் திரண்டு அரசுக்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

சினிமா, தொழில்துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளையும் தங்கள் குடும்ப ஆதிக்கத்துக்குள் கொண்டுவர முயன்ற குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளாக தமிழகத்தில் நிலவிய பணநாயக ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டு ஜனநாயக ஆட்சி மலர்ந்துள்ளது என்றும் வைகோ தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (வ)

# பழைய தலைமைச் செயலகத்தில் புதிய சட்டப்பேரவை அமைகிறது

சென்னை, மே.16

தமிழக சட்டபேரவைத் தேர்தலில் அ.தி.மு.க. அமோக வெற்றி பெற்றுள்ளது. இந்த நிலையில், செம்மொழி நூலகம் அமைந்துள்ள பழைய தலைமை செயலகத்திலேயே புதிய சட்டப் பேரவை அமைக் கப்படவுள்ளது.

இதற்காக சட்டப்பேரவை இருந்த இடத்தில் அமைக்கப் பட்டுள்ள செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் மற்றும் பாவேந்தர் செம்மொழி தமிழாய்வு நூலகம் வேறு இடத்திற்கு மாற்றப்படுகிறது.

மேலும் பழைய தலைமைச் செயலகத்தில் வைக்கப்பட்டிருந்த செம்மொழி தமிழாய்வு மையப் பெயர்பலகை மாற்றப் பட்டு தமிழ்நாடு அரசு தலைமைச்செயலக பெயர் பலகை வைக்கப்பட்டுள்ளது. (வ)

# பதவியேற்பு விழாவுக்கு சகல கட்சிகளுக்கும் ஜெ.அழைப்பு

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா இன்று முதல்வராகப் பதவியேற்கவுள்ள நிலையில், பதவியேற்பு விழாவுக்கு அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

வெற்றி பெற்ற அ.தி.மு.க. சட்ட மன்ற உறுப்பினர்களின் கூட்டம் அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் ஜெயலலிதா சட்ட மன்றத் தலைவராக ஒருமன தாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பின் ஆளுநரைச் சந்தித்த ஜெயலலிதா, ஆட்சியமைக்க உரிமை கோரினார்.

ஆளுநரைச் சந்தித்துவிட்டு வெளியே வந்த ஜெயலலிதாவிடம் செய்தியாளர்கள், பதவியேற்பு விழா குறித்து கேள்வி எழுப்பினர்.

அப்போது அவர், தே.மு.தி.க. உட்பட அனைத்துக் கட்சிகளையும் பதவியேற்பு விழாவுக்கு அழைக்க வுள்ளதாகத் தெரிவித்தார். மேலும், புதிதாக அமையவுள்ள ஆட்சியில், மின்வெட்டு பிரச்சினை உட்பட தனக்கு முன் மிகப்பெரிய சவால்கள் உள்ளதாகத் தெரிவித்தார். விரைவில் புதுடில்லி செல்லவுள்ளதாகவும், மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மத்தியில் விவாதிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். (வ)

# தி.மு.க. தோல்வி; தொண்டர் தீக்குளிப்பு

ஈரோடு, மே.16

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. தோல்வியுற்றதால் வேதனை அடைந்த அந்தக்கட்சித் தொண்டர் ஒருவர் தீக்குளித்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தி.மு.க. தொண்டரான தனபால் என்பவர் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் அருகில் கோவிந்தராஜபுரத்தில் உள்ள அவரது வீட்டில் நேற்று முன் தினம் இரவு தன்மீது பெட்ரோல் ஊற்றி தீவைத்துக் கொண்டார். பின்னர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட அவர் வழியிலேயே உயிரிழந்தார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. படுதோல்வி அடைந்த செய்தியைக் கேள்விப்பட்டதில் இருந்து தனபால் மிகுந்த மனவேதனையில் இருந்து வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

## ராஜ்பவனில் சந்திப்பு...



அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா நேற்று ஆளுநர் பர்னாலாவை ராஜ்பவனில் சந்தித்து தான் சட்டமன்ற முதலமைச்சராக தெரிவுசெய்யப்பட்டமைக்கான கடிதத்தைக் கையளித்தார். அதையடுத்து ஜெயலலி தாவை ஆட்சி அமைக்குமாறு ஆளுநர் பர்னாலா அ்ழைப்பு விடுத்தார்.

# தேர்தல் முடிவு பற்றி குஷ்பு கருத்து; அ.தி.மு.க. சட்டத்தரணிகள் கண்டனம்

சென்னை, மே. 16

சட்டபேரவைத் தேர்தல் தொடர்பாக நடிகை குஷ்பு வெளியிட்ட கருத்துக்கு சென்னை மேல்நீதிமன்ற அ.தி.மு.க. சட்டத்தரணிகள் பிரிவு சார்பில் குஷ்புவுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கண்டன பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

தமிழக சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று அ.தி.மு.க. ஆட்சியைப் பிடித்துள்ளது. தி.மு.க. தோல்வியைத் தழுவியது. இதுதொடர்பாக நடிகை குஷ்பு தி.மு.க.வுக்கு தோல்வி அல்ல. மக்களுக்குத்தான் தோல்வி. எனவே அடுத்த 5 ஆண்டுகளில் மக்கள் மிகவும் கஷ்டப்படப்போகிறார்கள் என்று கருத்துத் தெரிவித்தார்.

இந்தநிலையில் தேர்தல் முடிவு தொடர்பாக குஷ்பு வெளியிட்ட கருத்துக்கு எதிர்ப்புக் கிளம்பி உள்ளது. நடிகை விந்தியா, குஷ்புவுக்கு கடும் கண்டனம் தெரிவித்தார். நடிகர் எஸ்.வி. சேகர் கூறும் போது, குஷ்பு அரசியலுக்கு புதுசு. அவருக்கு அனுபவம் இல்லை என்று கருத்துத் தெரிவித்தார்.

இதேவேளை சென்னை மேல் நீதிமன்ற அ.தி.மு.க. சட்டத்தரணிகள் பிரிவு சார்பிலும், குஷ்புவுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கண்டன பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன. மக்களின் மன உணர்வை புண்படுத்தி பேட்டி கொடுத்த குஷ்புவை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்பன போன்ற வாசகங்கள் பிரசுரங்களில் இடம் பெற்றுள்ளன. இந்த பிரசுரங்கள் மேல்நீதிமன்றம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ளன.

# அரசியல் பிரவேசத்துக்கான திட்டம் சில காலங்களின் பின்னர்தான் - விஜய்

சென்னை, மே. 16

அரசியல் பிரவேசம் சில காலத்துக்கு பின்னர் தான் இடம்பெறும். ஆனால் தற்போது அதற்கான திட்டம் இல்லை. இவ்வாறு தெரிவித்தார் நடிகர் விஜய்.

தேர்தல் முடிவு குறித்து விஜய் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்:

தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெறும் என்று நான் உறுதியாக நம்பினேன். ஆனால் இந்த அளவு மகத்தான வெற்றி கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். ஜெயலலிதா மீண்டும் முதலமைச்சர் ஆவது மகிழ்ச்சி அளிக்கிறது என்று கூறியுள்ளார்.

தொடர்ந்து ஆட்சி மாற்றம் ஏற்பட காரணம் என்ன? என்று செய்தியாளர்கள் கேட்டபோது:

மக்கள் தான் மாற்றத்தை விரும்பினர். நாட்டுக்கு ஒரு மாற்றம் தேவைப்பட்டது. மக்கள் வாக்கு மொத்தமாக அதை நிரூபித்துக் காட்டியுள்ளனர். நான் மட்டுமின்றி மாநில மக்கள் அனைவருமே ஜெயலலிதா மீண்டும் ஆட்சிக்கு வர உறுதுணையாக இருந்தனர். இவ்வாறு அவர் கூறினார். (வ)

# யுத்தத்தில் ஈழத்தமிழரை நயவஞ்சகத்தோடு வீழ்த்திய காங்கிரஸை தேர்தல் யுத்தத்தால் நேர்மையுடன் வீழ்த்தியுள்ளனர் தமிழர்கள்



ஈழத்தில் குருதி சிந்திய யுத் தத்தில் எமது இனத்தை நய வஞ்சகத்தோடு வீழ்த்திய காங்கிரஸை, தமிழர்கள் குருதி சிந்தாத தேர் தல் யுத்தத்தில் நேர்மையுடன் வீழ்த்தியிருக்கிறார்கள். இது தமிழ் இனத்திற்குக் கிட்டிய வெற்றி. காங்கிரஸின் வீழ்ச்சி தமிழினத்தின் விடியலுக்கான அறிகுறி என்று நாம் தமிழர் இயக்க அமைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார். இது குறித்து நாம் தமிழர் கட்சியின் அமைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

தமிழ்நாட்டில் நடந்து முடிந்த 2011 ஆம் ஆண்டுக்கான சட்டப் பேரவைத் தேர்தலில் மக்களுக்கு விரோதமான தி.மு.க. - காங்கிரஸுக் கூட்டணி படுதோல்வியடைந்துள்ளது. பண பலம், அதிகார பலம், இவற்றிற்கு பணியமாட்டோம். வாக்கு என்ற ஆயுதத்தால் அவற்றை வீழ்த்துவோம் என்று மெய்ப்பித்த எம் தமிழ்ச் சொந்தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாறு காணாத வகையில் ஊழல், வன்முறை, குடும்ப ஆதிக்கம், அராஜகம், மணல் கொள்ளை, திரைத்துறையில் ஏகபோகம், நிர்வாகச் சீர்கேடு, இனத்துரோகம் ஆகியவற்றில் மலைக்கத்தகும் மலையாய் எழுந்து நின்றது காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி ஆட்சி. அந்த மலையை உடைத்து தரை மட்டமாக்கியிருக்கிறார்கள் தமிழர்கள்.

மக்களின் எதிர்ப்புக்கு சிறிதளவும் மதிப்பளிக்காமல் தான் பெற்ற மக்களின் அதிகாரத்திற்காகவே ஆட்சி நடத்தினார் கருணாநிதி. மக்கள் எதிர்ப்பையும், அரசியல் கட்சித்தலைவர் களின் எதிர்ப்பையும் அடக்கு முறைச் சட்டங்கள் மூலமும் காவல் துறையின் ஒடுக்கு முறைகள் மூலமும் பொது அரங்கிற்குக் கொண்டு வராமல் செய்தார்.

இதன் பின்னும், ஓயாத தி.மு.க.- காங்கிரஸ் அரசுகள் ஈழத்தில் எமது மக்களை பல்லாயிரக்கணக்கில் சிங்களப் பேரினவாதம் கொன்றொழிக்க பல வகையில் பேருதவி புரிந்தன. இனப்படு கொலைக்கு எதிரான எமது மக்களின் ஒப்பாரியைக் கூட யாருக்கும் கேட்காமல் அச்சுறுத்தித் தடை செய்தன.

ஈழத்தில் எமது ரத்த உறவுகளை இலங்கை அரசு கொன்று குவிக்க பேருதவி புரிந்த சோனியாவின் காங்கிரஸை இந்தத் தேர்தலில் முழுவதுமாக வீழ்த்த வேண்டும் என்னும் நிலைப்பாட்டை நாம் தமிழர் கட்சி எடுத்தது. காங்கிரஸ் கட்சி தான் எமக்கு முதல் எதிரி. இனத்தை அழித்த காங்கிரஸ் கட்சி வேரோடும் வேரடி மண்ணோடும் ஒழிக்கப்படவேண்டும் என முடிவெடுத்து களத்தில் இறங்கினோம்.

தமிழர்கள் வீரமும் விவேகமும் மட்டுமல்ல தன்மானமும் இனமானமும் உள்ளவர்கள் என்பதை தற்பொழுது மற்றொரு முறை நிரூபித்துள்ளனர்.

இனி வரும் காலங்களில் தமிழினத்திற்கு எதிரான எண்ணமோ செயலோ எந்த அரசி யல் கட்சியிடம் இருந்து வெளிப் பட்டாலும் அவர்களுக்கும் இதே கதி தான் ஏற்படும் - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்குழல் ரொக்கட், ஓயாத ஷெல், பீரங்கி வேட்டுக்களால் போரின் இறுதிக் கட்டத்தில் மனித உயிரிழப்புக்கள் ஏராளம்

## உணவு, மருந்துகள் திட்டமிட்டுத் தடுக்கப்பட்டதாலும் நாளாந்தம் மரணங்கள்

எந்தவித புற அவதானிப்புமின்றி சுமார் இரண்டு வருடங்களாக விசாரணை மற்றும் புலனாய்வு அத்துடன் 'புனர்வாழ்வளித்தல்' மேற்கொள்ளப்பட்டு வருவதால், தட்டிக்கேட்க ஆளில்லாத நிலையில் தமிழீழ விடு தலைப் புலியினர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் வன்புணர்வு, சித்திரவதை அல்லது காணாமற்போதல் போன்ற மீறல்களுக்கு ஆளாகக் கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாகவுள்ளன.

**(எ) ஏனைய குற்றச்சாட்டுக்கள்**

168. மேலே எடுத்துக்கொள்ளப்பட்ட நம்பத்தகுந்த குற்றச்சாட்டுக்களுக்குப் புறம்பாக, அவை நம்பகரமானவை என குழு தீர்மானிக்க முடியாத வேறு பல குற்றச்சாட்டுக்களும் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றின் நிலைத் தகவுள்ள பாரதூரமான தன்மை காரணமாக அவை புலனாய்வு செய்யப்பட வேண்டும்.

**1. கொத்துக் குண்டுகள் அல்லது வெள்ளை பொஸ்பரஸ் பிரயோகம் பற்றிய குற்றச்சாட்டு.**

169. புதுக்குடியிருப்பினைச் சுற்றிலும் இரண்டாவது யுத்த சூனிய வலயத்திலும் பொது மக்களுக்கு எதிராக கொத்துக் குண்டுகள் அல்லது வெள்ளை பொஸ்பரஸ் அல்லது ஏனைய இரசாயனப் பொருள்களை இலங்கை அரசு பாவித்தது என்ற குற்றச் சாட்டுக்கள் இருக்கின்றன. இலங்கை அரசு இந்த ஆயுதங்களைப் பாவித்ததை நிராகரித்தது. வெள்ளை பொஸ்பரஸைப் பாவித்ததாக தமிழீழ விடுலைப்புலிகளைக் குற்றம் சாட்டுகிறது.

**2. வெள்ளைக் கொடி பற்றிய சம்பவம்**

170. தமிழீழவிடுதலைப்புலியினரின் அரசியல் துறை தலைமைத்துவம் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களும் இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைந்தபோது அவர்கள் மீது கொலைத் தண்டனை நிறைவேற்றப்பட்டதாக பல்வேறு அறிக்கைகள் குற்றஞ்சாட்டியுள்ளன. யுத்தத்தின் இறுதி நாள்களில், தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறை தலைவர் நடேசன் மற்றும் புலிகளின் சமாதானச் செயலகத்தின் தலைவர் புலித்தேவன் தொடர்ச்சியாக, பேச்சுக்களில் சம்பந்தப்பட்ட பலருடன் சரணடைவது பற்றிக் கதைப்பதற்காகத் தொடர்பு கொண்டிருந்தனர். அவர்களுடன் சுமார் 300 பொதுமக்கள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆரம்பத்தில் நிபந்தனையற்ற சரணடைவுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் தலைமைத்துவம் தயக்கம் காட்டிய போதிலும், தமது இறுதி மறைவிடத்தை இலங்கை இராணுவத்தினர் அண்மித்ததால், நடேசனும் புலித்தேவனும், கேணல் ரமேஷும் கூட நிபந்தனையின்றிச் சரணடைய இணங்கினர். இந்தத் தீர்மானம், ஐக்கிய நாடுகள் அதிகாரிகள் மற்றும் நோர்வே, ஐக்கிய இராஜ்யம் அத்துடன் ஐக்கிய அமெரிக்கக் குடியரசு அரசுகளுடன், ஐ.சி.ஆர்.சி பிரதிநிதிகள் மற்றும் ஏனையோருக்கு அறிவிக்கப்பட்டது. நடுவர்கள் ஊடாக மஹிந்த, கோத்தபாய மற் றும் பஸில் ராஜபக்ஷ, முன்னாள் வெளிவிவகார செயலாளர் பாலித கொஹன அத்துடன் இலங்கை இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கும் அது அறிவிக்கப்பட்டது.

171. அவர்கள் சரணடைவது ஏற்றுக்கொள்ளப்படும் என்று ஜனாதிபதி ராஜபக்ஷவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் உறுதிப்பாடு வழங்கினர். இது நடுவர்கள் மூலம் சம்பந்தப்பட்ட தமிழீழ விடுதலைப்புலித் தலைவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டதோடு, குறிப்பிட்ட ஒரு வழியாக வெள்ளைக்கொடி ஒன்றை ஏந்தியவாறு மெதுவாக இராணுவத்தினரை நோக்கி நடக்குமாறு அவர்கள் பஸில் ராஜபக்ஷவினால் அறிவுறுத்தப்பட்டார்கள், சரணடையும் இடத்தில் மூன்றாம் தரப்பினர் ஒருவர் இருக்க வேண்டும் என்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. 2009 மே 18 ஆம் திகதி காலை சுமார் 6.30 மணியளவில் நடேசனும் புலித்தேவனும் தாம் மறைந்திருந்த இடத்தில் இருந்து தமது குடும்பத்தினர் உள்ளிட்ட பெரியதொரு கூட்டத்துடன் 58 ஆவது படைப்பிரிவு நிலைகொண்டிருந்த பிரதேசத்தை நோக்கி நடக்க முற்பட்டனர். இன்னுமொரு கூட்டத்துடன் கேணல் ரமேஷ் பின்னால் வந்தார். சிறிது நேரத்துக்குப் பின்னர், நடேசனும் புலித்தேவனும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள் என பிபிஸியும் ஏனைய தொலைக்காட்சி நிலையங்களும் அறிவித்தன. இந்தச் சம்பவம் பற்றி பின்னர் அரசு பல்வேறுபட்ட விளக்கங்ளை வழங்கியது. அவர்கள் கொல்லப்பட்ட சூழ்நிலைகள் பற்றிய தகவல் அரிதாக உள்ள நிலையில், தமிழீழ விடுதலை புலிகளின் தலைமைத்துவம் சரணடைய நாடியிருந்தது என குழு நம்புகிறது.

**ஐ.நா. செயலாளரிடம் நிபுணர் குழு வழங்கிய அறிக்கை பகுதி - 15**

**ஏ.நிகழ்வுகள் பற்றி அரசின் கூற்று**

172. யுத்தத்தின் இறுதிக் கட்டங்கள் பற்றிய இலங்கை அரசின் கூற்றுக்கு மிகவும் மாற்றமானதொரு கண்ணோட்டத்தை மேற்படி நம்பகமான குற்றச்சாட்டுகள் வழங்குகின்றன. 'பூஜ்ய பொதுமக்கள் பாதிப்பைக்' கொண்டதொரு 'மனிதாபிமான மீட்பு நடவடிக்கையை' அது மேற்கொண்டதாக அரசு கூறுகிறது. 2010 மே 7 ஆம் திகதி, உரையொன்றின் போது பாதுகாப்புச் செயலாளர், யுத்தத்தில் இராணுவ நடவடிக்கைக் கட்டளைகளுள் பூஜ்ய பாதிப்புக் கோட்பாடு உள்ளடக்கப்பட்டது. உலகில் இதுவே முதற் தடவையாகும் எனக் குறிப்பிட்டார். 2010 ஜூன் 18 ஆம் திகதி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரையொன்றில், 'சாதாரண பொதுமக்களுக்கு எதிராக ஒரு வேட்டேனும் தீர்க்கப்படுவதற்கு நாம் இடமளிக்கவில்லை எனத்தெரிவித்தார். 2010 மே 18 ஆம் திகதியன்று யுத்த முடிவின் முதலாவது ஆண்டு நிறைவன்று, பின்வருமாறு பாதுகாப்புச் செயலாளர் நினைவூட்டினார்.

நாம் 'யுத்த சூனிய வலயங்களை' பிரகடனப்படுத்தினோம். பொதுமக்கள் வாழும் யுத்த வலயங்களை எதிர்கொண்ட போது வான், பீரங்கி மற்றும் மோட்டார் தாக்குதல்களை மேற்கொள்வதிலிருந்தும் நாமாகவே தவிர்த்துக் கொண்டோம். இது பற்றி எமது கள கட்டளைத் தளபதிகள் மிகவும் கவனமாக இருந்ததோடு அவர்கள் தம்மை அநேகமான சந்தர்ப் பங்களில் கட்டுப்படுதிக்கொண்டார்கள். மேலும் யுத்தத்தின் எல்லாக் கட் டங்களிலும் உலக உணவுத்திட்டம், செஞ் சிலுவைச் சங்கம் மற்றும் ஐ.நா. ஊடாக சிக்குண்ட பொதுமக்களுக்கான உணவு மற்றும் மருந்து வகைகள் சென்றடைவதை உறுதிப்படுத்திக் கொண்டோம்.

(60)

173. 2009 மார்ச் 2 ஆம் திகதி, அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித வளங்கள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க பிபிசியின் ஹார்ட்டோக் நிகழ்ச்சியில்: 'கனரக ஆயுதங்களைப் பாவிப்பதற்கான எந்தவொரு நியாயமும் இல்லை. மற்றும் உண்மையிலேயே சுமார் 10 நாள்களுக்கு முன்னர் கனரக ஆயுதங்களைப் பாவிப்பதில்லை என ஆயுதப் படைகள் தெளிவான தீர்மானமொன்றை எடுத்தனர்.

நீங்கள் அறிந்திருப்பீர்கள், தமிழீழ விடுதலைப்புலிகள் சுமார் 48 சதுர கிலோமீற்றர் சிறிய பரப்பொன்றுக் குள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தால், கனரக ஆயுதங்களை நாம் பாவிக்க முடியாது' எனக் குறிப்பிட்டார். ஆயினும், யுத்தம் முடியும் வரை 81 மிமீ வரையிலான மோட்டார்கள் பிரயோகிக்கப்பட்டதாகக் கூறிய ஏனைய அரச அதிகாரிகள், அவை கனரக ஆயுதங்கள் அல்ல என வாதிட்ட னர்.

174. 2009 ஏப்ரல் 06 ஆம் திகதி, 'பணயக் கைதிகளைக் காப்பாற்றும் உலகின் மிகப்பெரிய நடவடிக்கையில்' இலங்கை இராணுவம் ஈடுபட்டிருந்தது என லெப்டினன்ட ஜெனரல் சரத்பொன் சேகா இலங்கையின் ஒப்சேவர் பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

2009 மே 18 ஆம் திகதி, 'இரத்தக் களரி' யொன்று ஏற்படும் என்ற எச்சரிக்கைகள் பிழையென நிரூபிக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் அமைச்சர் சமரசிங்க தெரிவித்தார்.

யுத்த வலயத்தில் இருந்து வரும் இடம் பெயர்ந்தோர் 'நலன்புரி நிலையங்களில்' வரவேற்கப்பட்டார்கள் எனவும் முன் னாள் தமிழீழ விடுதலைப்புலியினர் 'மீட்பு' செயற்பாட்டுக்கு உட்படுத் தப்பட்டு அவர்கள் 'புனர்வாழ்வு' பற்றிக்கவனம் செலுத்தப்படுவதாகவும் அரசு அறிவித்தது.

175. கிடைக்கக் கூடிய சகல தகவல்களையும் கடுமையாக மீளாய்வு செய்து மதிப்பீடு செய்த பின்னர், நிகழ்வுகள் பற் றிய இலங்கை அரசின் கூற்றை குழு ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

**ஐ. முடிவுகள்**

176. எனவே, யுத்தத்தின் இறுதிக் கட்டங்களுடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றிய குழுவின் விளக்கம் இலங்கை அரசு புரிந்துள்ள ஐந்து அடிப்படை பகுதிகளைச் சேர்ந்த மிகப்பெரும் மீறல்களை வெளிப்படுத்துகிறது:

**(அ) பரவலான ஷெல்வீச்சினால் பொதுமக்கள் இறப்பு**

இலங்கை இராணுவம் வன்னியில் அதன் இராணுவ நடவடிக்கையை, அதிக அளவில் பொதுமக்களுக்குச் சேதம் ஏற்படும் விதத்தில், சில சமயங்களில் பல்குழல் ரொக்கட் ஏவும் கருவிகளை மற்றும் பீரங்கிகளைக் கொண்ட பெரும் மற்றும் பரவலான ஷெல்தாக்குதலைப் பிரயோகித்து முன்னெடுத்தது.

பொது மக்கள் ஒன்று திரள்வதற்காக அவர் களை ஊக்குவித்து மற்றும் கனரக ஆயு தங்களை பாவிக்கப்படமாட்டா என அது அறிவித்தபின் மூன்று தொடர்ச்சியான யுத்த சூனிய வலயங்கள் மீது ஷெல் தாக்குதலை அது மேற்கொண்டது. ஆளில்லாத விமானங்களை உள்ளிட்ட இராணுவத்தினர் உளவு அமைப்புக்கள் மற்றும் ஐ.நா. அத்துடன் ஐ.சி. ஆர்.சி போன்ற புற பாத்திரங்களின் அறிவிப்புக்கள் மூலம் ஏற்படக்கூடிய தாக்கம் பற்றி அறிந்திருந்த போதிலும், ஷெல் தாக்குதலை அது மேற்கொண்டது.

பொதுமக்களிடையான அதிக உயிர்ச் சேதமும் காயமும் அரசின் ஷெல் வீச்சு காரணமாகவே யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் நேர்ந்தன. யுத்த வலயத்தில் இருந்து சர்வதேச அமைப்புக்களை ஒதுக்கிவைப்பது மூலம் புற அழுத்தத்தையும் மற்றும் அவதானிப்பினையும் கட்டுப்படுத்த அரசு முனைந்தது.

(61)

(ஆ) ஆஸ்பத்திரிகள் மற்றும் ஏனைய மனிதாபிமான நிலைகள் மீதான ஷெல் தாக்குதல்: போர் முனைகளில் அரசு திட்டமிட்ட விதத்தில் ஆஸ்பத்திரிகளை, சிலவற்றை மீண்டும் மீண்டும், ஷெல்லடித்துத் தாக்கியது. ஆஸ்பத்திரிக்கு வந்திருந்த காயமடைந்த சில பொது மக்கள் ஷெல்வீச்சுக் காரணமாக மீண்டும் காயமடைந்தனர் அல்லது கொல்லப்பட்டனர்.

வன்னியிலிருந்த அனைத்து ஆஸ்பத்திரிகளும் ஷெல் தாக்குதலுக்கு உள்ளாகியதோடு அவற்றில் இருந்து அகல வேண்டியிருந்தது. அவற்றின் அமைவிடயங்களை அரசு நன்கறிந் திருந்த நிலையிலும் இவ்வாறு நேர்ந் தது.

(இ) மனிதாபிமான உதவியை மறுத்தல்: உணவு மற்றும் அடிப்படை மருந்து வகைகள், குறிப்பாக காயங்களுக்கான மருந்து வகைகள் போன்ற மனிதாபிமான உதவியை யுத்த வலயத்தில் இருந்தவர்களுக்கு அரசு திட்டமிட்டவாறு கிடைக்கச் செய்வதைத் தடுத்தது. இதற்காக, யுத்த வலயத்தில் எஞ்சியிருந்த பொதுமக்களின் எண்ணிக்கையை வேண்டுமென்றே குறைத்து மதிப்பீடு செய்தது.

குறிப்பாக சத்திர சிகிச்சைக்கான பொருள்களை வழங்காமை பொதுமக்களின் கஷ்டங்களை அதிகரித்ததோடு, மரணிப்பவர்களின் எண்ணிக்கையையும் அது அதிகரித்தது.

**(ஈ) பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் யுத்தத்தில் உயிர் தப்பியவர்களின் மனித உரிமைகள் மீறல்**

அதன் செயற்பாடுகளை 'மனிதாபிமான மீட்பு நடவடிக்கை எனக்குறிப்பிட்ட போதிலும், பாதிக்கப்பட்டோரும் யுத்தத்தில் உயிர் பிழைத்தவர்களும் யுத்த வலயத்தை விட்டகன்றபின், அரசு அவர்களை மேலும் கஷ்டங்களுக்குள்ளாக்கியது.

பெரிய நெரிசல் மோசமான நிலைமைகளைத் தோற்றுவித்ததோடு, அது தடுத்துவைக்கப்பட்டவர்களின் அடிப்படை சமூக மற்றும் பொருளாதார உரிமைகளில் பிளவினை ஏற்படுத்தி தேவையின்றி உயிர்கள் பலியாவதற்கு வழிகோலியது.

சகல இடம்பெயர்ந்தவர்கள் புறத் தொடர்பற்ற முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டதோடு, மனிதாபிமான அமைப்புக்களுடன் தனியாகக் கதைப்பதற்கு அவர்கள் அனுமதிக்கப்பட வில்லை. முகாம்களில் மற்றும் தடுப்புக் காவலில் பெண்கள் மேலும் இம்சைக்குட்படுத்தப்பட்டார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளைப் பிரித்தெடுப்பது எந்தவித வெளிப்படையோ புறக் கண்காணிப்போ இன்றி நடைபெற்றது. சந்தேகிக்கப்பட்ட சில தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டதோடு ஏனையோர் மாயமானார்கள்.

நிர்வாணமான பெண் உறுப்பினர் புகைப்படங்கள் மற்றும் படச்சுருள்கள் அவர்கள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதை அல்லது பாலியல் ரீதியில் தாக்கப்பட்டதைக் குறிப்பதாகவுள்ளன.

விசாரணையின் போதான சித்திரவதை தொடர்ந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் சந்தேக நபர்கள் வெவ்வேறு முகாம்களுக்குக்கொண்டு செல்லப்பட்டு அங்கு அவர்கள், ஐ.சி.ஆர்.சி இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு மற்றும் ஏனைய முகவர்களின் கண்காணிப்பின்றி, வருடக்கணக்காகத் தடுத்து வைக்கப்பட்டார்கள்.

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விறுவிறுப்பான ஆட்டத்தில் ஞானமுருகன் வென்று இறுதிக்குள்

யாழ்ப்பாணம், மே 16

பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மாவட்ட மட்டத்தில் இடம்பெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதி யாட்டத்தில் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்று இறுதியாட் டத்துக்குத் தகுதிபெற்றது.

கடந்தவியாழக்கிழமை பாசை யூர் சென்.அன்ரனிஸ் விளை யாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதி ஆட் டத்தில் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக




அணி மோதியது.போட்டி ஆரம் பித்த முதல் விறுவிறுப்பான ஆட்டத்தை இரு அணியினரும் வெளிப்படுத்தினர்.

இரு அணியினரும் தத்தமது அணியினருக்காக கோல்கள் பெறவேண்டும் என்ற நோக்கோடு எதிர் அணியினருடைய கோல் பரப்பினுள் நுழைந்தனர். இதன் போது இரு அணியினருடைய பின்கள வீரர்களினதும் கோல் காப்பாளருடைய திறமையால் கோல் அடிக்கும் சந்தர்ப்பங்கள் முறியடிக்கப்பட்டன.

முதலாம்பாதி ஆட்டம் இடை வேளைக்காக இடைநிறுத்தப் பட்டபோது, இருஅணியினரும் எதுவித கோல்களையும் பெறாத தனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் இரு அணிகளுக்கும் பலப்பரீட்சை யாக அமைந்தது. இரு அணி யினரும் கோல்பெற வேண்டும் என்ற துடிப்புடன் விளையாடிய வேளையில் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகம் முதலாவது கோலைப் பெற்றது.

றோயல் அணியினர் கோல் பெறக் கிடைத்த பல சந்தர்ப்பங் களைத் தவறவிட்டனர். இதனால் ஆட்டமுடிவில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி எதிர்த்து விளையாடி ஊரெழு றோயல் விளையாட் டுக்கழக அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டு இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. மயிலங்காடு ஞானமுரு கன் விளையாட்டுக்கழக அணி இறுதியாட்டத்தில் உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகத்துடன் மோதவுள்ளது. (ஐ-23)

## விக்ரோரியா மூன்றாமிடம்

யாழ்.மாவட்டப் பாடசாலை அணி களுக்கு இடையே நடைபெற்ற15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப் பந்தாட்டப் போட்டியில் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி மூன்றா மிடத்தைப் பெற்றுக் கொண்டது.

மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற மூன்றா மிடத்துக்கான போட்டியில் சுழி புரம் விக்ரோரியாக் கல்லூரியும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி யும் மோதிக் கொண்டன.இரு அணி களும் ஓர் அணிக்கு மற்றைய அணிசளைத்தவர்கள் இல்லையென் பதை நிரூபிக்கும் வகையில் இறுதி வரை மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதலாம், மூன் றாம் சுற்றுக்களை விக்ரோரியாக் கல்லூரி 25:21, 25:20 என்ற புள்ளி கள் அடிப்படையில் வெற்றி பெற இரண்டாம் சுற்றை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 25:15 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற் றது. ஆட்டநிறைவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி 02:01 சுற் றுக்கள் என்ற அடிப்படையில் சண்டி லிப்பாய் இந்துக் கல்லூரியை வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப் பெற்றது. (ம-86)

# சென்.மைக்கலும் இறுதிக்குள் நுழைந்தது

யாழ்ப்பாணம், மே 16

பாசையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத்தின் 75 ஆவது ஆண்டுநிறைவை முன் னிட்டு மாவட்ட மட்டத்தில் நடத் தப்பட்டுவரும் உதைபந்தாட் டச் சுற்றுப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் உரும் பிராய் சென்.மைக்கல் அணி வெற்றிபெற்று இறுதியாட்டத் துக்குத் தகுதிபெற்றது.

கடந்த புதன்கிழமை பாசை யூர் சென்.அன்ரனிஸ் விளை யாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத் தில் உரும்பிராய் சென்.மைக் கல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணிமோதி யது.

முதல்பாதி ஆட்டம் ஆரம்ப மான முதல் இரு அணியினரும் தத்தமது அணியினர் வெற்றி பெற வேண்டும் என்ற நோக் கோடு களம் இறங்கினர்.

முதல்பாதி ஆட்டத்தில் இரு



அணியினரும் கோல்கள் பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் எதிர் அணிகளின் கோல் பரப்பி னுள் நுழைந்தனர். இரு அணியின ரின் பின்கள வீரர்களால் கோல் பெறாது ஆடும் சந்தர்ப்பம் தடுக் கப்பட்டது.

சென்.மைக்கல் அணி எதிர் அணியுடைய கோல் பரப்புக்குள் பந்தினைக்கொண்டுதனது அணிக் கான முதலாவது கோலைப் பெற் றது. குருநகர்பாடும் மீன் அணி யினரும் தமது அணிக்காகக் கோல்பெறப் பல முயற்சிகள் மேற் கொண்டும் அது வீணாகியது.

ஆட்டம் இடைவேளைக் காக இடைநிறுத்தப்பட்டபோது சென்.மைக்கல் அணியின் 1:0 என்றகோல் கணக்கில் முன்னிலை யிலிருந்தது.

இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்ட முதல்பாதி ஆட் டம் மீண்டும் ஆரம்பமான போது குருநகர் பாடும்மீன் அணி வீரர் கள் மிகுந்த உற்சாகத்தோடு விளையாடினர்.

இரு அணியினரும் தமக்கு கிடைத்த கோல்பெறும் சந்தர்ப் பத்தைத் தவறவிட்டனர்.

ஆட்ட முடிவில் உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழக அணி குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தை 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி கொண்டு இறுதியாட்டத்துக் குத் தகுதி பெற்றது. (ஐ-23)

# தென்மராட்சி மட்ட வலயத்தின் பெரு விளையாட்டு முடிவுகள்

தென்மராட்சி,மே16

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்டப் போட்டிகளின் முடிவு கள் வெளியிடப்பட்டுள்ளன. விவரம் வருமாறு:

உதைபந்தாட்டம்-

**17 வயது- ஆண்கள்-** மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவ ரோதய ம.வி, நாவற்குழி ம.வி, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி.

**19 வயது - ஆண்கள் -** சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, நாவற்குழி ம.வி.

**19 வயது - பெண்கள்-** கச்சாய் அ.த.க. பாடசாலை, சாவ கச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச் சேரி மகளிர் கல்லூரி.

மேசைப்பந்தாட்டம்

**19 வயது - ஆண்கள்-** மீசாலை வீரசிங்கம் ம.வி, சாவ கச்சேரி இந்துக் கல்லூரி.

**19 வயது - பெண்கள்-** சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சாவ கச்சேரி இந்துக் கல்லூரி.

பூப்பந்தாட்டம்

**19 வயது- ஆண்கள்-** சாவ கச்சேரி இந்துக் கல்லூரி, மட்டு வில் சந்திரபுரஸ்கந்தவரோதய ம.வி, கைதடி முத்துக்குமார சுவாமி ம.வி.

**19 வயது- பெண்கள்-** சாவ கச்சேரி மகளிர் கல்லூரி, சாவகச் சேரி இந்துக் கல்லூரி, கச்சாய் அ.த.க.பாடசாலை.

கரம்

**15 வயது - ஆண்கள்-** சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கச்சாய் அ.த.க.பாடசாலை, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

**19 வயது- ஆண்கள்-** சாவகச்சேரி டிறிபேர்க் கல் லூரி, கச்சாய் அ.த.க.பாடசாலை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**15 வயது - பெண்கள்-** சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, கச்சாய் அ.த.க.பாட சாலை.

**19 வயது- பெண்கள்-** சாவகச்சேரி இந்துக் கல் லூரி, கொடிகாமம் திருநாவுக் கரசு ம.வி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

(வளரும்)

# யாழ்.மாவட்டச் சம்பியனாக அமெரிக்க மிஷன் தெரிவானது

வலி.வடக்கு, மே 16

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடை பெற்ற 15 வயதுப் பிரிவு ஆண் களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் வடமராட்சி உடுப் பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் வயா விளான் மத்திய மகாவித்தியால யமும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பத்தில் இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்ட போதிலும் தொடர்ந்து இந்த நிலைமை காணப்படாத நிலையில் இரண்டாம் சுற்றில் அமெரிக்கன் மிஷன் கல்லூரி வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு நேர்சுற்றுக்களை உடுப் பிட்டி அமெரிக்கன் மிஷன் கல் லூரி 25:21:, 25:13 புள்ளிகள் என்ற அடிப்படையில் வயா விளான் மத்திய மகாவித்தியால யத்தை வெற்றிபெற்று மாவட் டச் சம்பியனாகத் தெரிவு செய் யப்பட்டது.

இரண்டு பாடசாலை அணி களும் மாகாணமட்டப் போட்டி களில் விளையாடத் தகுதி பெற் றுள்ளன. (ஐ-86)







தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட வலய மட்ட கரப்பந்தாட்டப் போட்டிகளில் மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தைச் சேர்ந்த 15 வயதுப் பிரிவு ஆண்கள், 17 வயதுப் பிரிவு பெண்கள், 17 வயதுப் பிரிவு பெண்கள் ஆகியவை முதலிடம் பெற்று மாவட்ட மட்டப் போட்டிக்குத் தகைமை பெற்றுள்ளன. போட்டியில் வெற்றிபெற்ற அணிகளுடன் வித்தியாலய அதிபர் செ.சுந்தரலிங்கம், விளையாட்டுப் பொறுப்பாசிரியை திருமதி ஞா.குமாரசாமி மற்றும் வித்தியாலய உப அதிபர், ஆசிரியர்களைப் படங்களில் காணலாம். (207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபை

### பொதுக் கூட்டத்துக்கான அழைப்பு - 2011

இடம்: சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை மண்டபம்
காலம்: 2011.05.29 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி
தலைவர்: திரு.மு.நாகேந்திரராசா அவர்கள்

**பொதுச் சபை உறுப்பினர்கள், நலன் விரும்பிகள், சமூக ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

மு. நாகேந்திரராசா, தலைவர்.
டாக்டர் செ.அம்பிகைபாகன், செயலாளர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபை.
2011.05.12

(சி/574857)

## கண்ணீர் அஞ்சலி



**மகேந்திரசெல்வம் சுரேன்**

(டொட் லைன் கலர் லாப் ஊழியர்)

எம் ஊழியனின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

டொட் லைன் கலர் லாப் உரிமையாளரும் ஊழியர்களும்.

(சி/031)

## மருதங்கேணியில் நிரந்தர வீடுகள்

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள 350 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் மற்றும் வாழ்வாதார உதவிகள் வழங்கும் திட்டத்தை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் அமுல்படுத்தவுள்ளது.

இந்தப் பெரியளவான திட்டத்தை அமுல்படுத்துவதற்கான அனுமதியை ஜனாதிபதி செயலணி கடந்த மார்ச் மாதம் வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் 198 ஆயிரம் மில்லியன் ரூபா நிதியில் 350 நிரந்தர வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களின் பங்களிப்புடனே இந்த வீடுகள் நிர்மாணித்து வழங்கப்படவுள்ளன.

அத்துடன் இந்த 350 பயனாளிகள் குடும்பத்துக்கும் தலா 35 ஆயிரம் ரூபா பெறுமதியில் வாழ்வாதார உதவி வழங்கப்படவுள்ளன.

ஆழிப்பேரலை மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களே இந்த உதவித் திட்டங்களின் மூலம் பயனடையவுள்ளனர். (ம-14-4)

### வேலைக்கு ஆள் தேவை

கைதடியில் உள்ள லங்கா எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு பின்வரும் வேலைகளுக்கு ஆள்கள் தேவை.
1. லிகிதர் (பணத்தைக் கையாள்பவர்)
2. எரிபொருள் நிரப்புநர் (பம்பர்)

தொடர்புகள் கடிதம் மூலமாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
லங்கா எரிபொருள் நிரப்பு நிலையம், கைதடி.

### தவறிவிட்டது

செல்வி குகப்பிரியா கிருபானந்தசர்மா என்பவருடைய NP. V.C. 0950 என்னும் தொடர் இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் ஆவணங்களான காப்புறுதிப்பத்திரம் மற்றும் வரிப்பத்திரம் ஆகியன கடந்த 12.05.2011 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க் காணும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
தொ.பே: 0778702615

### விற்பனைக்கு

திருநெல்வேலி சந்திக்கு அருகில் பலாலி வீதியில் வடக்கு பக்கமாக மடத்தடி ஒழுங்கை (Garage ஒழுங்கை) இல் 2 2/3 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0112366175, 0777268668

## கண்ணீர் அஞ்சலி



புங்குடுதீவு விவாக பிறப்பு இறப்பு பதிவாளர் திருமதி தேவிகா ஸ்ரீகாந்தன் அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி மங்கையர்க்கரசி நமசிவாயம்**
அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் சங்கம், யாழ்.மாவட்டம்.

## ஓராண்டு மறையாத நினைவலைகள்

மலர்வு 13 . 03 . 1944



உதிர்வு 27 . 05 . 2010

**அமரர் வைரமுத்து மாணிக்கவாசகர்**
(மெக்கானிக் வாசையா)
திதி: 16.05.2011 (திங்கள்)

**ஓராண்டு சென்றாலும்- அப்பா**
**உங்கள் நினைவுகள்**
**ஓயாத அலைகளாக மோதுதப்பா**
**எம்மோடு இருந்த காலங்களில்**
**எமக்காக உங்களை அர்ப்பணித்தீர்கள்**
**மீண்டும் உங்கள் அன்பையும்**
**அரவணைப்பையும் அறிவுரைகளையும்**
**கேட்கும் காலம் கிடைத்திடுமா என்று**
**ஏங்குகின்றோம்; தவிக்கின்றோம்**

இன்று (16.05.2011) திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

2ஆம் குறுக்குத்தெரு,
தெனிப்பிள்ளையார் கோயிலடி, பருத்தித்துறை.
தொடர்பு:- 0776682108

குடும்பத்தினர்.

(4258)(41,20,25)

# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம் செட்டியார்

*(இளைப்பாறிய அதிபர், யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை, ஆனைக்கோட்டை)*
*(பரிபாலகர், சிதம்பர சுப்பிரமணியர் சுவாமி கோயில், கோவிலாக்கண்டி)*



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம் செட்டியார் 13.05.2011 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகக் கொண்ட செல்லத்துரை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் செட்டியாரின் அருமை மனைவியும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், யோகம்மா மற்றும் பரமேஸ்வரி, தவமணிதேவி, பத்மாதேவி, கமலாதேவி,மகாலிங்கம், பரஞ்சோதிலிங்கம், இலங்காதேவி ஆகியோரின் சகோதரியும் கமலாவதி(U.K), விமலாவதி (கனடா), சிதம்பரசுப்பிரமணியம் செட்டியார்(U.K), சிவனேசன் செட்டியார் (சுவிஸ்), குகசேனன்செட்டியார்(U.K), பரதன் செட்டியார்(U.K), லீலாவதி, சிவஞானவதி ஆகியோரின் அன்புத் தாயும் அன்னலிங்கம், விஜயகுமாரன், சாந்தினி, காந்திமதி, கௌரி, சாமளா, சிவமூர்த்தி, புஸ்பரட்ணம் ஆகியோரின் மாமியும் நிசாந், விதூசன், ஜெம்மியா, அபிகீத், அஷ்ணவி, சுவாஸ்ரிக், சேயோன், ரிசிகேஷ், திவ்யன், நிதிஷா, தான்யா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.05.2011) செவ்வாய்க்கிழமை மு.ப 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கொக்குவில் மேற்கு.**

**தகவல்: பிள்ளைகள்.**

(4256)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுச் சக்திகள் முயன்று வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தநிலையில், ஜனாதிபதிக்கும், பாதுகாப்புச் செயலாளருக்கும், இலங்கை இராணுவத்தினருக்கும் எதிராக நோர்வேயில் வழக்கு ஒன்று தொடுக்கப்பட்டுள்ள விடயத்தையும் அவர் இதன்போது தெரிவித்தார்.

இலங்கை அரசுக்கு எதிராக மேற்கத்தைய நாடுகள் மேற்கொண்டு வரும் செயற்பாடுகளுக்கு இலங்கையர்கள் சிலரும் ஆதரவளிக்கின்றனர் என்றும் அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார்.

## உயர்தரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கச் சம்மேளனம் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அதன் தலைவர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, பல்கலைக்கழகங்களில் நடவடிக்கைகள் கிரமமாகவே இடைநிறுத்தப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

விரிவுரையாளர்கள் தமது ஒற்றுமையான பலத்தை வெளிக்காட்டியுள்ளனர். அதனைப் பயன்படுத்தி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள உரிய அதிகாரிகளுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனூடாகத் தமது சேவையைப் பெறும் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கையைப் பாதிப்படையச் செய்வது எமது நோக்கமில்லை - என்றும் அவர் தெரிவித்தார்.

**விசேட இறுதிக்கருத்தரங்குகள்**
நாளை (17/5), நாளை மறுதினம் (18/5)
காலை 9.00 மணிதொடக்கம் 4.00 மணிவரை
**SLEAS (யூன் 4 பரீட்சை)**
பொது உளச்சார்பு, கிரகித்தல், விடய ஆய்வு மாதிரி வினாத் தாள்கள் மீட்டல்
**SLAS (மே. 21, 22 பரீட்சை)**
பொது உளச்சார்பு பொதுஅறிவு முகாமைத்துவ உளச்சார்பு. கட்டுரை மீட்டல்
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ். போதனா வைத்தியசாலை எதிரே.
தொடர்பு: 0212223382

**விற்பனைக்குண்டு**
28. ஸ்ரீ. தொடர் இலக்கம் கொண்ட Isuzu 250 Single Wheel டக் வாகனம் (தற்போது பாவனையிலுள்ளது)
உடன் விற்பனைக்குண்டு.
தேவை ஏற்படின் லீசிங் வசதி செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: 0212225051 0776544520

## 12 புலிகள் நாட்டைவிட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடப்பட்டுள்ளது என நோர்வேத் தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பிட்ட சில புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு அரசியல் தஞ்சம் பெற்றுக்கொள்வதற்கு நோர்வேத் தூதரகம் ஒத்துழைப்பு வழங்கியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை சர்வதேச மற்றும் நோர்வே சட்டங்களுக்கு உட்பட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டது என்று நோர்வேயினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தூதரக அதிகாரிகள் குறித்த நபர்களுக்காக விமானச் சீட்டுகளைக் கொள்வனவு செய்யவோ அல்லது அவர்களை விமான நிலையத்துக்கு அழைத்துச் செல்லவோ இல்லை என்று நோர்வேத் தூதரகம் தெரிவித்துள்ளது.

எவ்வாறெனினும் இலங்கை ஊடகங்களில் மொழிபெயர்ப்பு பிழை ஏற்பட்டதாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று இலங்கையில் உள்ள சில ஆங்கில ஊடகங்கள் சுட்டிக்காட்டி உள்ளன. (ஒ-சி)

## நிபுணர் குழு அறிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இரண்டு நாள்கள் விஜயம் மேற்கொண்டு நேற்று மாலை இந்தியா சென்றார்.

அவருடன் ஜனாதிபதியின் இணைச் செயலாளர் சஜின் டி.வாஸ் குணவர்தன உள்ளிட்ட உயர்மட்டக் குழு ஒன்றும் சென்றுள்ளது என்று வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ - மூன் தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக இந்திய அரசுக்கும் உயர்மட்ட அதிகாரிகளுக்கும் தெளிவுபடுத்தும் நோக்குடனேயே இலங்கைக் குழு இந்த விஜயத்தை மேற்கொள்கின்றது.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, பாதுகாப்புச் செயலர் பிரதீப் குமார், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர்மேனன் ஆகியோரைச் சந்தித்து இலங்கை உயர்மட்டக்குழு பேச்சு நடத்தும் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேவேளை, அமெரிக்கா, பிரிட்டன், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் நிபுணர் குழுவின் அறிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளதுடன் சர்வதேச விசாரணைகளையும் வலியுறுத்தியுள்ளன.

அதுமட்டுமின்றி சீனா, ரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகளும் ஐ.நாவுடன் இணைந்து செயற்படுமாறு இலங்கையை வலியுறுத்தியுள்ளன. (ஐ-ஒ-சி)

## இலங்கைக்கு ஆதர...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையொன்றை வெளியிடச் செய்வதற்கு பீரிஸ் முயல்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அவ்வாறான ஒரு கோரிக்கைக்கு இந்தியா இணங்கும் என்று எதிர்பார்க்க முடியாது என்றே இரு நாடுகளிலுமுள்ள ராஜதந்திரிகள் கருதுகிறார்கள். இலங்கையில் புலிகளை வெல்வதற்குப் பல வழிகளிலும் உதவி புரிந்த இந்தியா பின்னர் புறக்கணிக்கப்பட்டதாக அவர்கள் கருகிறார்கள்.

இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு தென்னிந்திய மாநிலமான தமிழ் நாட்டில் தேர்தலில் வெற்றி பெற்று பதவிக்குவந்துள்ள அ.தி. முகவின் அழுத்தம் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும்.

இலங்கையில் இரண்டாவது அலையொன்றை இப்போது உள்ள அரசமைப்புக்குள்ளேயே உருவாக்குவது தொடர்பாக பீரிஸ் இந்திய தலைவர்களுக்கு விளக்கமளிக்க விருக்கின்றார். (ப)

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்
Spoken English
பயிற்சிமையம்.
An ISO 9001:2000 Certified Company
veta
Experts in English Training


புதிய பிரிவுகள் ஆரம்பம்.

| யாழ்ப்பாணம் | | சாவகச்சேரி | | நெல்லியடி | |
|---|---|---|---|---|---|
| Sat, Sun | 7.30 a.m. | Sat, Sun | 9.30 a.m. | Sat, Sun | 4.30 p.m. |
| Mon, Wed, fri | 7.30.a.m. | Mon,Wed | 9.30 a.m. | Tue,Thu | 3.30 p.m. |
| Tue, Thu | 5.00 p.m. | | | Tue,Thu | 5.00 p.m. |

UK Student Visa , Settlement Visa மூலம் UK செல்வதற்கான British High Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட City &Guilds இன் கற்கை நெறியை எமது நிறுவனத்திலேயே கற்று, ஆங்கிலப்பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும். City & Guilds
DMI COMPUTER EDUCATION
No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403
M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021-226 2470
No.174, கண்டி வீதி. HNB அருகில் சாவகச்சேரி. Tel.:021-227 0243

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 21 |  | 16 |
| ★ | | ★ |
| 03 | | 04 |
| ★ | | ★ |
| 1953 | | 2011 |

**அமரர் சின்னத்துரை குணபாலசிங்கம்**
திதி: சதுர்த்தசி

அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (16.05.2011) அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (சி/034) குடும்பத்தினர்.

STR COMPUTER SYSTEM
384, Navalar Road, Nallur, Jaffna.
Tel: 222 4459, 0774192275, Fax :222 4460.
CERTIFICATE IN INTERNET TECHNOLOGY
Chatting, Dawnloding, Web & E-Mail Address Creating, Face Book, Video Call, Net Call என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.
8 STUDENTS IN A BATCH
Ms Office, DTP, Hardware Technology, Kids Program போன்ற புதிய பிரிவுகளும் ஆரம்பமாகவுள்ளன, பாடசாலை மாணவர்கள் தொழில் புரிபவர்களுக்கென விசேட வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.
சான்றிதழ்கள் அனைத்தும் பரீட்சை முடிவுகளின் பின்னர் தலைமைக் காரியாலயத்தினால் வழங்கப்படும்.
DURATION 1 MONTH, RS. 1000/-
கைலச பிள்ளையார் கோவிலுக்கு அருகில்

## 70 வீத சாட்சியங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆராயப்பட்டுள்ளன. எஞ்சிய 70 வீதமான சாட்சியங்களை ஆராய்ந்து இறுதி அறிக்கை தயாரிப்பதற்காகவே நல்லிணக்க ஆணைக்குழுவின் காலம் மேலும் ஆறு மாத காலத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நீடிக்கப்பட்டுள்ளது என்று நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடக இணைப்பாளர் லக்ஷ்மன் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்பட்ட சாட்சியப் பதிவுகளைக் கொண்டு இறுதி அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், கிடைக்கப்பெற்ற சாட்சியங்களில் சுமார் 30 வீதமானவையே இறுதி அறிக்கைக்காக ஆராயப்பட்டுள்ளன. எஞ்சிய 70 வீதமான சாட்சியங்களை ஆராய்வதற்கும், இறுதி அறிக்கை தயாரிப்பதற்கும் காலம் போதாத காரணத்தால் நல்லிணக்க ஆணைக்குழுவின் காலத்தை நீடிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதனையடுத்து அதற்கான அனுமதியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கியுள்ளார்.

அத்துடன், கிடைக்கப் பெற்ற சாட்சியங்கள் ஆராயப்படும் போது அதில் ஏதும் விளக்கங்கள் தேவைப்பட்டால் சம்பந்தப்பட்ட சாட்சியாளரை அழைத்தோ அல்லது சாட்சியாளரிடம் சென்றோ மீண்டும் சாட்சி பதிவு செய்யப்படும். அல்லது சாட்சியங்களில் விளக்கம் கோரப்படும்.

அதேவேளை, இந்த ஆறு மாத காலப் பகுதியில் நல்லிணக்க ஆணைக்குழு வேறு எவரிடமும் புதிய சாட்சியங்களைப் பதிவு செய்யாது - என்று தெரிவித்தார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழு அறிக்கைக்குப் பதிலளிப்பது தொடர்பாக நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடக இணைப்பாளர் லக்ஷ்மன் விக்ரமசிங்கவிடம் வினவிய போது -

ஐ.நாவின் நிபுணர் குழுவின் அறிக்கையை நாங்களும் வாசித்தோம். ஆனால், அதற்குப் பதிலளிக்கும் கடப்பாடு எங்களுக்கு இல்லை. அந்த அதிகாரமும் எங்களுக்கு வழங்கப்படவில்லை.

அத்தோடு, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஆகியோருக்கு நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு முன்பாகச் சாட்சியமளிப்பது தொடர்பாகக் கடிதம் அனுப்பி வைத்தோம். ஆனால் அவர்களிடம் இருந்து இன்று வரை அதற்கான உரிய பதில் கிடைக்கவில்லை - என்றார்.

## மரண அறிவித்தல்கள்

### *சின்னத்தம்பி தங்கம்மா*



தொட்டிலடி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தங்கம்மா நேற்று (15.05.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கிட்டினர்- தெய்வானை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் சுப்பிரமணியம், இராசலிங்கம், லீலாவதி, புனிதவதி, துரைராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சரஸ்வரசுந்தரி, காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, தனேந்திரன் மற்றும் தில்லையம்பலம், கோபாலசுந்தரி ஆகியோரின் மாமியும், தேவமலர், தெய்வேந்திரன், தேவரூபன், தேவநேசன், தேவசீலன், மாலினி, மைதிலி, கவிதரன், மதிச்சந்திரன், பாமினி, விஜயரஞ்சினி, மதிவிஜியன், மதிச்செல்வி, காண்டீபன், வசந்தி, அருள், மாலதி, சிவநேசன், தவேந்திரன், நளினி, றோமதி, கிருஸ்ணா, யுகன், பகீரதி, கோபிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2011) திங்கட்கிழமை 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை விளாவெளி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொட்டிலடி,*
*சங்கானை* (4267) *தகவல்:* குடும்பத்தினர்.

### *கதிரவேலு செல்வரத்தினம் (பிள்ளையார்)*



இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு செல்வரத்தினம் (பிள்ளையார்) 14.05.2011 சனிக்கிழமை சுவிற்ஸர்லாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - செல்வி தம்பதியரின் அன்பு மகனும் சாந்தினியின் அன்புக் கணவரும் சதானா, சர்மிளா, சானுஜா ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற தவமணி மற்றும் நாகேஸ்வரி கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இலட்சுமணன், இரத்தினம் மற்றும் தங்கமலர் ஆகியோரின் மைத்துனரும் மாணிக்கம் - பார்வதியின் மருமகனும் லலிதா, சுகந்தினி, புஸ்பராதா, சதீஸ் குமார் ஆகியோரின் மைத்துனரும் கந்தசாமி, மோகனதாஸ், செல்வரட்ணம், ஸ்ரீரஞ்சிதமலர் ஆகியோரின் சகலனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளைமறுதினம் (18.05.2011) புதன்கிழமை அன்று சுவிற்ஸர்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். தகவல்:

இணுவில் கிழக்கு, இணுவில். (4265) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவுவதற்கான சாத்தியம் உள்ளது.

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு ரூபா 83 லட்சம் செலவில் 'லிப்ட்'

## மின்சாரசபையிடம் நிர்மாணப் பொறுப்பு

யாழ்ப்பாணம்,மே16

யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளர் விடுதிகள் (வார்ட்டுகள்) அமைந்துள்ள நான்கு மாடிக் கட்டடத்துக்கு 83 லட்சம் ரூபா செலவில் 'லிப்ட்' வசதி அமைக்கப்படவுள்ளது.

'லிப்ட்' அமைக்கும் பொறுப்பு இலங்கை மின்சார சபையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கான நிதியும் மின்சார சபைக்கு வழங்கப்படவுள்ளது.

'லிப்ட்' அமைப்பதற்கான ஆரம்பக் கட்டப் பணிகளை மேற்கொள்வதற்கு மாத்திரம் மின்சாரசபைக்கு 6 மாதங்கள் வரை பிடிக்கும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ். ஸ்ரீபவானந்தராஜா.

குறித்த மாடிக்கட்டடத்துக்கு பல வருடங்களாக 'லிப்ட்' வசதி அமைக்கப்படாதமையால் வைத்தியசாலைப் பணியாளர்கள் மற்றும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இது பற்றிக் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ். ஆஸ்பத்திரிக்கு 'லிப்ட்' வசதி சம்பந்தமாகக் கொழும்பிலுள்ள அதிகாரிகளிடம் பல தடவைகள் எடுத்துக் கூறியிருந்தோம். தற்பொழுதுதான் அதற்குரிய தீர்வு கிடைக்க வழி ஏற்பட்டுள்ளது. இதற்கான நிதி முழுமையாகக் கிடைத்த பின்னரே ஆரம்பக் கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இதற்கு 6 மாதங்கள் வரை தேவைப்படும் என்று மின்சார சபையினர் அறிவித்துள்ளனர்.

'லிப்ட்' அமைப்பதற்கான சில உபகரணங்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்-என்றார்.

இந்த மாடிகளில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான 12 விடுதிகள் உள்ளன. அந்த விடுதிகளில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்படும் நோயாளர்களை வைத்தியசாலைச் சிற்றூழியர்களே மாடிப் படிகளினூடாகத் தூக்கிச் செல்கின்றனர் என்றும் பிரதிப் பணிப்பாளர் குறிப்பிட்டார். (ஒ-4)

# காணாமற்போன காளைகள் இறைச்சியாகின

கோப்பாய் மத்தியில் உள்ள வீடொன்றில் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு காளை மாடுகள் களவாடப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீடொன்றில் கட்டப்பட்டிருந்த காளை மாடுகள் காலையில் காணமற்போயிருந்தன. காணாமற்போன காளைகளைத் தேடியபோது பற்றைக் காணி ஒன்றினுள் அவற்றின் எலும்புகள், தோல் போன்ற எஞ்சிய உடற்பாகங்களே காணப்பட்டன.

காளைகளைக் களவாடியவர்கள் அவற்றை இறைச்சிக்காக வெட்டியுள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (72-319)

கூட்டமைப்பு எம்.பி. சரவணபவன் உட்பட

# ஆறுபேர் கொண்ட எம்.பிக்கள் குழு ஜேர்மனிக்கு இம்மாதம் சுற்றுப்பயணம்

வலி.வடக்கு, மே16

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று ஜேர்மனியின் பேர்லின் நகருக்கு இம்மாத இறுதியில் செல்லவுள்ளது. இந்தக் குழு நிர்வாகம் கல்விசார் சுற்றுப் பயணமாகவே ஜேர்மனிக்கு செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

'பிறட்செ எவேட் ஸ்ரெப்பெப்' என்ற நிறுவனத்தின் ஏற்பாட்டில் அரச மற்றும் எதிர்க் கட்சி உறுப்பினர்களைக் கொண்ட ஆறுபேர் இந்தக் குழுவில் இடம் பெறவுள்ளனர்.

இந்தக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சஜித் பிரேமதாசா, அரச தரப்பைச் சேர்ந்த சுமதிபால திலங்க, ஷாயுட் முகமட், புத்திக பத்திரன மற்றும் துமிந்த திசநாயக்க ஆகியோரே இடம்பெறவுள்ளனர்.

ஜேர்மன் நாட்டில் ஒருவார காலம் பயணத்தை மேற்கொள்ள உள்ள இந்தக் குழுவினர் ஜேர்மன் நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் சந்திக்கவுள்ளனர். அங்கு அரச நிர்வாகச் செயற்பாடுகளையும் இவர்கள் நேரடியாக அவதானிக்கவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (86)



வங்கியியல் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற இளம் வங்கியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. கலாநிதி டானியல் தியாகராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ஹேலிஸ் நிறுவன பொது முகாமையாளர் சி.அருள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (4-313)

# முதலமைச்சர் பதவியை ஏற்றதும் அடங்கிப் போவார் ஜெயலலிதா!

## இலங்கைக்குப் பாதிப்பு வராதாம்



கொழும்பு, மே 16

தமிழக மக்களின் பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் இன்று முதலமைச்சராகப் பதவி ஏற்ற ஜெயலலிதா ஜெயராம், அதன் பின்னர் அடங்கிப்போய் விடுவார் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜெயலலிதா முதலமைச்சர் என்பதால், இந்திய மத்திய அரசுடன் இசைந்து செல்லவே முற்படுவார் என்றும் அதனால் இலங்கைக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என்றும் பிரபல அரசியல் விமர்சகரான மொஹான் சமரநாயக்க அந்தப் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

தமிழக வாக்காளர்களின் மனங்களைக் கவர- அவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் ஒரே நோக்கத்தில்தான் அவர் இலங்கைக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டுவந்தார். ஜெயலலிதா நினைத்தவாறே பெரு வெற்றியும் ஈட்டிவிட்டார். இனி எல்லாம் சரியாகிவிடும்.

ஜெயலலிதா பதவியில் அமர்ந்ததும் மத்திய அரசுடன் இணைந்து செயற்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அதேசமயம் மத்திய அரசு இலங்கைக்கு எதிராக எதுவிதமான நடவடிக்கையும் எடுக்காது என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# தனியார்துறை ஊழியர் நிதியில் அரசு ஒருபோதும் கைவைக்காது

கொழும்பு, மே16

தனியார் ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகம் செய்வதற்காகத் தனியார் தொழில்துறை ஊழியர்களின் சேமலாபநிதி அல்லது ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றில் அரசு ஒருபோதுமே கைவைக்காது.

-இவ்வாறு தெரிவித்துள்ளார் தொழில் அமைச்சின் செயலாளர் டபிள்யூ.ஜே.எல்.யூ. விஜேவீர.

பொது மக்கள் எவரும் தமது சேமலாபநிதி அல்லது ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றை இழந்து விடுவோமெனப் பயம் கொள்ளத்தேவையில்லை. இந்த தனியார் ஓய்வூதியத் திட்டம் சுதந்திரமானதும் தனித்துவமானதுமான ஒரு நிதியத்தின் மூலமே அமுல்படுத்தப்பட உள்ளது.

இந்த ஓய்வூதியத்திட்டத்துக்கு தனியார்துறை ஊழியர்கள் தமது வேதனத்தில் இரண்டு சதவீதத்தையும், தொழில் கொள்வோர் இரண்டு சதவீதத்தையும் செலுத்துதல்வேண்டும். இதன் மூலம் கிடைக்கும் நிதியை மத்திய வங்கி கையாளும். தொழில் அமைச்சு இதனைக் கண்காணிக்கும்.

இதற்கென மேலதிகமாக நிர்வாகச் செலவுக்கென கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது. ஆனால், சிறுமை மனம் படைத்த சில அரசியல்வாதிகள் மக்களைத் தவறாக வழிநடத்துகின்றார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

# நிகழ்வுகள்

### கருத்தமர்வு

வண்ணை, மே16

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான யாழ். நிலையத்தினால் நடத்தப்படவுள்ள கருத்தமர்வு இன்று திங்கட்கிழமை முதல் பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

இன்று மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணிவரை நடைபெறவுள்ளது.

''மக்களுடைய வாழ்க்கையைக் கட்டியெழுப்புதல் -சமூக பொருளாதாரத்தை மேம்படுத்தலுக்கான கற்கை'' என்னும் கருத்தமர்வில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த அமலமரித் தியாகிகள் சபையின் சமூக சேவை நிறுவனங்களின் ஊழியர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

தமிழகத்தில் இருந்து வருகை தந்துள்ள கர்ணன் காமராஜ், திருமதி தமிழரசி ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கருத்தமர்வை நெறிப்படுத்துவரெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-160)

### பூர்ணிமா தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே16

புத்த பூர்ணிமா தினத்தை முன்னிட்டு யாழ். சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை செவ்வாய்க்கிழமை விசேட பூசை வழிபாடுகள், சொற்பொழிவுகள் ஆகியன நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் அதிகாலை 4.45 மணிக்கு நகர சங்கீர்த்தனமும் காலை 8.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி காயத்திரி மந்திரம், பஜனை என்பன இடம்பெறும்.

அதனைத்தொடர்ந்து மக்கள் வங்கியின் ஓய்வுபெற்ற பிரதி முகாமையாளர் இ.சிறீஸ்கந்தராஜா 'புத்தரின் போதனைகள்' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு வழங்குவார். தொடர்ந்து பிற்பகல் ஒரு மணிக்கு நாராயண சேவையுடன் நிகழ்வுகள் நிறைவு பெறும். (ற-313)

### அபிவிருத்திச்சங்கப் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே.16

சாவகச்சேரி வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் மு.நாகேந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்துக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார். (ற-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேர்வினின் தற்கொலைப் படை; அரசுக்குச் சம்பந்தமில்லையாம்

ஐ.நா. நிபுணர்குழுவுக்கு எதிராக ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக தற்கொலைப் படைத்தாக்குதல் நடாத்தத் தயாராக இருப்பதாக அமைச்சர் மேர்வின் சில்வா வெளியிட்ட கருத்தை அவரது தனிப்பட்ட கருத்தென அரசு நிராகரித்துள்ளது.

ஐ.நா. நிபுணர்குழு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு பான் கீ மூன் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் துணிவாராயின் அவருக்கு எதிராக தனது தலைமையில் தற்கொலைத் தாக்குதலை மேற்கொள்வதற்காகக் குழுவொன்று தயார் நிலையில் இருப்பதாக அமைச்சர் மேர்வின் சில்வா அண்மையில் அறிவித்திருந்தார்.

ஆயினும் அவரது கருத்தை அரசு பெரிதாக கருத்தில் எடுக்கவில்லை என்று தெரியவருகின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மகாநாடொன்றின் போது அமைச்சர் மேர்வின் சில்வா போன்றே ஐ.நா. அறிக்கைக்கு எதிராக கையொப்பவேட்டையில் களம் இறங்கியிருக்கும் மற்றொரு அமைச்சரான தனியார் போக்குவரத்துச் சேவை அமைச்சர் சி.பி.ரத்னாயக்க தெரிவிக்கையில், ஜனாதிபதிக்காக தற்கொலைப்படையை தயார் செய்துவைத்துள்ளதாக மேர்வின் சில்வா கூறிய கருத்து அவரது தனிப்பட்ட கருத்தாகும். இந்தக் கருத்துக்கும் அரசுக்கும் எந்தவிதமான சம்பந்தமில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.

மேலும் நிபுணர்குழுவின் அறிக்கைக்கு எதிராக ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் 18 பேரை தற்கொலைப் படையாக தயார் செய்து வைத்துள்ளதாக பொதுமக்கள் தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளாரே, அமைச்சர் மேர்வின் சில்வாவின் இந்த கருத்தை அரசு ஏற்றுக் கொள்கிறதா என அமைச்சர் சி.பி.ரத்னாயக்கவிடம் ஊடகவியலாளர்கள் வினாத் தொடுத்தபோது அதனை அவர் மறுத்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக பொதுமக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்டுள்ள கையெழுத்துக்களை வெசாக் பண்டிகை முடிவுற்ற பிறகு ஐ.நா சபைக்கு சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(தமிழ்வின்) (10)

# தொற்றாத நோய்களின் பரவல் நகர்ப்புற மக்களிடம் அதிகரிப்பு

தொற்றாத நோய்களின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு வினைதிறனான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் 2025 ஆம் ஆண்டளவில் நகர்புற மக்களிடையே இந்த நோய்களின் பரவல் 75 சதவீதமாக அதிகரிக்கும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் நடைபெற்ற சுகாதார அமைச்சர்களின் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நீரிழிவு, புற்றுநோய்கள், சிறுநீரக நோய்கள், உயர் இரத்த அழுத்தம் மற்றும் மன அழுத்தம் என்பனவே அதிகமாக காணப்படும் தொற்றா நோய்கள் ஆகும்.

தற்போதைய நிலையில் நகர்புறங்களில் 50 சதவீதமானோரும் கிராமப் புறங்களில் 10 சதவீதமானோரும் தொற்றாத நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

வருடாந்தம் தொற்றாத நோய்களால் இறப்போரின் எண்ணிக்கை சுமார் 126,000 ஆகும் எனவும் அமைச்சர் சிறிசேன தெரிவித்துள்ளார்.

(தமிழ்மிரர்)(10)




படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான தர்மரட்ணம் சிவராம் மற்றும் ஐயாதுரை நடேசன் ஆகியோரின் நினைவுப் பேருரை இலங்கை ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்றது. இதில் ஊடகவியலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (தமிழ்மிரர்)(10)

## புனர்வாழ்வுப் பயிற்சி பெற விரும்பும் முன்னாள் போராளிகளுக்கு அழைப்பு

புனர்வாழ்வு பயிற்சி பெறாத முன்னாள் போராளிகள் இப் பயிற்சி பெறுவதற்காகப் புனர்வாழ்வு நிலையங்களில் இணைய முடியும் எனப் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுனந்த ரணசிங்க தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் புனர்வாழ்வு பெற விரும்புபவர்கள் அருகிலுள்ள புனர்வாழ்வு நிலையத்தில் தங்களது பெயர்களை பதிவுசெய்ய முடியும் என அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறு இணைபவர்கள் நீதிவான் அனுமதியுடன் புனர்வாழ்வு நிலையத்தில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என மேஜர் ஜெனரல் சுனந்த ரணசிங்க தெரிவித்தார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது கைதுசெய்யப்பட்ட மற்றும் சரணடைந்தவர்களுக்கு வழங்கப்படுகின்ற பயிற்சிகளை போன்ற பயிற்சிகள் இவர்களுக்கும் வழங்கப்பட்டு, புனர்வாழ்வளிக்கப்பட்டவர்கள் என்ற சான்றிதழ்களும் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது கைதுசெய்யப்பட்ட மற்றும் சரணடைந்தவர்களுக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள ஒன்பது புனர்வாழ்வு நிலையங்களில் புனர்வாழ்வளிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (தமிழ்மிரர்)(10)

இணையச் செய்திகள்

## புலம்பெயர் நாடுகளில் நினைவேந்தல் நிகழ்வுகள்

முள்ளிவாய்க்கால் இறுதிப்போரின் இரண்டாம் வருட நினைவை முன்னிட்டு புலம்பெயர் நாடுகளில் நினைவேந்தல் நினைவு பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மே மாதம் பன்னிரெண்டாம் திகதி தொடக்கம் பதினெட்டாம் திகதிவரை நினைவேந்தல் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனை முன்னிட்டு ஆலயங்களில் விசேட ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளும் பொதுமண்டபங்களில் நினைவுச் சுடரேற்றும் வைபவங்களும் நடைபெற்று வருகின்றன. ஏராளமான புலம்பெயர் தமிழ்மக்கள் இந்த நிகழ்வுகளில் உணர்வுபூர்வமாகப் பங்கேற்றுவருவதாகக் கூறப்படுகின்றது. (தமிழ்வின்)(10)

# சர்வதேச நாணய நிதியப் பணிப்பாளர் சிக்கினார் பாலியல் குற்றச்சாட்டில்!

சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநர் டொமினிக் ஸ்ட்ரோஸ் கான், பாலியல் வன்முறைக் குற்றச்சாட்டின் காரணமாக நியூயோர்க்கில் வைத்து நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹோட்டலொன்றில் வைத்து 32 வயதான பணிப்பெண் ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக டொமினிக் ஸ்ட்ரோஸ் கான் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

62 வயதான டொமினிக் ஸ்ட்ரோஸ் பாரிஸ் நோக்கி செல்லவிருந்த விமானமொன்றில் முதல் வகுப்பில் இருந்தபோது, அவ்விமானம் புறப்படுவதற்கு சில நிமிடங்களே இருந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக நியூயோர்க் பொலிஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இக்கைது பிரான்ஸில் அரசியலிலும் சர்ச்சையை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த வருடம் நடைபெறவுள்ள பிரெஞ்சு ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி நிக்கலஸ் சார்கோஸியை எதிர்த்து டொமினிக் ஸ்ட்ரோஸ் கான் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஸ்ரோஸ் கான் இத்தேர்தலில் சார்கோஸியை தோற்கடிக்கக்கூடும் என கருத்துக்கணிப்புகள் வெளிப்படுத்துகின்றன.

2007 ஆம் ஆண்டு சர்வதேச நாணய நிதியத்தின் உயர் பதவியை பெற்ற பின்னர் அவர் ஒழுங்கீனக் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வது இது இரண்டாவது தடவையாகும்.

பொருளாதாரப் பேராசிரியரான அவர் பிரான்ஸின் முன்னாள் நிதியமைச்சர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புலிகள் மீதான போரை இந்திய அமைதிப் படை நிறுத்தாவிட்டால் தற்கொலை செய்துகொள்வேன்

## மிரட்டினாராம் பிரேமதாஸ

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை இந்திய அமைதி காக்கும் படையினர் (ஐ.பி.கே.எவ்.) நிறுத்த வேண்டுமென்ற தனது கோரிக்கையை 29.07.1989 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்றப்படாவிட்டால் தான் தற்கொலை செய்துகொள்ளப்போவதாக அப்போதைய ஜனாதிபதி ரனசிங்க பிரேமதாஸ அச்சுறுத்தினார் என இந்திய முன்னாள் உயர் ஸ்தானிகர் ஒருவர் எழுதிய நூலொன்றில் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் விசேட தூதுவர் பி.டி. தேஷ்முக்கிடம் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது என அந்நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியப் பிரதமரின் விசேட செய்தியொன்றை தெரிவிப்பதற்காக இத்தூதுவர் இலங்கைக்கு வந்திருந்தபோது ஜனாதிபதி பிரேமதாஸ தனது முன்னிலையில் இந்த அச்சுறுத்தலை விடுத்ததாகவும் இலங்கைக்கான முன்னாள் உயர்ஸ்தானிகர் லால் மல்ஹோத்ரா எழுதிய ''இலங்கையில் எனது நாட்கள்'' (My Days in Sri Lanka) எனும் நூலில் தெரிவித்துள்ளார்.

254 பக்கங்கள் கொண்ட இந்நூல் இலங்கையில் விஜித யாப்பா புத்தகசாலையில் விற்பனையாகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்திய அமைதிகாக்கும் படையை ஆக்கிரமிப்பு படையென பிரகடனப்படுத்தப் போவதாக அச்சுறுத்தியதாகவும் இந்நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் இந்தியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரை திருப்பியழைக்கப் போவதாகவும் அப்போதைய ஜனாதிபதி பிரேமதாஸ எச்சரித்ததுடன் இந்திய உயர் ஸ்தானிகர் மல்ஹோத்ராவும் இந்தியாவுக்கு திரும்பிச் செல்லலாம் எனக் கூறியதாக அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கால நிலையில் இலங்கை - இந்திய உறவு மிக மோசமான நிலையில் இருந்ததாகவும் படிப்படியாக இந்தியாவுக்கு எதிரான விரோதப்போக்கு அதிகரித்திருந்தாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையை நிறுத்தும்படி இந்திய அமைதிகாக்கும் படைக்கு உத்தரவிடுவதற்கு 9 தினங்களுக்கு முன்னர் இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் மல்ஹோத்ரா கூறியுள்ளார். (சி)



## வெசாக்கை முன்னிட்டு விசேட பாதுகாப்பு

கொழும்பு, மே 16

வெசாக் பண்டிகையை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயகொடி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் பௌத்தாலோக மாவத்தை, கங்காராமய, சம்போதி விகாரை ஆகிய வெசாக் வலயப் பகுதிகளில் கடும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

வெசாக் வலயங்களுக்கு பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் வருவார்கள் என நாம் எதிர்பார்க்கின்றோம். எனினும் வீதிகள் எதுவும் மூடப்பட மாட்டாது. விசேடமான போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை சிறைச்சாலையிலிருந்து தப்பியோடியோரில் மூவர் கைது

கொழும்பு, மே 16

திருகோணமலை சிறைச்சாலையிலிருந்து கடந்த மாதம் தப்பிச்சென்ற நான்கு கைதிகளுள் மூவரைத் திருகோணமலை துறைமுகப் பொலிஸார் நேற்றுக் காலை கைதுசெய்துள்ளனர்.

இதனைத் திருகோணமலை துறைமுகப் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி சீ.ஏ. நாரண்தனாவ 'உதயனு'க்கு உறுதிப்படுத்தினார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து திருகோணமலை, வெருகல் மற்றும் கிண்ணியா ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதல்களின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் பிரதேசத்தில் ஏற்பட்ட பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் திருகோணமலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய சிறை வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், கடந்த ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி இவர்கள் நால்வரும் சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-11)

# மு.காவின் கொள்கை பரப்புச் செயலராக சேகு இஸ்ஸதீன்

கொழும்பு, மே 16

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய கொள்கைப் பரப்புச் செயலாளராக அக்கட்சியின் முன்னாள் அமைச்சர் சேகு இஸ்ஸதீன் நியமிக்கப்பட்டுள்ளார் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 23 ஆவது பேராளர் மாநாடு நேற்று பிற்பகல் 2 மணி தொடக்கம் 5.30 மணிவரை வவுனியா புதிய நகர சபை மண்டபத்தில் கட்சித் தலைவரும், நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய கொள்கைப் பரப்பு செயலாளராக அக்கட்சியின் முன்னாள் அமைச்சர் சேகு இஸ்ஸதீன் நியமிக்கப்பட்டுள்ளார். நேற்று நடைபெற்ற கட்சியின் 23 ஆவது பேராளர் மாநாடு தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி மேலும் கூறியவை வருமாறு–

நேற்று நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸின் 23ஆவது பேராளர் மாநாட்டின் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய கொள்கைப் பரப்பு செயலாளராக அக்கட்சியின் முன்னாள் அமைச்சர் சேகு இஸ்ஸதீன் நியமிக்கப்பட்டார்– என்றார்.

# ஆமர் வீதியில் வாகன விபத்து; அவ்விடத்திலேயே ஒருவர் பலி

கொழும்பு, மே 16

கொழும்பு, ஆமர் வீதியில் இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் ஒருவர் பலியானார். இந்தச் சம்பவம் நேற்று மாலை 8.15 மணி யளவில் இடம்பெற்றது.

வீதியைக் கடக்க முற்பட்ட ஒருவரை தனியார் பஸ் ஒன்று மோதியதில் குறித்த நபர் அந்த இடத்திலேயே பலியானார்.

அதேவேளை, குறித்த நபரை மோதித் தள்ளிய பஸ் அந்த இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் சுமார் 40 வயது மதிக்கத்தக்கவர் என்று தெரிவிக்கப்படுகிறது. எனினும், அவர் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்தை வைத்தியசாலையில் ஒப்படைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(சி)

## இலங்கைக் கிரிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதியில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

பிரிட்டனின் தமிழ் இளையோர் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்டனர்.

'போர்க் குற்றம் புரிந்த இலங்கை அரசை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்து', 'தமிழர் இன ஒழிப்பு நாள் மே - 18' போன்ற சுலோ கங்கள் அட்டைகளில் எழுதப்பட்டிருந்தன.

அத்துடன், இலங்கை அரசின் போர்க் குற்றங்கள், இன ஒழிப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றை விளக்கும் துண்டுப் பிரசுரங் களும் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

(ஒ-சி)

## தமிழக முதலமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துடன் ஓ.பன்னீர்செல்வம், செங்கோட்டையன், ஜெயக்குமார் ஆகியோர் போயஸ் தோட்டம் சென்றனர்.

பின்னர் ஆளுநரைச் சந்தித்த ஜெயலலிதா, அ.தி.மு.க. சட்டப்பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தீர்மான நகலை அவரிடம் அளித்து, ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.

இதையடுத்து முதல்வராகப் பதவியேற்குமாறுஆளுநர் அவருக்கு அழைப்பு விடுத்தார்.

ஆளுநரின் அழைப்பைத் தொடர்ந்து ஜெயலலிதா இன்று நண்பகல் 12.15 மணியளவில் முதல்வராகப் பதவியேற்றுக் கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-சி)

## நாமலின் செயலர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாலை துப்பாக்கி பிரயோகம் மேற் கொள்ளப்பட்டுள்ளது என்று பெலியத்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெலியத்தை பகுதியில் உள்ள அவரின் வீட்டின் மீது நேற்று அதிகாலை இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பேலியத்தையிலுள்ள இவரின் வீட்டின் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் எவரும் காயமடையவில்லை. ஆனால் வீட்டின் ஜன்னல்கள் சேதமடைந்துள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என தென்மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் கிங்ஸ்லி ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

(ர)

## இலங்கைக்கு எதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலகிலுள்ள பெரும் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் இந்த நடவடிக்கைக்கு முன்னின்று ஆதரவு அளித்து வருகின்றன எனவும் தெரியவருகிறது.

வழக்குத் தொடரும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன எனவும், சில நாடுகளில் வழக்குத் தொடரப்பட்டு விட்டது எனவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-சி)

MyWay English இன் இரண்டு நாள் இலவச
ENGLISH WORKSHOP
ஆங்கிலம் பேசுவதற்கு தேவையான ஆங்கிலத்தின்
அமைப்புக்கள், பிரயோகங்கள், செயற்பாட்டு அமைப்புக்கள்,
பிறர்கூற்று வசனங்கள், "என்று" அமைப்புக்கள்,
இணைப்பு சொற்கள், Causative அமைப்புக்கள் உட்பட
அனைத்து விடயங்களும் கற்பிக்கப்படும்
காலம் : 17, 18 ஆம் திகதிகள் (செவ்வாய், புதன்)
பிரிவுகள் : 8.00 – 9.30, 10.00-11.30, 2.00-3.30, 4.00-5.30
(ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)
அனுமதி இலவசம்
கலந்துகொள்ளும் அனைவருக்கும் கலந்துகொண்டதற்கான சான்றிதழ், மற்றும் கற்றல் புத்தகம் முற்றிலும் இலவசம்
அரச, தனியார் அலுவலர்கள், ஆசிரியர்கள், வங்கியாளர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், A/L எழுதிய மாணவர்கள், இளைஞர், யுவதிகள் கலந்துகொள்ளலாம்.
MyWay English
182 - 1/5, Stanley Road, Jaffna
077 33 63 456

A/L 2013
வணிகக்கல்வி
S.பிரதீபன்
யூனிவேர்சல்
யாழ்ப்பாணம்.
சனி, ஞாயிறு 5.00pm
C.C.A
சுன்னாகம்
சனி, ஞாயிறு 7.30 am
எடிசன்
கிளிநொச்சி
திங், செவ் 4.00pm

CALL SERVICE
T.P : 021-222 4459, 0774192275
Computer,(Laptop, Desktop), TV, DVD Player, Monitor (LCD, CRT) Power Supply, UPS, Printer, உட்பட இலத்திரனியல் பொருட்களை உங்கள் இருப்பிடங்களுக்கு வந்து ஒரே நாளில் உத்தரவாதத்துடன் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்.
STR COMPUTER SYSTEM
384, Navalar Road, Nallur, Jaffna.

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் கந்தையா
(பழைய கண்டி, காரைநகர்)



காரைநகர், புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் (சிவன் கோயில் வீதி, காரைநகர்), கிளிநொச்சி, இரத்தினபுரத்தை வசிப்பிடமாகவும் தற்போது பழைய கண்டி, காரைநகரில் வசித்தவருமான திருமதி சிவபாக்கியம் கந்தையா நேற்று (15.05.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், சுப்பர் கணபதிப்பிள்ளை கந்தையா (ஓய்வுபெற்ற, குடியேற்ற உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், சிவசக்தி, சிவானந்தி, சிவரூபனின் (ரூபன் - பிள்ளையார் அருள் வண்ணச்சோலை - கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சி. சிவரூபன் (விவசாயப் போதனாசிரியர், கமநலசேவைகள் நிலையம், முத்துஐயன்கட்டு) அவர்களின் பாசமிகு மாமியும் சிவாநந்தியின் அன்புப் பேர்த்தியும் தங்கமுத்து (ஓய்வுபெற்ற அதிபர்), அன்னமுத்து, காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் ஜெகசோதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற துரைராசா கணபதிப்பிள்ளை, கனகரத்தினம், ரஞ்சிதசோதி, தவமணி, காலஞ்சென்றவர்களான சரஸ்வதி சபாரத்தினம் மற்றும் தங்கரத்தினம், நல்லையா, தருமலிங்கம் - பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச சபை) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2011) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு அவரின் தற்காலிக இல்லமான பழைய கண்டி காரைநகரில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணபதிப்பிள்ளை கந்தையா
(கணவர்)

பழைய கண்டி,
காரைநகர்.

(சி/030)

தக்ஷா றேடிங்
கட்டடப்பொருள்கள் (கல், மண், சிமெந்து, கொங்கிறீட் கற்கள்), மின்சாரப் பொருள்கள், பெயின்ட் வகைகள் யாவற்றையும் ஒரே கூரையின் கீழ் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள.
தக்ஷா றேடிங்
பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய்.
தொ.பே:- 021 223 0202, 077 8575158.

ஆர்க் என்ரப்பிறைசஸ்
1வருட உத்தரவாதத்துடன் சகல விதமான நீர் இறைக்கும் இயந்திரங்கள், மோட்டார்கள் 22900/= கையிருப்பு உள்ளவரை மட்டுமே
நம்ப முடியாத விலையில்.


150, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (49)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில்16.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.